# ஞானச்சுடர்

புரட்டாதி 2019

26ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**

**பொருள் :** தான் பிறரால் இகழப்படாமல் இருத்தலை விரும்புகின்றவன் பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ள நினையாதபடி தனது நெஞ்சைக் காக்க வேண்டும். (281)

**உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தாற் கொள்வே மெனல்.**

**பொருள் :** குற்றங்களை நெஞ்சால் நினைத்தலும் பாவம்; ஆதலால் பிறனொருவனது பொருளை அவன் அறியாதபடி வஞ்சித்துக் கொள்வோமென்று கூட நினைத்தலாகாது. (282)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

### இலங்கையானே

**கலிவிருத்தம்**



எண்ணி யெண்ணி யுருகு மடியார்
மண்ணில் வந்து பிறவா வண்ணம்
உண்ணின் றருளை யுதவும் நாதன்
எண்ணில் வளஞ்சே ரிலங்கை யானே. 03


போக்கும் வரவும் இல்லாப் புனிதன்
ஆக்கும் அழிக்கும் அவனி யெல்லாங்
காக்கும் அடியார் கவலை தீர்க்கும்
பூக்கும் இலங்கைப் பொன்னக ரானே 04

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 261



2019 புரட்டாதி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சைவ வாழ்வு | கு. சோமசுந்தரம் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -07 |
| வாசிப்பதால் மனிதன்... | ஐ.கோ. சந்திரசேகரன் | 08 -11 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 12 -14 |
| தீபாவளி | திருமதி பொ. திலகவதி | 15 -16 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 17 -23 |
| விலை மதிக்க முடியாத சொத்து | பூ.க. இராசரத்தினம் | 24 -25 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 26 -27 |
| முருகப்பெருமான் மீதான... | கௌ. சித்தாந்தன் | 28 -34 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 35 -36 |
| எல்லோரும் கொண்டாடும்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 37 -38 |
| ஔவையாரின் பாடற் சிறப்பு | மூ. சிவலிங்கம் | 39 -43 |
| புல்லாங்குழலூதி ... | கே.எஸ். சிவஞானராஜா | 44 -47 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 48 -51 |
| வாழ்வின் இலட்சியம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 52 -53 |
| சைவமும் தமிழும்... | திருமதி தி. இந்திரா | 54 -55 |
| துளசியின் மகத்துவம் | செல்வி ச. வர்ணி | 56 -57 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 58 -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் ஆவணிமாத மலருக்குரிய வெளியீட்டுரையினை யாழ் பல்கலைக் கழக இளைப்பாறிய மார்'ல் ஐ.கோ. சந்திரசேகரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமது உரையில் ஒரு ஆன்மீக சஞ்சிகை மாதம் தவறாது தொடராக 259 மாதகாலம் ஒரு மலர் 259 மலர் வெளிவந்து தற்போது 260ஆவது மலர் வெளிவருவதென்பது ஒரு சாதனையே. இவ்விடயத்தில் ஞானச்சுடர் முன்மாதிரியாகச் செயல்படுவது என்பது சந்நிதி வேலவனின் பெருங்கருணை என்றே கூறவேண்டும். ஞானச்சுடர் வெளிவந்த காலத்திலிருந்து இம் மலரைப் பெற்றுக்கொள்ளும் வாசகர் களில் நானும் ஒருவனாக இருக்கின்றேன். இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்களைப் பார்த்து நானும் ஒரு சில ஆன்மீக ஆக்கங்களை வழங்கி பேரவையால் கௌரவிக்கப்பட்டுள்ளேன். ஆலய வழிபாட்டுக்கு வந்த எனக்கு இம்மாத மலரை வெளியிட்டு வைக்கும் பணியைத் தந்த சந்நிதி வேலவனுக்கு நன்றி கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

இருநூற்றி அறுபது மாதகாலமாக மலரும் ஆவணிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், ஆசிரியருமாகிய திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஆசிரியர் தமது மதிப்பீட்டுரையினில், ஆன்மீகம் சேர்ந்த பணி என்பது முள்ளின்மேல் பட்ட சேலை போன்றது. அதனைக் கவனமாகக் கையாள வேண்டும். அத்தகைய பணியினைச் சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாகவே ஆச்சிரம செயற்பாடு எல்லோராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு அதன் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றார்கள். இவ்விடயத்தில் நானும் அடிமட்டத் தொண்டனாக இருப்பதுபற்றி பெருமைப்படுகின்றேன் என்று கூறி மலருக்குரிய மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

இன்று ஆச்சிரமத்திற்கு வந்த பொழுதுதான் இம்மலர் எனது கைக்குக் கிடைத்தது என்று கூறி முடிந்தளவு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

மாணவப் பருவம் என்பது மகிழ்ச்சியான பருவம். மகத்துவம் நிறைந்த பருவம். தான் நினைத்ததைச் சாதிக்கும் பருவம். கல்வி, விளையாட்டு, ஆராய்ச்சி கண்டு பிடிப்புகள் என்று எதிலும் சாதிக்கக்கூடிய தன்னம்பிக்கை நிறைந்த பருவம். இந்தப் பருவத்தில் சாதிக்க நினைக்கும் மாணவ மாணவிகள் ஏராளமானோர் உண்டு.

ஆனால் பல மாணவ மாணவிகள் இந்தப் பருவத்தை ஒருவித கட்டுப்பாடு களும் இன்றி சுதந்திரமாக இருக்கவேண்டிய பருவம் என நினைத்து விடுகின்றார்கள். வகுப்புகளுக்குச் சரியாகச் செல்லாமல் நண்பர்களுடனும், சிநேகிதிகளுடன் சினிமா தியேட்டர்கள், பூங்காக்கள் என ஊர் சுற்றுவதையே மாணவ பருவத்தில் செய்ய வேண்டும் என தவறான நினைப்புடன் இருந்து தங்களது வாழ்வைக் கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களது பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் பாட சாலைகளில் திறம்பட பயணித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறு மாணவ பருவத்து வாழ்க்கையை அனுபவிப்பதாகக் கூறிக் கொண்டு பாலியல் துஸ்பிரயோகம், போதைவஸ்து, களவு, கொலை போன்ற விடயங்களில் ஈடுபட்டு தம்மையும் அழித்து சமுதாயத்தையும் வேரறுக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுகின்றனர். இவற்றிற்கெல்லாம் மேலாக மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. அவர்களுக்குரிய நல்லொழுக்கங்களை பெற்றோர்கள் சிறுவயது முதல் புகட்ட வேண்டும். படிப்பில் இருந்து விலகிச் செல்வதைப்போல் தெரிந்தால் பெற்றோர் தங்களது பிள்ளை களுக்கு நல் ஆலோசனைகள் வழங்கி அவர்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச்செல்ல வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் ஒரு புறம் இருந்தாலும் ஒரு சில மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டின்மூலம் புதிய புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு புதுவிதக் கண்டுபிடிப்புகளை நாட்டிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய முயற்சிக்கு முன்மாதிரியாக விளங்கும் மாணவர்களைப் பாராட்டுவதோடு மற்றையவர்களும் அவர்கள்போல் வர முயற்சிக்கவேண்டும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

அடல்பு னைந்த வேலு மயிலு மென்றும் வாழி
யரிய தொன்று கூற வருகி ருந்து கேண்மின்
அளவில் பலகாய மோடாடி யண்ட
ரறிய விளையாட லாமுலி யொன்றில்
ஆசை வேறிலை யறுமுக வன் றிரு
வாணை மேருவை யடிதலை கண்டனம்
அகில லோகமு மடைவடை வேமுத
லருளி னோமது சிவனறி யாதல
அமையு மெனும்படி நின்றம நோரத
மவைமுழு துந்தரு வம்பத ராதுகொள்
ஆதியு முடிவுமி லாநந் தந்தரு
மாறிரு கரதல நாதன் றந்தவை
அவுஷத முளசில கிலுகி லுப்பைக
ளரசிலை நறுவிலி கரிய கக்கரி
அத்தி செம்பி ராகை முட்காவளை
துத்தி சங்க மோரி தழ்த்தாமரை
அவுரி கற்றாழை யொடுவைகு றிஞ்சிலி
சிவிறி கத்தாரி பொடுதலை சண்பகம்
ஆரைகொடு வேலி வேல்காஞ்சிரம்
வீரையிரு வேலி பேரீந்திலை
அமுக்குர வெருக்கிலை முருக்கிதழ் செருப்படை
யகத்தி தமரத்தை மதமத்தமொடு பித்திகை
ஆல மாத்தி சுடுக்கை கொடிக்கழல்
கோலி தேட்கடை நெய்க்கொடை வக்கணை

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. K. இராதாகிருஷ்ணன்**

(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**இராசையா குகதாசன்**

(யாழ்ப்பாணம்)

**சி. கனகசபை**

(யாழ்ப்பாணம்)

**அ. மகேந்திரராசா**

(மல்லாகம்)

**சி. செல்லையா**

(கரவெட்டி)

**M.S.K. மகேஸ்வரன்**

(கொக்குவில்)

**சி. சிவநேசன்**

(கொக்குவில்)

**வ. கதிர்காமநாதன்**

(சுண்ணாகம்)

**S. மகாதேவன்**

(உரும்பராய்)

**க. காசிநாதர்**

(நீர்வேலி)

**K.S. கணபதிப்பிள்ளை**

(கைதடி)

**தி. கோபாலகிருஷ்ணன்**

(புத்தூர்)

**உரிமையாளர்**

(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

**வே. தர்மராசா**

(பொதுமுகாமையாளர், சுன்னாகம்)

**செ. புவனேந்திரராசா**

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**

(இளை அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**ப. நடராசாக்குருக்கள்**

(ஆவரங்கால், புத்தூர்)

**இ. ராதாகிருஷ்ணன்**

(ஏழாலை மத்தி, ஏழாலை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால வீதி, கொக்குவில்)

**B.R. ரஞ்சன்**

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சி. லிங்கேஸ்வரி**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**

(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**

(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(நீர்வேலி)

**ஐ. ராமச்சந்திரா**

(லவ்லேன், உடுவில்)

சி. சகுந்தலாதேவி

(வங்களாலேன், மல்லாகம்)

அ. ராஜ்சங்கர்

(உரும்பராய்)

ம. நாகேஸ்வரி

(நவிண்டில்)

த. லதாசந்திரிக்கா

(மகாத்மா வீதி, நெல்லியடி)

க. நற்குணராஜா

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

செ. இராஜேஸ்வரி

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

ஜெயா

(உப அஞ்சல் அதிபர், நீர்வேலி)

த. பூபாலன்

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

கா.ஆ. சச்சிதானந்தம்

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

தினேஸ் கவிதா

(ஆவரங்கால்)

க. சிவசுப்பிரமணியம்

(கோப்பாய்)

நா. கமலநாதன்

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

செ. சோதிப்பெருமாள்

(சரஸ்வதி மஹால், இணுவில்)

சி. வேலாயுதம்

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

# சைவ வாழ்வு

– **திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

சைவம் சிவசம்பந்தமுடையது; சிவம் அன்பு சம்பந்தமுடையது. "அன்பே சிவம்" என்று உறுதிப்படுத்துகிறார் திருமூலர்.

**"அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

-திருமந்திரம் 270.

சைவநெறி சிவநெறியாக- அன்பு நெறியாக விளங்குகிறது. மனித நாகரிகம் தோன்றிய காலம்தொட்டு, இருந்து வரும் சமயம், சைவசமயம். சிவபெருமான் அதன் முழுமுதற் கடவுள். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்"; "மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல்" ஆகிய வாழ்க்கை நோக்கங்களை அடைவதற்கு; மனிதர்களுக்கு வழிகாட்டுவது சைவசமயம். அந்த வகையில், சைவம் ஒரு வாழ்க்கை நெறியாகவும் அமைந்துள்ளமை அது வாழும் சமயமாக அமைந்துள்ளமைக்கு முக்கிய காரணமாகும்.

மனிதன் வாழ்வாங்கு வாழ்தல் என்பது; சைவநெறியில் நின்று அதிலிருந்து இம்மியும் வழுவாது வாழ்தல் ஆகும்.

சைவநெறியானது அன்பு, கருணை, நீதி, மனிதநேயம், ஆன்மநேயம், நல்லொழுக்கம், நடுவுநிலைமை, சத்தியம், தர்மம், சாந்தி மற்றும் பிணக்குகள், வேற்றுமைகள் என்பவற்றைக் கடந்த விழுமிய நிலை ஆகியவற்றைத் தழுவியதாக அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பர் பெருமானின் அருள் வாக்கு. சைவம், தொண்டு நெறியாக விளங்குகின்றமைபற்றி, அப்பர் அடிகள் இவ்வாறு தெரிவிக்கிறார்.

பணி செய்தல், பிறர் நலம்பேணல், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை, கொல்லாமை, பொய்யாமை, புலாலுண்ணாமை, திருடாமை, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், பிறன்மனை நயவாமை, மனித விழுமியங்களை வாழ்வில் பேணுதல்- இவை வையத்துள் வாழ்வாங்கு வாழும் இலட்சணங்கள் எனச் சைவம் கூறும்.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற ஔவையாரின் திருவாக்கு, சைவ மரபினை ஒட்டியதாகும்.

சைவப் பண்பாடு என்பது தொண்டுப் பண்பாடு ஆக, மலர்ச்சி பெற்றமை பற்றிச் சேக்கிழார் தாம் இயற்றிய திருத்தொண்டர் பெரியபுராணத்தின்மூலம் விளக்கியுள்ளமை மனங்கொள்ளற்பாலது. மனந்தூய்மை, சொல் தூய்மை, செயல் தூய்மை என்பன தொண்டுப் பண்பாட்டின் அடிநாதம் ஆகும்.

சைவர்கள் இருவகையினர்:

1) உபாயச் சைவம் சார்ந்தவர்கள்.
2) உண்மைச் சைவம் சார்ந்தவர்கள்

உபாயச் சைவம் சார்ந்தவர்கள்; பிறப்புரிமையை மாத்திரம், அதற்குரிய தகுதிப்பாடாகக் கொண்டவர்கள்.

உண்மைச் சைவ சமயிகள்; பிறப்புரிமையுடன் அக ஒழுக்கம், புற ஒழுக்கம் உள்ளிட்ட சைவ அநுட்டானம், சாதனை, அனுபவம், என்னும் தகைமைகளையும் கொண்டவர்கள்; உண்மைச் சைவர்களாக வாழ்பவர்கள்.

சைவர்களாகப் பிறந்தால் மட்டும் போதாது. சைவ விழுமியங்கள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை வாழ்வில் கடைப்பிடித்து, ஒழுகி வரவும் வேண்டும். அப்போதுதான், அவர்கள் உண்மைச் சைவர்கள். அவ்வாறு வாழாதவர்கள், போலிச் சைவர்கள் ஆவர். சைவம் ஒரு வாழ்க்கை நெறி என்பதைச் சைவர்கள் தம் கருத்திற்கொள்ள வேண்டும். இவ்வுண்மையை உணர்ந்து, சைவ விழுமியங்கள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை வாழ்க்கையில் பேணிக் கடைப்பிடித்து ஒழுகிவரும்போதே உபாயச் சைவர், உண்மைச் சைவர்களாக வகுப்பேற்றம் பெறுவர்.

உண்மைச் சைவர்களாக வாழ்வதற்கு நாம் முதலில் நம் மனங்களில் படிந்திருக்கின்ற; அழுக்காறு, அவா, சினம், உலகப் பொருட்கள்மீது வைத்திருக்கும் கடும் பற்று, பயம், பீதி, பொய் போன்ற அழுக்குகளைக் களைந்து மனந்தூய்மை பெற வேண்டும். மனம் தூய்மை பெற்றுவிட்டால்; அங்கு தோன்றும் எண்ணங்கள் தூய்மையானவையாக அமைந்துவிடும். எண்ணங்கள் தூய்மை பெற்றுவிட்டால்; நமது சொல்லும் செயலும் தூய்மையானதாகிவிடும்.

நல்லன தீயன யாவற்றிற்கும் ஊற்றுக்கண் மற்றும் விளைவிடம் மனம்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். "மனமது செம்மையானால் மந்திரம், தந்திரம், மருந்து எதுவும் தேவையில்லை".

உண்மைச் சைவர்களாக, நாம் உயர்வு பெறுவதற்கு எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள், அநுட்டானங்கள், ஒழுக்கங்கள், சைவப் பயிற்சிமுறைகள் என்பவற்றைச், சைவம் வகுத்துத் தந்துள்ளது. எனவே, அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகி வருவதன்மூலம் நாம் உண்மைச் சைவர்களாக ஏற்றம் பெற முடியும். முயன்றால் முடியாததொன்றில்லை. உண்மைச் சைவர்களாக வாழ்வதற்கு நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டியது எமது தார்மீகக் கடமையாகும்.

உபாயச் சைவம் எமது பிறப்புரிமை. உரிமை, வாழ்வில் போற்றப்பட வேண்டியது. அந்த அடிப்படை உரிமையை மீறுதல் மகா குற்றம் ஆகும்.

உபாயச் சைவம் நிலையிலிருந்து உண்மைச் சைவம் நிலைக்கு உயருவதற்கு சிவத்துடன் சம்பந்தப்படுதல் இன்றியமையாததாகும். சிவத்துடன் சம்பந்தப்படுதல் என்பது; சிவமாந்தன்மையுடன் நாம் இணைதல் ஆகும்.

"அன்பே சிவம்"; "நீதியே சிவம்"; "உண்மையே சிவம்"; "செம்மையே சிவம்"; "நன்மையே சிவம்"; "அழகே சிவம்"; தூய்மையே சிவம்"

எனவே உண்மைச் சைவன்; அன்பு, நீதி, உண்மை, செம்மை, அழகு, நன்மை, தூய்மை என்பவற்றுடன் சம்பந்தப்பட்டு இருக்கிறான் என்பது உணரப்படவேண்டியது.

ஒரு சிறந்த சைவ சமயி; சமம்- கடவுளிடம் கருத்தைச் செலுத்துதல்; தமம்- புலன்களை அடக்குதல்; திதிஷை- துன்பங்களைப் பொறுத்தல்; தைரியம்- நாவை அடக்குதல்; தானம்- எவரிடமும் பகை கொள்ளாமலும் பிறர் தன்னைக் கண்டு அஞ்சச் செய்யாமலும் இருத்தல்; தவம்- ஆசையை விட்டு விடுதல்; வீரம்- ஆசாபாசங்களை வெல்லுதல்; சத்தியம்- பரம்பொருளைக் கண்டு மகிழ்தல்.

உண்மைச் சைவன்; கொல்லா அறம்; புலாலுண்ணாமை; பொய்யாமை; வெ.்.காமை, பிறன்மனை விழையாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, போதைப் பொருள்கள் மற்றும் புகைத்தல் என்பவற்றுடன் உறவுகொள்ளாமை; வரவின் மகளிர் விழையாமை; பேராசை, கடும்பற்று, சினம், உயர்வு- தாழ்வு மனப்பாங்கு, எதிர்ப்பால் கவர்ச்சி, வஞ்சம் என்னும் ஆறு தீயவற்றிலுமிருந்து விலகியிருத்தல் ஆகிய விரதங்களைக் காப்பவன். "காப்பது விரதம்", என்பது ஆன்றோர் வாக்கு.

மன அடக்கம், புலனடக்கம் என்பவற்றை இரு கண்களாகப் போற்றி; மனம், மற்றும் புலன் பொறிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனே உண்மைச் சைவன் ஆவான்.

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என்கிறார் திருமூலர். உண்மைச் சைவன், சிவம் சம்பந்தமுடையவன் என்பது இதிலிருந்து பெறப்படும் பொருள். "அன்பே சிவம்" என்று தெளிவாகக் கூறுகிறார் திருமூலர். எனவே எல்லா உயிர்கள்மீதும், அன்பு கொண்டிருப்பவனே உண்மைச் சைவன் என்பது இதிலிருந்து பெறப்படும் கருத்து ஆகும். சைவ வாழ்க்கைக்கு அரண் ஆகவும் அடித்தளமாகவும் அமைவது அன்பு என்பதை ஒவ்வொரு சைவசமயியும் உணர்தல் அவசியம்.

தனக்கு வருகின்ற துன்பம், துயர்கள், கவலைகள் ஆகியவற்றைப் பொறுத்தல்; சித்த சமாதானத்துடன் தாங்கிக்கொள்ளுதல்; அதேவேளை பிற உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடிய தீங்கு செய்யாதிருத்தல்; தமக்கு "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவர் வாக்கினைக் கடைப்பிடித்தல் ஆகியன உண்மைச் சைவனின் இலட்சணங்களுள் அடங்குவன.

உண்மைச் சைவன், இயம நியமங்களை வாழ்க்கையில் பேணிவருவதில் கண்ணுங் கருத்துமாயிருப்பான்.

***இயமம் என்பதில் அடங்குபவை:***

அஹிம்சை, சத்தியம், திருடாமை, நாணம், ஒப்புரவு, வெளவாமை, கடவுள் நம்பிக்கை, பிரமச்சரியம், மௌனம், உறுதி, சகிப்புத்தன்மை, அஞ்சாமை; அடக்கம், பொறை, எல்லாவற்றையும் சமன் செய்தல், பகிர்ந்துண்ணல், எதுவித குற்றமும் இல்லாமை, மது அருந்தாமை, காமம் இல்லாமை.

"கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய
வல்லான் பகிர்ந்து உண்பான் மாசு இலான் கள்காமம்
இல்லான் இயமத்து இடை நின்றானே.

-திருமந்திரம் 554.

*அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.*

"இயமம்" நிலையினை மேற்கொள்பவர்களின் செயற்பாடுகள் மேலே தரப்பட்டுள்ள திருமந்திரப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

*நியமம் என்பதில் அடங்குபவை:*

அகப்புறத்தூய்மை, இறை அருளோடு இருத்தல், உணவைச் சுருக்குதல், சாந்தமாக இருத்தல், சரியானவற்றையே செய்தல், வாய்மை பேசுதல்- காத்தல், நல்லவற்றை வளர்த்தல், காமம் இன்றி இருத்தல்; களவு, கொலை செய்யாதிருத்தல்.

**"தூய்மை அருள் ஊண் சுருக்கம் பொறை செவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே மற்று இவை**
**காமம் களவு கொலை எனக் காண்பவை**
**நேமி ஈர் ஐந்து நியமத்தன் ஆமே"**

-திருமந்திரம் 556.

நியமத்தின் பத்து அம்சங்கள் இம்மந்திரப் பாடலில் தரப்பட்டுள்ளன.

*நியமத்தின் மேலும் பத்து அம்சங்கள் பின்வருமாறு:*

இறைவனை நோக்கித் தவம் இயற்றுதல்; இறைவனின் நாமங்களை ஜெபம் செய்தல்; இறை ஆனந்தத்தை உள்ளே வளர்த்தல், இறைவனில் பரிபூரண நம்பிக்கை வைத்தல், தானம் செய்தல் இறைவனை நோக்கி ஆத்மார்த்த விரதம் அநுட்டித்தல்; மனம்- சித்தம் கடந்து இறை ஞானத்தைக் கேட்டல்; ஆத்மார்த்தமாகச் சிவபூசை செய்தல்; உயர்ந்த இறைஞானத்தை உள்ளே உருவாக்கல், இறைவனின் திவ்விய நாமங்களின் நினைவோடு இருத்தல், என்றும் நினைவோடும் வாழ்தல். -திருமந்திரம்.

உண்மைச் சைவர்கள் கொண்டிருக்கும் இலட்சணங்கள், தகைமைகள் பற்றி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான், தமது பெரியபுராண வசனம் என்னும் நூலின் முகவுரையில் குறிப்பிட்டிருப்பது நோக்கற்பாலது.

"சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய்; கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச் சான்றுரைத்தல், முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய்; குருலக்கணங்குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து, சிவதீட்சை பெற்றுக்கொண்டவர்களாய்; விபூதி-ருத்திராட்சதாரணம்; சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாட்சர ஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை முதலியனவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய், உள்ளவர்களே, சைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்".

இந்த உரைகல்லில், நாம் ஒவ்வொருவரும் எம்மை வைத்துச் சுய ஆய்வு செய்து உண்மைச் சைவர்களாக வாழ்கின்றோமா, என்பதை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 09. ஆனந்த பரவசம்

**91 தாராய் உடையாய் அடியேற் குன்தாள் இணையன்பு
பேரா வுலகம் புக்கார் அடியார் புறமே போந்தேன் யான்
ஊரா மிலைக்க குருட்டா மிலைத்திங் குன்றா எிணையன்புக்
காரா யடியேன் அயலே மயல்கொண் டழுகேனே.**

**ப-ரை:**

உடையாய்- என்னை ஆளாகவுடையவனே, அடியார் பேரா உலகம் புக்கார்- நின் மெய்யடியார்கள் மீளாவுலகமாகிய வீட்டுலகத்தினை அடைந்தனர்; யான் புறமே போந்தேன்- யான் அதற்குப் புறம்பாகிய இடத்தை அடைந்தேன்; ஊர் ஆ மிலைக்க குருட்டு ஆ மிலைத்து- ஊரிலுள்ள நல்ல பசு கனைக்க அதனைக் கேட்ட குருட்டுப் பசுவும் கனைத்தது போல; இங்கு உன் தாள் இணை அன்புக்கு ஆராய்- இவ்விடத்து இந்நிலையில் உனது திருவடியிணையைப் பெறுதற்குரிய மெய்யன்புக்கு என்ன தகுதியுடையேனாய்; அடியேன் அயலே மயல் கொண்டு அழுகேன்- நின் அடியவனாகிய யான் அவர் போன வழிக்குப் புறத்தே நின்று ஆசைப்பட்டு அழுவேன்; அடியேற்கு உன் தாள் இணை அன்பு தாராய்- ஆதலால் அடியேனுக்கு நின் திருவடி துணையைப் பெறுதற்குரிய மெய்யன்பினை எனக்குத் தந்தருளுக.

உடையவனே, நின் மெய்யடியார்கள் பேராருலகம் புக்கனர். யான் அதற்குப் புறம்பாகிய இடத்தினை அடைந்தேன். ஊரிலுள்ள நல்ல பசு கனைக்க அதனைக் கேட்ட குருட்டுப் பசுவும் கனைத்ததுபோல இவ்விடத்து உனது திருவடியிணையைப் பெறுதற்குரிய மெய்யன்புக்கு என்ன தகுதியுடையேனாய் நின் அடியவனாகிய யான் அவர் போன வழிக்குப் புறத்தே நின்று ஆசைப்பட்டு அழுவேன். ஆதலால் அடியேற்கு நின் திருவடித்துணையைப் பெறுவதற்குரிய மெய்யன்பினை எனக்குத் தந்தருள வேண்டும் என்பதாம்.

தாராய்- தருதி, முன்னிலை உடன்பாட்டு எதிர்கால வினைமுற்று. "தணியார் பாதம் வந்தொல்லை தாராய்" (சத 89) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. தாளிணையன்பு- தாளிணையைப் பெறுதற்கு ஏதுவாகிய மெய்யன்பு. அன்பு தாராய் என இயையும். உனக்குள்ள

அன்புந்தாராய்" (பிரார்த் 8) என அடிகள் அருளியமையுங் காண்க. பேராவுலகம்- மீளத் திரும்புதலில்லாத வுலகமாகிய வீடு. "பேராவுலகந் தந்து வந்தாட் கொள்வோனே" (ஆசைப்7) என வருதலும் காண்க. அடியார் பேராவுலகம் புக்கார் என மாறிக் கூட்டுக.

"பிரிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக் கீழ்
மறிவறி யாச் செல்வம் வந்து பெற்றார்"

(அடைக்கலப் 9)

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. பேராவுலகம் புகாமையின் புறமே போந்தேன் என்றார்.

ஊரா- ஊரிலுள்ள நல்ல பசு. மிலைத்தல்- கதறுதல். ஊராமிலைக்கக் குருட்டா மிலைத்து என்றது. ஊரிலுள்ள குருடல்லாத நல்ல பசு கதற அதனைக் கேட்ட குருட்டுப் பசுவுங் கதறியது போல என்றவாறு. நல்ல பசுவின் கதறல் தன் கன்றினை அழைக்கவோ உணவினைப் பெறவோ உதவும். குருட்டுப் பசுவின் கதறல் அவற்றை நோக்காது, நல்ல பசு கதறியதைக் கேட்டுக் கதறிய பயனற்றதாகும். அதுபோல என ஒரு சொல் வருவித்துரைக்கப் பட்டது.

நின் தாளிணை யன்பினையுடைய மெய்யடியார் நின்னைப் போற்றிப் பேராவுலகம் புக்காராக, அவர் புக்க வழிக்குப் புறமான வழியிற் போன யான் நின் தாளிணை அன்புக்கு என்ன உரிமையுடையேனாய்ப் புறத்தே நின்று அழுவேன். குருட்டாவின் கதறல் பயனின்றிப் போதல் போல என் அழுகையும் பயனற்றதாகும் என்பதாம். மிலைத்தல்- கதறுதல். இப்பொருட் டாதல் "இங்குன் தாளிணை அன்புக் காராய் மயல்கொண்டழுகேனே" என அடிகள் தமது அழுகை தாளிணையன்பாகிய பயனைத் தராமையைக் காட்டுதலால் நன்கு உணரப்படும். இவ்வாறே நம்மாழ்வாரும்,

"எப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கு மென்னும்
அப்படி யானும் சொன்னேன் அடியேன் குற்றிய தென்பனே"

(நம்மாழ்- திருவிருத்தம் 94) எனத் திவ்விய பிரபந்தத்தின் கண் கூறுதலுங் காண்க.

இதன்கண், நின்தாள் சேர்தற்குச் செய்யத்தக்கது யாதுமில்லை. இரங்கியருள வேண்டும் என்பதனால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

**92 அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல் சேர்ந்த**
**மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு**
**தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே**
**பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே.**

**ப-ரை:**

நின்பால் அன்பாம் மனம் அழல் சேர்ந்த மெழுகே அன்னாராய்- நின்னிடத்து அன்பு பொருந்திய மனம் அழலைச் சேர்ந்த மெழுகு போல உருகுபவராய்; மின் ஆர் பொன் ஆர் கழல்கண்டு- ஒளி பொருந்திய நின் பொன்போன்ற திருவடியைத் தரிசித்து; தொழுது உன்னைத்

தொடர்ந்தாரோடும் தொடராது- வணங்கி நின்னைப் பிரியாது தொடர்ந்தவர்களாகிய மெய்யடியவர்களோடும் தொடர்ந்து வரமாட்டாது; அழுகேன்- பிறபட்டுத் தனித்து நின்று அழுபவனாகிய யான்; என் கொண்டு உன்னைப் பணிகேன்- இனி எதனைத் துணையாகக் கொண்டு உன்னை வணங்குவேன்; பழுதே பிறந்தேன்- பயனின்றிப் பிறந்தவனானேன்; என்னைப் பிறவிப் பயனுடையவனாகச் செய்தருள வேண்டும்.

நின்னிடத்து அன்பு பொருந்திய மனம் அழலைச் சேர்ந்த மெழுகுபோல உருகுபவராய், நின் பொன்போன்ற திருவடிகளைத் தரிசித்து வணங்கி, நின்னைப் பிரியாது தொடர்ந்தவர்களாகிய மெய்யடியார்களோடும் தொடர்ந்து வரமாட்டாது. பிறபட்டுத் தனித்து நின்று அழுபவனாகிய யான், இனி எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு உன்னை வணங்குவேன்; பயனின்றிப் பிறந்தவனாவேன்; என்னைப் பிறவிப் பயனுடையவனாகச் செய்தருள வேண்டும் என்பதாம்.

அழுகேன் என்பது ஈண்டு அழுபவனாகிய யான் என வினையாலணையும் பெயராய் நின்றது. மனமாய் என்பதில் ஆய் என்னும் எச்சத்தைப் பிரித்து அன்னாராய் எனக் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது. அழல் சேர்ந்த மெழுகுபோல உருகும் மனத்தின் வினை அதனை உடையார் மேனின்றது. தொடர்ந்தார் என்பது பிரியாது தொடர்ந்து கதியடைந்தவர்களாகிய மெய்யடியார்களென வினையாலணையும் பெயராய் நின்றது. தொடராது- தொடரமாட்டாது. தொடராது அழுகேன் என மாறிக் கூட்டுக.

என் கொண்டு என்றது எதனைத் துணையாகக் கொண்டு என்றவாறு. அம்மெய்யடியார் போல அன்பாம் மனமாய் அழல் சேர்ந்த மெழுகுபோல உருகுந் தன்மையும் அவரை விடாது பின்தொடர்ந்து செல்லும் ஆற்றலும் இன்மையின் இனி எனக்குத் துணை பிறிதில்லை என்பார், "என்கொண்டு" என்றார். பழுதே பிறந்தேன்- பயனின்றிப் பிறந்தவனாயினேன். ஏ- தேற்றம். இனி, நின்பால் அன்பாம் மனமாய் அழமாட்டேனும் உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடரமாட்டாது பழுதே பிறந்தேனுமாகிய யான் என் கொண்டு உன்னைப் பணிவேன் எனவும் உரைக்கலாம். இவ்வுரையில் அழுகேன் என்பது அழமாட்டாதவனாகிய யான் எனத் தன்மை யொருமை எதிர்மறை வினையாலணையும் பெயராயும், பிறந்தேன் என்பது தன்மையொருமை இறந்தகால வினையாலணையும் பெயராகவும் கொள்ள வேண்டும்.

இதன்கண், அழுகேன் பழுதே பிறந்தேன் என்கொண்டுன்னைப் பணிகேன் என்றமையால் அழுபவனாகிய எனக்கு உற்ற துணையை உதவிப் பிறவிப்பயனுடையதாகச் செய்ய வேண்டும் என்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 88.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒக்ரோபர் | 11 | புர | 24 | வெள்ளி | கடையிற்சுவாமி |
| ஒக்ரோபர் | 28 | ஐப் | 11 | திங்கள் | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 11 | ஐப் | 25 | திங்கள் | திருமூலர் |
| நவம்பர் | 20 | கார் | 04 | புதன் | ஆறுமுகநாவலர் |
| நவம்பர் | 22 | கார் | 06 | வெள்ளி | மெய்ப்பொருளார் |

*வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே.*

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்

– **திரு ஐ.கோ. சந்திரசேகரன்** அவர்கள் –

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இந்த உலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளிச் செய்கின்ற ஐந்தொழில்களையும் புரிகின்றார். அவரது ஆளுமைக்குட்பட்ட புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகளே!

மனிதன் உலக வாழ்க்கைக்காகப் பல்வேறு தொழில்களையும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கல்விச் செல்வத்தைப் பயன்படுத்தினான். இந்தக் கல்விச் செல்வம் ஒன்றுதான் காலத்தால் அழியாத அருஞ்செல்வம். இக் கல்விதான் தம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வைப்பதோடு கௌரவமாகவும் தன்மானத்துடனும் பேரோடும் புகழோடும் நாம் வாழ வழிசமைக்கின்றது.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு. இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் படித்திருந்தால் மட்டும் போதாது. படித்தபடி ஒழுக வேண்டும். பொய் சொல்லக் கூடாது என்று படித்துவிட்டு சதா சர்வகாலமும் பொய் சொல்லியே வாழ்தல் கூடாது. நல்லதையே எண்ணி, நல்லதையே செய்து, நல்லபடி நடந்து உலகில் நாம் நல்லவர்களாக வாழ வேண்டும்.

வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி அழிப்பதற்கல்ல. இந்த உடம்பில் உயிர் இருக்கின்றபோதே நல்லனவற்றையெல்லாம் செய்துவிடவேண்டும். உடம்பிலிருந்து உயிரானது பிரிந்துவிட்டால் அதன் பிறகு மதிப்பே இருக்காது. மறுகணமே பிணத்தை எடுத்துப்போய் சுடலையில் வைத்துக் கொளுத்தி விடுவார்கள்.

இந்த மாயா உலகில் எது இல்லாமலும் வாழ்ந்து விடலாம். ஆனால் கல்வியறிவு இல்லாமல் வாழவே முடியாது. "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும்" தந்த எல்லாம் வல்ல பரம்பொருளாக பல்கோடி சூரியப் பிரகாசத்துடன் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் ஜோதியாக ஒளிரும் சிவபெருமானின் திவ்விய பேரருளால் எமக்கு இந்த மானிடப் பிறவி கிடைத்திருக்கின்றது. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். ஆதலால் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கின்ற நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பதற்கிணங்க இறைவனின் பேரருட் கருணைத் திறத்தினால் நாம் இத் தொல்லுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதிலும் கூன் குருடு செவிடு இல்லாமல் நல்ல ஆஜானுபாகுவான தோற்றத்துடன் ஊனமின்றி உத்தமராக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த அரிய வாழ்க்கை யார் தந்தது? எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமான் தந்தது. அந்த வகையில் நாங்கள் புண்ணியஞ் செய்தவர்களே!

பூர்வஜென்ம புண்ணியப் பேற்றி னாலேயே நாம் இந்த உலகில் மானிடராய்ப் பிறந்து மகோன்னதமாகவும் மங்களகரமாகவும் மகிழ்ச்சியாகவும் மனோரம்மியமாகவும் இன் பமே துய்த்து எந்நாளும் துன்பமே இல்லாமல் செவ்வனே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கு அடிப்படை அத்திவாரம் இட்டது கல் விச் செல்வந்தான்.

ஓர் அரசனுக்கு அவனுடைய நாட்டில் சகல மரியாதைகளும் மதிப்பும் தாராளமாகக் கிடைக்கும். கல்வியிற் சிறந்து நல்ல அறிஞர் களாக இருக்கின்ற அறிவாளிகளுக்கு சென்ற இடமெல்லாம் நல்ல சிறப்புக் கிடைக்கும். நாம் நன்கு கற்று நல்ல அறிவுள்ளவர்களாக ஆத்ம ஞானம் உள்ளவர்களாகத் திகழ வதற்கு வழி வகுத்துக் கொடுத்தது கல்விச் செல்வம் மட்டுந்தான்.

இந்தக் கல்வியை எமக்குக் கற்றுத் தந்த நல்லாசானை அதாவது குருவை நாம் மறக்கவே கூடாது. என்றும் எப்போதும் எந் நேரமும் மனதில் வைத்து வணங்க வேண்டும். அவர்களில்லையேல் நாம் இப்பூவுலகில் மதிப் புடனும் மரியாதையுடனும் நல்ல கௌரவத் துடனும் மிகுந்த பேரோடும் புகழோடும் வாழ முடியாது. அவர்கள் நல்ல முறையில் கல்விச் செல்வத்தை எமக்குக் கொடுத்தபடியால்தான் நாங்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்கின்றோம் என்று கூறின் மிகையாகாது. ஒரு மனிதனில் எவராவது மதிப்பும் மரியாதையும் வைக்க வேண்டியும் அவரோடு இணங்கி இருக்க வேண்டியும் ஒட்டி உறவாட வேண்டியும் வழி வகுத்துக் கொடுத்தது இந்தக் கல்விச் செல்வந்தான் எனில் அது சாலப் பொருந்தும்.

கல்விச் செல்வம் இல்லாதவர்கள் சபையிலே கௌரவம் பெற மாட்டார்கள். கல்வியறிவு அற்றவர்கள் மரத்துக்குச் சமானம் என்கிறார் ஔவையார்.

**"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே**
**நீட்டோலை வாசியாது நின்றான் குறிப்பறிய**
**மாட்டாதவன் நன்மரம்"**

என்பது மூதுரை.

எனவே படிப்பறிவில்லாதவர்களால் பயனேதுமில்லை என்பதே கருத்து. அத்துடன், "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபடி படித்தவர்களை படித்தவர்களே நாடி விரும்பித் தாமாகவே சென்று உரையாடி மிகவும் அன் போடு பழகி மகிழ்வார்கள். மேலும் படித்த வர்கள் அதிகம் பேசமாட்டார்கள். அடக்க ஒடுக்கமாக அமைதியாகவே காணப்படுவர். ஆமையைப் பாருங்கள், அளவுக்கு அதிக மான முட்டையைப் போட்டுவிட்டு மிகவும் அடக்கமாகவும் அமைதியாகவும் போய்விடும். ஆனால் கோழியோ ஒரு முட்டையைப் போட்டு விட்டு சத்தம் போட்டுக் கொக்கரித்து ஊரைக் கூட்டிவிடும்.

**"கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்**
**மற்றையர் தாம் என்றும் மதியாரே! - வெற்றி நெடும்**
**வேல் வேண்டும் வாள் விழியாய் வேண்டா புளிங்காடி**
**பால் வேண்டும் வாழைப்பழம்"**

என்பது நன்னெறி. அதாவது வாழைப் பழத்தைப் பால் விரும்பும், புளிப்பான காடியை விரும்புமோ? விரும்பமாட்டாது. அதேபோல அறிவாற் சிறந்த கற்றறிந்த அறிஞர்களை மேன்மக்கள் நன்கு விரும்புவார்கள். ஆனால் அற்பர்கள் மதிக்கவே மாட்டார்கள். எனவே படிப்பிற் சிறந்த பண்புளோர்க்கு என்றும் எங் கும் மதிப்புத்தான். அவர்களுக்கு ஈடு இணை கிடையாது.

கற்றறிந்தவர்கள் தாம் எதைக் கற்றார் களோ அதனையே தம்முடைய வாழ்க்கை யிலும் கடைப்பிடிப்பார்கள். கற்ற விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவார்கள். ஆகவே கல்விச் செல்வத்தைப்போல சிறந்த மேலான

செல்வம் எதுவுமே இல்லை. மானிடராய்ப் பிறந்த மகிமை பெற்ற ஒவ்வொருவரும் கல்வி கற்றிருக்க வேண்டும். படித்தால் மட்டும் போதாது. படித்தபடி நடக்கவும் வேண்டும்.

சிறந்த பண்புமிக்க நல்லறிஞர்கள் ஒரு நாட்டின் பொக்கிஷமாகும். கல்வியின் மேன்மையை உணர்ந்துதான் நமது முன்னோர்கள் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கூறிச் சென்றிருக்கிறார்கள். பிச்சை எடுக்க நேரிடினும் படிப்பை விடக்கூடாது. படிப்புத்தான் நல் வாழ்வுக்கு அடி அத்திவாரம். கல்வி இல்லையேல் யாரும் மதிக்க மாட்டார்கள்.

எனவே, கல்விச் செல்வம் மிக மேலான உயர்ந்த செல்வம். அந்தக் கல்விச் செல்வத்தை நாம் நல்லபடி பெறவேண்டுமாயின் கலைமகளாம் நாமகள் சரஸ்வதியைப் போற்றித் துதிக்க வேண்டும். நவராத்திரி நாளில் விரதமிருந்து வணங்க வேண்டும்.

எமது வாழ்நாள் கொஞ்சமே. ஆதலால் புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி முடியுமுன்னே கல்விச் செல்வத்தை வேண்டிய அளவு கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்த அருமையான கல்விச் செல்வத்தை எமக்கு ஆவலுடன் அள்ளிக் கொடுத்த ஆசானையும் மறக்கக் கூடாது. அவருக்கு எம் மாலானமட்டும் உதவிகள் புரிந்து அவரை வணங்கி அவருடைய தேவைகளை முடிந்த அளவு பூர்த்தி பண்ணுதல் வேண்டும். இஃது எமது தலையாய கடமையாகும்.

மேலும்,

**"நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாப் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூக்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்"**

என்பது ஒளவையார் கூற்று. இதில் அவர் என்ன கூறுகின்றார் என்றால் தாமரைக் குளத்திலே நல்ல அன்னம் சேர்ந்திருப்பது போல படித்த பேரறிஞர்களைப் படித்தவர்களே விரும்பித் தாமாகவே சென்று உரையாடி மகிழ்வர். மூர்க்க குணம் படைத்த படிக்காத முட்டாள்களை படிப்பறிவில்லாத பாவிகளே சேர்ந்திருப்பர். காட்டிலே இறந்து போன உடலைக் காகம்தான் சென்று விரும்பி உண்ணும்.

இவ்வளவு எளிமையான விளக்கத்துடன் ஒளவையார் கூறியிருக்கும் ஆழ்ந்த கருத்து மேலும் மேலும் சிந்திக்கச் சிந்திக்க தேன் போன்று உள்ளிருந்து இனிக்கும். இதுவும் படித்தவர்களுக்கு மட்டுமே புரியும். மற்றவர்களுக்கு எள்ளளவும் புரியாது.

இப் பரந்த நிலவுலகத்தின் கண்ணே வாழ்கின்ற பல்கோடி ஜீவராசிகளில் இந்த மனிதன் ஒருவனாலேயே கல்விச் செல்வத்தைப் பெறமுடியும். எவ்வளவு தூரம் கற்றறிந்து அறிவிற் சிறந்தவர்களாக வருகின்றார்களோ அவ்வளவு தூரம் அவருடைய நுண்ணறிவு பலத்த அத்திவாரத்தைக் கொடுக்கும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. மேலும் "கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்கிறது உலகநீதி. அந்த வகையில் கல்விக்கு உயர்வானது வேறு எதுவுமேயில்லை என்பதை மாணவ சமுதாயம் உணர்ந்து நடக்க வேண்டும்.

இக்கால மனித வாழ்வில் உடம்பும் உயிரும் ஒன்றாக இருக்கும்போதே கற்க வேண்டியதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்லறிவும் நற்பண்பும் நல்லொழுக்கமும் எமது வாழ்க்கை என்ற வண்டியின் சக்கரங்களாகி நீதி நெறியிலே நம்மை இட்டுச் செல்கின்றன. மனிதருக்கு முன்னேற்றப் பாதையைக் காட்டி அந்த நல்ல சீரான பாதையிலே செல்ல வழிவகுப்பது கல்விதான்.

"என்னிடம் காணப்படுகின்ற அறிவுக்கும் ஆற்றலுக்கும் நான் புத்தகங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நல்ல நெறிகள் இவைதாம் என்று அறியச் செய்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து என்னை நேர்வழியில் இட்டுச் சென்றவை நான் படித்த நூல்களே" என்று அழகாகச் சொல்லியிருக்கின்றார் "மாக்சிம் கோர்க்கி" எனும் நல்லறிஞர். புத்தகங்களைப் படிக்கப் படிக்க ஆழ்ந்து ஆராய்ந்து வாசிக்க வாசிக்க அவை என்னை உலகத்துடனே மேலும் நன்றாக இறுகப் பிணைத்து வந்ததோடு மேன்மேலும் வாழ்க்கை என்ற ஒளி பல்கிப் பிரகாசித்து நல்லறிவுப் பெட்டகமாக என்னை உருவாக்கிவிட்டன" என்று மிக உருக்கமாகக் கூறியிருப்பது இவண் நோக்கத்தக்கது.

"மெய்ப்பொருள் இதுதான்" என்று நம்மவர்க்கு உணர்த்தி நிற்பதோடு, நல்ல அரணாக மாறி வாழ்க்கை வண்டியை நேரான சீரான பாதையிலே இட்டுச் செல்ல உதவுவன நூல்களேயாகும். அதுவும் நாம் கற்றுக் கொண்ட அளவிலேயே நிகழும்.

**"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற**
**நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்**
**தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்**
**குலத்தளவே ஆகுமாம் குணம்"**

என்கிறது மூதுரை.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், தண்ணீரின் அளவுக்குத் தக்கபடியே அல்லிச்செடி உயர்ந்து நிற்கும். அதுபோலவே, படித்திருக்கும் நூல்களின் தரத்தைப் பொறுத்தே கல்வியறிவும் இருக்கும் என்பதேயாகும்.

ஆகவே, கல்விப் பெருஞ் செல்வத்தை முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு நாம் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். கூடாத பழக்கங்களைக் கற்றுத் தரும் புத்தகங்களை வாசிக்கவே கூடாது. "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பது முதுமொழி. அந்த வகையில் நல்ல முறையில் நேர் வழியில் கல்விதனைக் கற்று இவ்வுலகில் நாலுபேர் மதிக்கின்ற பிரஜையாக உலா வந்து, நல்ல சமுதாயத்தைக் கட்டி எழுப்பி, நல்வாழ்விற் திளைக்க எங்களை நாங்களே அதாவது நம்மை நாமே தயார்ப்படுத்தி நல்ல நெறியில் வாழ்ந்து மகிழ்ந்திருப்போமாக.

## ஏழை அடியேனை உயர்த்தி வைத்தாய் முருகா

நல்ல மனதை எமக்குள் வைத்துத் தினம்
நாளும் பொழுதும் உனை நினைக்க வைத்து
பல பேருடன் சேர்ந்து சந்நிதியில் பாட வைத்து
பன்னிரு விழியானே உனைதினம் வணங்க வைத்தாய்
பண்ணிய பாவங்கள் பலவுண்டு இங்கிருக்க – முருகா
பரமன் மகனே எனையும் ஏற்றாயோ?
என்ன புண்ணியம் யான் செய்தேனோ? எழுதவும் பாடவும்
ஏழை அடியேனை எளியேனை உயர்த்தி வைத்தாயே முருகா.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

மனநிறைவுதான் ஒருவனைப் பணக்காரனாக்குகிறது.

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## தாமோதரனின் தாண்டவங்கள்

திருமாலின் தசாவதாரங்களுள் கிருஷ்ணாவதாரத்தில் மட்டுமே அவரது ஆடற் கலையின் வல்லமை வியாபகமாகக் காண் கின்றோம். கண்ணன் அவதாரம் நினைக்கக் கூடுதல் இன்பம் தரும் ஒரு தெவிட்டாத வரலாறு.

கண்ணன் கோகுலத்தில் ஆய்ச்சியர் கள், கோபியர்கள் சூழப் பலவகை நடனங் களை ஆடுகிறார். பகைவர்களைச் சுலபமாக வென்றும் கூத்தாடுகின்றார். மூவுலகும் தாவி அளந்த திருமால் மண்ணாலும் பொன்னாலும் செய்யப்பெற்ற குடங்களைக் கொண்டு ஆடிய வினோதக் கூத்து குடக்கூத்து. நப்பின்னைப் பிராட்டியோடு ஆடியது குரவைக் கூத்து. கிருஷ்ணாவதாரத்தில் பகவான் பல நடனங் களை ஆடியுள்ளார். அதில் மிகவும் பிரசித்தி பெற்றது காளிங்கன்மீது ஆடி அருளிய நடன மாகும். ஐந்து தலை நாகத்தின்மீது ஏறிக் கொண்டு, ஒரு காலை ஊன்றி, ஒரு காலை மேலே தூக்கிய வண்ணம் நடனம் புரிந்தார். ஒரு கையால் அபயம் காட்டியும், மற்றொரு கையால் காளிங்கனின் வாலைப் பிடித்து அடக்கிக்கொண்டும் அற்புதமான திருக்கோலத் தில் காட்சி தந்தார்.

"ஓர் பொய்கைவாய் விடங்கலந்த பாம்பின்மேல் நடம்பயின்ற நாதனே" என்று திருமழிசைப் பிரான் காளிங்க நர்த்தனம் பற்றிப் பாடுகின்றார். மனித மனம் என்பது விஷம் மண்டிய ஒரு தடாகம். அதில் கிடக்கின்ற ஐம்புலன்களே, ஐந்து தலை நாகம் எனும் காளிங்கன். மனித மனதில் ஓயாமல் படம் எடுத்து ஆடுகின்ற ஐம்புலன்களாகிய கொடிய பாம்பை, இறைவன் திருவடிகள் அடக்கி ஒடுக்குகின்றன. இதுவே காளிங்க நர்த்தனம் உணர்த்தும் தத்துவம்.

காளிங்கனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கு மாறு அவன் மனைவிமார்களாகிய நாக பத்தினி கள் பகவானிடம் முறையிட, கண்ணன் பெருங் கருணையுடன் புதிதாக ஒரு நடனத்தை ஆடி, மறுபடியும் காளிங்கன் உடல் நலம்பெற வைத்தார். அப்போது அவர் ஆடிய நடனம் தான் தில்லானா. ஸ்ரீ கிருஷ்ணன் நைஷ்டிகப் பிரம்மச்சாரியாக பதினாயிரம் கோபியர்களுடன் நிலா ஒளியில் ஆடிய நடனம் ராஸ லீலையில் குரவைக் கூத்து.

ஆடிவரும் அழகனின், கனகமணி அசையும் திருநடனத்தைக் காணும் அடியார் களின் கண்பட்டுப்போனால் மனம் புண்பட்டுப் போகுமே என உருகுகிறார் ஒரு கவிஞர்.

காலிற் சதங்கை கொஞ்ச கைவளை குலுங்க முத்துமாலைகள் அசைய தெரு வீதியில் வந்தான். வானோர் புகழ மண்ணும் மகிழ ஆயர் குலத்துதித்த மாயன் கோபால கிருஷ்ணன், நீலவண்ணக் கண்ணன் ஆடிய

*பணத்தின் பலன் அனைத்தும் அது பயன்படுவதில்தான் இருக்கிறது.*

நடனத்தைக் காணப்பெற்றோர் செய்த மகா தவம்தான் என்னே! தாயார் தேவகி மகிழ்வதற்காக ஆடியது ஆனந்த நடனம். இப்படியாக கிருஷ்ணாவதாரத்திலே பல நடனங்களைப் பகவான் ஆடியுள்ளார். மதம் பிடித்த யானையை அடக்கி ஆடியது அல்லியக்கூத்து. வாணன் என்ற அரக்கனை வதைத்த பின் ஆடியது மல்லாடல்கூத்து.

### கண்ணன் பிரமச்சாரி

கோகுலத்தில் கண்ணன் பசுமாடுகளை மேய்த்துக்கொண்டே புல்லாங்குழலில் இனிமையான நாதத்தை எழுப்பிக்கொண்டிருந்தான். பசுக்களும், கன்றுகளும் காதை மடக்கிக் கேட்டுக்கொண்டேயிருந்தன. கண்ணனைக் காண கோபியர்கள் ஒரே கூட்டமாக வந்தனர். அவர்கள் கண்ணனிடம் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு உயர்ந்த பிராமணனுக்கு பிஷை (பிச்சை) அளிக்க விரும்புகிறோம். யாருக்கு அளிக்கலாம் என்று கேட்டனர். கண்ணன் சிரித்துவிட்டு துர்வாஸ முனிவருக்கு அளியுங்கள் என்றான்.

கோபியர்கள் துர்வாஸ முனிவர் யமுனை நதியின் அக்கரையில் இருக்கிறார். யமுனை மிகவும் ஆழமானது. ஆபத்தான அந்த நதியை நாங்கள் எப்படிக் கடந்து போவது என்று கேட்டனர். "கிருஷ்ணன் பிரம்மச்சாரி" என்று கூறிக்கொண்டே போங்கள். யமுனை உங்களுக்கு வழிவிடுவாள் என்றான். அவ்வாறே கோபியர்கள் "கிருஷ்ணன் பிரம்மச்சாரி" என்று கூறவே யமுனை நதி வழிவிட்டது. யமுனையைக் கடந்து துர்வாஸ முனிவரைச் சந்தித்தனர். துர்வாஸர் சிவபெருமானின் அம்சமாக அவதரித்தவர். மிக உயர்ந்த முனிவர்களுக்குள் முனிவர். அவருக்கு அறுசுவை உணவுடன் நெய், தயிர் என்று ருசியுள்ள பிஷையை அவர் திருப்தி அடையும்வரை அளித்தனர் கோபியர்கள். அவரும் பிஷையை ஏற்று அவர்களை ஆசீர்வதித்தார். மறுபடியும் யமுனையைக் கடந்துவர வழி சொல்லுங்கள் என துர்வாஸரிடம் கேட்டனர். "துர்வாஸ முனிவர் அறுகம்புல்லை மட்டும் உண்பவர்" என்று சொல்லுங்கள். யமுனை உங்களுக்கு வழி விடுவாள் என்றார்.

கோபியர்களுக்கு ஒரே சந்தேகமாகி விட்டது. கண்ணன் பல பெண்களுடன் கூடி மகிழ்பவன். அவன் எப்படிப் பிரம்மச்சாரியாக இருக்க முடியும். தாங்களோ நாங்கள் இட்ட உணவை வயிறு புடைக்க உண்டீர்கள். அப்படியிருக்க எப்படி அறுகம்புல்லை மட்டும் உண்பவராக ஏற்றுக்கொள்ள முடியும் என்றனர். அதற்கு முனிவர் மனிதனின் வாழ்க்கை ஒரு பிறவிப் பெருங்கடலில் நீந்துவது போன்றது. பசி, தாகம், மூப்பு, மரணம், சோகம், மோஹம் எப்போதும் அடித்துக்கொண்டே இருக்கும். இவற்றில் மூப்பு, மரணம் இரண்டும் உடலைச் சேர்ந்தவை. தாகம், பசி இரண்டும் பிராணனைச் (உயிரைச்) சேர்ந்தவை. மோஹமும், சோகமும் மனதைச் சேர்ந்தவை. ஆன்மாவுக்கு இந்த ஆறில் ஒன்று கூடக் கிடையாது. இந்தத் தத்துவம் சிறந்த ஜீவாத்மாவை ஒரு போதும் துன்புறுத்தாது. அவர்கள் சொன்ன சொல்லுக்கு என்றும் மகிமை, மரியாதை உண்டு.

கண்ணன் பகவான். காமம் எவனிடத்தில் அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறதோ அவனே பகவான். கிருஷ்ணன் பகவான். அவனிடத்தில் காமம் கிடையாது என்பதால் "ப்ரமச்சாரி" என்றழைக்கலாம். நானும் எதை உண்டாலும் அறுகம்புல்லுக்குச் சமமாகக் கருதி உண்கிறேன். துர்வாஸர் என்றால் அறுகம்புல்லை உண்பவர் என்று பொருள். பசி என்பது எனக்கில்லை. என் உயிருக்குத்தான் பசி. எனவே என்னை அறுகம்புல்லை உண்பவன் என்றால்

*தேவைக்கு மேலுள்ள பொருள் தேவையில்லாதவற்றையே வாங்கப் பயன்படும்.*

தவறில்லை. எனவே கண்ணன் பிரமச்சாரி. துர்வாஸர் அறுகம்புல்லை உண்ணும் மாமுனிவர்.

கிருஷ்ணன் இன்பமயமானவன். பேரின்பப் பொக்கிஷம். கோபியர்கள் அவனிடமிருந்து இன்பம் பெற்றார்கள். அவன் இல்லாத இடமே இல்லை. நாம் காலமாகிய வெள்ளத்தில் சிக்கி, மும்மலங்கள் நிறைந்த அஞ்ஞான வாழ்க்கையில் மூழ்கி எதிர்நீச்சல் அடிக்க முடியாமல் தத்தளிக்கும்போது நம்மைக் காப்பதற்கு ஸ்ரீ கிருஸ்ணனின் பாதக் கமலங்களே துணை. அஞ்ஞானியான காளிங்கன் பகவானின் பாதங்கள் பட்டு ஞானியாகிறான். ஸ்ரீ ராமர் கால்பட்டுக் கல்லாலான அகலிகை உயிர் பெற்றாள். வாமனனாக வந்த அவன் கால்பட்டு மாபலி மன்னன் விஷ்ணு பதவி பெற்றான். ஹரி கோவிந்தன், கோகுல பாலன், தீனதயாளன், கண்டவர் மனம் மயங்கும் பேரழகன், மோகனக் கண்ணன், புத்திதந்து, நெஞ்சில் சுத்தி தந்து, உடலில் சக்திதந்து வேண்டும் சித்தி தந்து முடிவில் முத்திதரும் ஆதி மூல மூர்த்தி அவன் பாதம் பணிவோம்.

"உன் ஆடலில் ஈரேழு புவனமும் அசைந்து அசைந்தாடுதே எனவே
ஆடாது அசங்காது வா வா கண்ணா
கண்ணா கண்ணா கண்ணா"

(தொடரும்...

## துயர் பகிர்கின்றோம்

யாழ் வேலணை மேற்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திலகவதி விஸ்வநாதன் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவரும், ஆச்சிரமக் கடமைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்டு உதவி ஒத்தாசை புரிந்துவருபவருமான திரு கு. கங்கைவேணியன் (வேணி களஞ்சியம் - யாழ்ப்பாணம்) அவர்களின் மாமியாரான மறைந்த திருமதி திலகவதி விஸ்வநாதன் அவர்கள் எல்லாம் வல்ல முருகன் காலடியில் இளைப்பாற சந்நிதியான் ஆச்சிரமம் பிரார்த்திக்கின்றது.

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை - காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரியும் அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச் செயலாளரும், சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் ஆலோசகரும், மானிடம் அறக்கட்டளையின் தலைவரும், சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நெருங்கிய தொடர்புடையவருமான மருத்துவர் ப. நந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தை தம்பிப்பிள்ளை பரராசசிங்கம் அவர்கள் (09.09.2019) அன்று சிவபதமடைந்தார்.

அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**-சந்நிதியான் ஆச்சிரமம்-**

# தீபாவளி

– **திருமதி பொன்னுத்துரை திலகவதி** அவர்கள் –

நாம் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும். இப்பண்டிகை ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தியில் கொண்டாடப் படுகின்றது. இந்த பண்டிகை இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், நேபாளம் முதலான நாடுகளில் வாழும் சைவ வைணவ சமயத்தவர்களாலும் கொண்டாடப்படுகின்றது. தீபங்களை வரிசையாக ஏற்றுதல் என்பதுதான் தீபாவளி. இறைவனை ஒளியாகச் சொல்வது மரபு. வேதமும் அதையே சொல்கிறது. தீபாவளித் திருநாளன்று தீபச் சுடரொளியில் இறைவனை ஒளிமயமாக வேண்டி வழிபடுகிறோம். தீப ஒளியானது எல்லாப் பொருட்கள் மீதும் பட்டு இருளை அகற்றுகின்றது. மகிழ்ச்சி, கருணை ஆகிய தீபங்களை ஏற்றுவோம். மகிழ்ச்சியைப் பெறுவோம். இதுவே தீப ஒளி ஏற்றுதலின் உட்பொருள் ஆகும்.

தீபச் சுடரொளியில் இறைவனை ஒளிமயமாக வேண்டி வழிபடுகிறோம். அதையே சம்பந்தர் சொல்லுகிறார். "ஆதியாய நான்முகனும் மாலும் அறிவறியா சோதியனே" அப்பரும் இவ்வாறு கூறுகிறார். "சொற்றுனை வேதியன், சோதி வானவன்" மாணிக்கவாசகர் "ஜோதியே சுடரே, சூடாமணி விளக்கே" என்கிறார். ஒளி தருபவை மூன்று ஜோதி, சுடர், விளக்கு. சுடர் என்பதை சான்றோர் மூன்றாகச் சொல்கிறார்கள். சூரியன், சந்திரன், அக்கினி இந்த மூன்றும் கண்ணால் காணக்கூடிய உருவம் கொண்டவை. புற இருளைப் போக்கி அக இருளையும் போக்கவல்லவை. ஜோதி, சுடர், விளக்கு இம்மூன்றையும் இணைத்து "அருள் விளக்கே, அருள் சுடரே, அருட்சோதி சிவமே" என்கிறார் வள்ளலார். இயற்கையில் தோன்றும் எல்லாப் படைப்புகளிலும் ஒளியின் தன்மை தான் மேலோங்குகிறது. நம் ஐம்புலன்களைக் கொண்டு உலக நாட்டமும் கொள்ளலாம். இறை நாட்டமும் கொள்ள முடியும். ஐம்புலன்களுக்கு ஒளி தருவது நம்முள் இருக்கும் அறிவே. "கண்துயிலாது என் அறிவின் கண்ணூடே காட்சி பெற மண்டிய பேரொளி. நீ வாழி! பராபரமே" என்றார் தாயுமானவர். இறைவனிடம் அன்பு செலுத்தும் போது நம் அக இருள் நீக்கி மெய்ஞ்ஞான ஒளி மிளிரும். பூதத்தாழ்வார் ஞானத் தமிழில் இப்படிப் பாடி எம் பெருமான் நாராயணனுக்கு அகத்தில் சுடர் விளக்கு ஏற்றுகிறார்.

**அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,**
**இன்பு உருகு சிந்தை இடுதிரியா - நன்பு உருகி**
**ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்.**

"ஒளி படைத்த கண்ணினாய்" என்றான் பாரதி. திருமூலரின் திருமந்திரம் கூறுகிறது.

**விளக்கினை யேற்றி வெளியை அறிமின்**
**விளக்கினின் முன்னே வேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.**

ஆறுமுகக் கடவுளும் ஓர் ஒளிக்கடவுள் தான். ஜோதிக் கடவுளான சிவபெருமானின்

நெற்றி கண் பொறிகளிலிருந்து உதித்தவன். ஆறு திருமுகங்களையும் ஒளிமயமாகப் பாவித்து ஒவ்வொரு முகத்தையும் கொண்டு பல திருவிளையாடல்கள் புரிந்தவன். தீபாவளி யுடன் தொடர்புடைய பல கதைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றினைப் பார்ப்போம்.

முன்னொரு காலத்தில் நரகாசுரன் என்ற அசுரன் இருந்தான். அவன் பிரம்ம தேவரிடம் வரங்கள் பல பெற்றான். அதனால் அவன் "நானே பெரியவன்" என்று அகங்காரம் கொண்டிருந்தான். மக்களுக்கும் தேவர்களுக் கும் பல கொடுமைகளைச் செய்தான். மக்கள் இறைவனிடம் முறையிட்டனர். அந்தக் கொடிய அசுரனைக் கொல்ல மகாவிஷ்ணு திருவுளம் கொண்டார். பகவானின் திருக்கரத்தால் இறக் கும் தறுவாயில் நரகன் மெய்ஞ்ஞான நிலை யில் இருந்தான். தான் உயிர் துறக்கும் இந் நாளில் மக்கள் விளக்கேற்றி அதில் ஞான விளக்கம் கண்டு மகிழ்ந்து எல்லா நலமும் பெறவேண்டும் என்று பகவானிடம் வேண்டி னான். பகவானும் வரம் வழங்கினார். அத் தினமே தீபாவளி பொருளாக விளங்கியது. அசுரன் இறந்தபோது இருள் நீங்கியது. எங்கும் பிரகாசம் பொங்கிப் பொலிந்தது.

தீபாவளித் தினத்தில் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவார்கள். எண்ணெ யில் இலக்குமி வசிப்பதாகவும் நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறுகின்றன. அன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடினால் கங்கையில் நீராடிய பலன் பெறு வார். நீராடியபின் புதிய ஆடை அணிந்து வீட்டிலும் கோயிலிலும் இறைவனை வணங் கியபின் உற்றார் உறவினருடன் பகிர்ந்துண்டு மகிழ்வார்கள். அன்று கோயில்களிலும் வீடு களிலும் தீபங்கள் ஏற்றி மகிழ்வார்கள். சிறுவர் கள் மத்தாப்பு, வெடி கொழுத்தி மகிழ்வார்கள்.

உயிர் விடும்போது உலக நலத்தை எண்ணிய தூயவன் நரகனையும் நினைவு கூர்ந்து விளக்கேற்றி வணங்குவோம். இவ னைக் கருவியாக்கிக் கொண்டு மக்களுக்கு ஞானமார்க்க உண்மையை விளங்கச் செய்த கண்ணபிரானை போற்றி வணங்குவோம்.

### மனதை மாற்றவேண்டுமே தவிர உலகை அல்ல

முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன் தனது நாட்டினை மிகவும் திறமையாக ஆண்டு வந்தான். ஒரு முறை தனது நாடு முழுவதும் கால்நடையாகவே சுற்றிப் பார்த்து, தனது மக்களின் குறை, நிறைகளை அறிய ஆவல் கொண்டான். முதலாவது நாள் நடை பயணம் முடிந்து ஒரு இரவு இரகசிய தங்குமிடம் ஒன்றில் தங்கியபோது தனது பாதங்கள் வலிப்பதாகக் கூறினான். தனது பாதங்கள் வலிப்பதற்குக் காரணம் பாதைகள் அனைத்தும் கரடுமுரடாக இருந்ததுதான் என்று பாதையைக் குற்றம் சாட்டினான். எனவே தனது சேவகர்களை அழைத்து தாம் நடந்து செல்லவுள்ள பாதைகள் அனைத்திற்கும் மாட்டுத்தோல் போர்த்தி மென்மைப்படுத்தி வைக்க ஆணையிடப்போவதாக தன்னுடன் இருந்த மந்திரிமாரிடம் தெரிவித்தான். "இதற்கு எத்தனை மாடுகள் பலியிட வேண்டி வரும், எத்தனை பேரின் வேலைகள் அதிகரிக்கும். மக்கள் எரிச்சலடையமாட்டார்களா?" எனச் சிந்தித்த இளம் மந்திரி ஒருவர், தைரியமாக அரசனிடம் சென்று, "இதற்குத் தேவையில்லாமல் எவ்வளவு செலவுகள் ஏற்படும் எனச் சிந்தியுங்கள். அதற்குப் பதிலாக உயர்ரக தோலினால் உங்கள் பாதங்களை மட்டும் மூடிக்கொள்ளலாமே" என்றான். அரசன் ஆச்சரியம் அடைந்தான். பின்னர் மந்திரியின் கருத்தை ஏற்றுக்கொண்டு தனக்கான சிறந்த காலணியை செய்வித்து அணிந்து கொண்டான். ஆக உலகம் எமக்கு மகிழ்ச்சியானதாக இருக்க நமது மனதை மாற்றவேண்டுமே தவிர உலகை அல்ல.

*தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம்.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (முதலாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## இந்திரன் பழிதீர்த்த படலம்

கிருத யுகத்திலே, தேவேந்திரன், சுவர்க்கலோகத்திலே மந்தார நிழலிலே சுதர்மை என்னுந் தேவ சபையிலே முப்பத்துமுக்கோடி தேவரும் சேவிப்ப, இரத்தின சிங்காசனத்தின் மேலே வீற்றிருந்து, தேவப் பெண்களுடைய நிருத்தத்தையும் கீதத்தையும் கண்டும் கேட்டும், களிப்பாகிய மதுக்கடலிலே மூழ்கினான். அப்பொழுது தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் அங்கே வந்தார். பெண்மயலில் அகப்பட்ட இந்திரன் அது கண்டும், இருக்கை விட்டெழுந்து அவருடைய திருவடிகளை வழிபாடு செய்யாது வாளாவிருந்தான். அதுகண்ட பிரகஸ்பதி பகவான் விரைந்து போய் விட்டார். உடனே இந்திரனுடைய செல்வம் சிறிது குன்றியது. இந்திரன் அதனையறிந்து, "எனக்கு இந்தக்கேடு குருவை வழிபாடு செய்யாத அதி பாதகத்தினாலே விளைந்தது" என்று தெளிந்து, துன்பமடைந்து பிரகற்பதியைத் தேடத் தொடங்கி, அவருடைய உலகத்திலும் மற்றை உலகங்களிலும் தேடிக் காணாமையால், சத்திய லோகத்தை அடைந்து, அங்குந் தேடிக் காணாது, பிரமதேவர் முன் சென்று அவரை வணங்கித் துதித்து, முன் நிகழ்ந்த சமாசாரத்தை அவருக்கு விண்ணப்பஞ் செய்தான். பிரமதேவர் அதுகேட்டு, இந்திரனுக்குக் குரு நிந்தையினாலே பின் நிகழ்வதனை முன் அறிந்துகொண்டு, இந்திரனை நோக்கி, "நீ உன் குருவாகிய வியாழனைக் காணுமளவும், அசுரகுலத்திற் பிறந்தும் அறிவொழுக்கங்களாலே சிறந்தவனும் துவட்டாவுடைய புத்திரனும் மூன்று சிரசுகளையுடையவனுமாகிய விசுவரூபனை உனக்குக் குருவாகக் கொள்வாயாக" என்றார். பிரமதேவருடைய சூழ்ச்சியை அறியாமையால் அதற்கு உடன்பட்டு அவரை வணங்கி, அனுமதி பெற்றுக் கொண்டு போய், விசுவரூபனைத் தன் குருவாகக் கொண்டான்.

இந்திரன் தன்பொருட்டு ஒரு யாகஞ் செய்யும்படி வேண்ட விசுவரூபன் அதற்கு உடன்பட்டு, புறத்திலே "தேவர்களுக்குச் செல்வம் பெருகுக" என்று சொல்லி, அகத்திலே "அசுரர்களுக்கெல்லாம் உய்யுந் திறம் உண்டாகுக" என்று நினைந்து, யாகஞ் செய்தான். இவ் வஞ்சகத்தை இந்திரன் ஞான திருட்டியினாலே அறிந்து, தன் குலிசாயுதத்தினாலே விசுவரூபனுடைய தலைகள் மூன்றையுஞ் சேதித்தான். அவைகள் மூன்றும் காடையும் ஊர்க்குருவியும், சிச்சிலியுமாய்ப் பறந்தன. இந்திரன் தன்னைப் பிரமபாவம் கோபித்து வந்து பற்றினமையால், பெருந்துயரம் அனுபவித்தான். தேவர்கள் அந்தப் பாவத்தை மரங்களிடத்தும், மண்ணினிடத்தும், பெண்களிடத்தும், நீரினிடத்தும் புகுத்தினார்கள். அவர்கள் "நமக்கு இப்பாவந் தீரு முறைமை எப்படி" என்று கேட்க, தேவர்கள், "இப்பாவம் நீரினிடத்து நுரையாயும், மண்ணினிடத்து உவராயும், பெண்களிடத்துப் பூப்பாயும், மரங்களிடத்துப் பிசினாயும் கழியக் கடவது"

என்றார்கள். பின்னும் அவர்கள் "இப்பழியைத் தாங்கிய எங்களுக்கு வரும் நலம் யாது?" என்று கேட்க, தேவர்கள், "கருப்பமுள்ள பெண்கள் கருவுயிர்க்குமளவும் கணவரைப் புணர்ந்து வாழக் கடவர். மண்ணைத் தோண்டிய குழி அதனால் வடுவொழியக் கடவது; நீர் இறைக்குந்தோறும் ஊறக் கடவது. மரம் வெட்டினாலும் தழைக்கக் கடவது" என்று நன்மையை அருளிச் செய்தார்கள். இதனால் இந்திரன் அழுக்கு நீங்கிய இரத்தினம் போலப் பிரமபாவம் நீங்கி விளக்கமுற்றான்.

துவட்டாவானவன் தன் குமாரனாகிய விசுபரூபனை இந்திரன் கொன்றமையைக் கேள்வியுற்று, கோபித்துப் பெருமூச்செறிந்து, பழிவாங்க நினைந்து, ஒரு யாகஞ் செய்து, யாககுண்டத்தினின்றும் தோன்றிய விருத்திராசுரனை, இந்திரனைக் கொல்லும்படி ஏவினான். விருத்திராசுரன் வடவாமுகாக்கினி போலக் கோபங் கொண்டு, இந்திரனிடத்துச் சென்றான். இந்திரனும் வெள்ளையானை மேற்கொண்டு எதிர்த்தான். இருவரும் யுத்தஞ் செய்யும்பொழுது, இந்திரன் விருத்திராசுரன் மேலே தன் குலிசத்தை எறிந்தான்; விருத்திராசுரன் இடிபோல ஆரவாரித்து, ஓரிருப் புலக்கையினாலே இந்திரனைப் புயத்திலே அடித்தான். உடனே இந்திரன் மூர்ச்சையடைந்து, சிறு பொழுதிலே மூர்ச்சை நீங்கி, "இப்பகைவனோடு போர் செய்ய யான் வலியிலேன்" என நினைந்து, சத்தியலோகத்தை அடைந்து, பிரமதேவரை வணங்கித் துதித்து, தான் படுகின்ற துயரத்தைச் சொன்னான்.

பிரமதேவர் இந்திரனோடு வைகுண்டத்தை அடைந்து மகாவிட்டுணு திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ் செய்தார். மகாவிட்டுணு இந்திரனை நோக்கி, "இந்திரனே! உன் கையிலுள்ள குலிசம் மிகப் பழையது, பகைவருயிரைக் கவரவல்ல தன்று; வேறு புதியதொரு குலிசம் வேண்டும். அது பெறுவதற்கு உபாயஞ் சொல்வோம். நாம் திருப்பாற் கடல் கடையும்பொழுது தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்களோடு வரலாகாது என்று ஆயுதங்களெல்லாவற்றையும் ததீசி முனிவரிடத்தே சேர்ப்பித்தோம். அம்முனிவர் நெடுங் காலஞ் செல்லவும் தேவர்களாயினும் அசுரர்களாயினும் வந்து கேட்டிலாமையால், அவ் ஆயுதங்களனைத்தையும் விழுங்கிவிட்டார். அவைகளெல்லாம் ஒன்றாகத் திரண்டு முதுகந்தண்டைப் பொருந்தின; அது குலிசாயுதமாம். நீ போய்க் கேட்குமுன்னே சீவகாருண்ணியமே வடிவமாகவுடைய அம்முனிவர் அதனை உனக்குத் தருவார்" என்றார்.

அது கேட்ட இந்திரன் விட்டுணுவை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தேவர்களோடு ததீசி முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்து, அவரை வணங்கித் துதித்தான். ததீசி முனிவர் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, இன் சொற்களைச் சொல்லி, "நீங்கள் மிக மெலிந்து வந்தீர்கள். உங்களுக்கு நிகழ்ந்த காரியம் யாது? சொல்லுங்கள்" என்றார். இந்திரன் அதுகேட்டு, "தயாநிதியாகிய சுவாமீ! நீர் மாறாததொன்றை விரும்பி இத் தேவர்களோடு வந்தேன். அது பகைவராகிய அசுரரைக் கொன்று எமது குடியை உய்விக்க வல்லது; அது உம்முடைய சரீரத்திலுள்ளது" என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே ததீசி முனிவர் சூரியனைக் கண்ட செந்தாமரைமலர் போலத் திருமுக மலர்ந்து, இந்திரனைநோக்கி, "நாய்கள் நம்முடையதெனவும், நரிகள் நம்முடையதெனவும், தாய் தந்தையர்கள் நம்முடையதெனவும், யமன் நம்முடையதெனவும், பிணிகள் நம்முடையதெனவும், பேய்கள் நம்முடையதெனவும் நினைத்துக் கொண்டிருத்தல்போல நாமும் நம்முடையது

என்று நினைத்துக்கொண்டிருக்கும் சரீரம் யாருடையது? பாம்பு தன் தோலையும் பறவை தன் கூட்டையும் தானென்று கொள்ளுமா? அவ்வாறே உயிரும் இச்சரீரத்தை நானென்று கொள்ளுதல் கூடுமா? இரக்கஞ் சிறிது மில்லாத அசுரர்களாலே பெருந் துயரத்தை அனுபவிக்கும் தேவர்கள் உய்யும் பொருட்டு இப் புன்புலால் யாக்கையைக் கொடுத்துப் புண்ணியத்தையும் புகழையும் பெற்றுக் கொள் வேனேயாயின், யான் எடுத்த இச்சரீரத்தினா லாகும் பயன் இதைவிட வேறு யாது?" என்றருளிச் செய்து, சமாதி கூடிப் பிரமநாடி வழிக்கொண்டு கபாலத்தைக் கிழித்துப்போய், விமானத்திலேறிச் சுவர்க்கத்தையடைந்து வீற்றிருந்தார்.

தேவதச்சன் ததீசி முனிவருடைய முதுகந் தண்டைக் குலிசமாகச் செய்து கொடுக்க, இந்திரன் வாங்கிக்கொண்டு, தேவ சேனையோடு சென்று விருத்திராசுரனை வளைந்து கொண்டான். தேவசேனையும் அசுர சேனையும் செய்த போரில் அநேகர் இறந்தார் கள். அது கண்டு, இந்திரனும் விருத்திரா சுரனும் போர் செய்யத் தொடங்கினார்கள். இந்திரன் ஆக்கினேயாஸ்திரம் விட்டான்; விருத்திராசுரன் அதனை வருணாஸ்திரம் விட் டுத் தடுத்தான். இந்திரன் வாய்வ்வியாஸ்திரம் விட்டான்; விருத்திராசுரன் அதனை நாகாஸ் திரம் விட்டு விலக்கினான். இந்திரன் நாகாஸ்திரம் விட்டான்; விருத்திராசுரன் அத னைக் காருடாஸ்திரம் விடுத்துத் தடுத்தான். இந்திரன் கோமாஸ்திரம் விட்டான்; விருத்திரா சுரன் அதனை ஞானாஸ்திரம் விட்டு மாற்றி னான். இந்திரன் விடுத்த தெய்வப்படைகள் அனைத்தையும் இப்படியே விலக்கி விருத்திரா சுரன் வேறாயுதம் விடும்படி நெருங்கினான். இந்திரன் அது கண்டு, மானமாகிய காற்றுக் கோபமாகிய அக்கினியை மூட்ட, அது சுடுதலைப் பொறுக்கலாற்றாதவனாகி, தன் கையிற் குலிசத்தை விதிர்க்க, விருத்திராசுரன் அதற்கஞ்சி, சமுத்திரத்தில் விழுந்து ஒளித்துக் கொண்டான். இந்திரனும் அவனோடு விழுந்து அவனைத் தேடிக் காணாது, பிரம்ம தேவரை அடைந்து, விண்ணப்பஞ் செய்தான். பிரம தேவர் அகத்திய மகா முனிவரிடத்துச் செல் லும்படி விடுப்ப, இந்திரன் அம்முனிவரிடத்துச் சென்று விண்ணப்பஞ் செய்தான். உடனே அகத்திய முனிவர் உண்மை அறிவானந்த வடிவாகிய சிவபிரானுடைய ஊழித்தீப் போலும் சிவந்த திருமேனியைத் தியானித்துக்கொண்டு, அசுரன் ஒளித்துக் கொண்டிருக்கும் சமுத்திர நீரையெல்லாம் உழுந்தளவினதாக்கி, தமது உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு பருகினார். தருமநெறியை விட்டுச் சம்பாதிப்பவர்களுடைய செல்வம் குன்றுதல் போலச் சமுத்திரங்களெல் லாம் வற்றிப்போயின. முன்போரிலே தோற்றுப் போன விருத்திராசுரன் அவ்விடத்து ஒரு பெரிய மலையினுச்சியிலே தவஞ் செய்து கொண் டிருத்தலை இந்திரன் கண்டு, தன் கைக் குலிசத்தினாலே அவனுடைய தலையை அறுத்தான்.

உடனே பிரமகத்திதோஷம் இந்திர னைப் பிடித்துக் கொண்டது. அது உம்மென் னும், மார்பைத் தட்டும், கோபித்தெழும்பும், ஆராவாரிக்கும், யுத்தஞ் செய்ய வாவென்னும், வாயை மடிக்கும், பற்களைக் கடிக்கும், விழும். எழுந்தோடும், திரும்பும், அழும், சிரிக் கும், சீறும். அது கணப்பொழுதாயினும் நீங் காது இந்திரனுக்குத் துயரஞ் செய்தது இந் திரன் அச்சங்கொண்டு, விரைந்து போய், ஈசானத்திக்கிலுள்ள ஒரு தடாகத்தில் விழுந்து, ஒரு தாமரை நாளத்துக்குள்ளே ஒளிந்து கொண்டான். அதனாலே சுவர்க்கலோகம் தன்

பொலிவு குன்றியது. தேவர்கள் தங்களுக்கு அரசன் இல்லாத வறுமையை நோக்கி, பூமியிலே நகுடன் என்னும் ஓரரசன் அசுவ மேதஞ் செய்தலை அறிந்து, அவனை மகுடந் தரித்துத் தங்களுக்கு அரசனாகக் கொண்டார்கள். அரசனாய் வரும் நகுடன், "இந்திராணியை இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றான். பக்கத்திலுள்ளவர் போய், அதனை இந்திராணிக்குச் சொல்ல, அவள் பிருகற்பதி பகவானிடத்துற் சென்று, "சுவாமி! என் நாயகன் இருக்கும்போதே மற்றொருவன் வந்து என்னை தன் மனைவியாகக் கொள்ளுதல் தருமமா?" என்றாள். பிருகற்பதி பகவான் அவளை நோக்கி, "சத்த விருடிகளும் தாங்கும்படி சிவிகையின் மேல் வந்தால், அவனே உன் கணவன்" என்றார். இந்திராணி அதற்கு உடன்பட்டு, குருவை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு போய், "சத்த இருடிகளும் தாங்கும்படி சிவிகையின் மேல் ஏறி இங்கே வரக் கடவை" என்று நகுடனுக்குத் தூது அனுப்பினாள். நகுடன் சிவிகை தாங்கும் இருடிகளை மதியாதும், தனக்கு விளையுந் துன்பத்தை அறியாதும், இன்பமனுபவிக்கும் ஆசையால் விரைந்து செல்ல நினைந்து, "இந்திராணியிடத்திற்குக் கொண்டு போங்கள்" என்றான். அப்பொழுது சிவிகையின் முற்கொம்பு தாங்கி முன்னடக்கும் அகத்திய மகாமுனிவர் அவ்வரசனை, "நீ சர்ப்பமாகக் கடவை" எனச் சபித்தார். உடனே அவன் சர்ப்பமாய் விட்டான்.

அதன் பின்பு தேவர்கள் பிருகற்பதி பகவானை வணங்கி, "கருணாநிதியாகிய சுவாமீ! அரசனில்லாமையால் பொன்னுலகம் துன்பம் அடைகின்றது" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர் போய், அந்தத் தடாகத்தில் ஒளித்துக் கொண்டிருந்த இந்திரனைக் கூவி, தம்முடைய சொல்லையறிந்து வெளிப்பட்டு வந்த அவனைக் கொண்டு, திரும்பி வந்தார். இந்திரன் குருவை வணங்கி, "கருணைக் கடலாகிய சற்குரு நாத சுவாமீ! அடியேனை வருத்துகின்ற இப் பழி நீங்குவது எங்ஙனம்? திருவாய் மலர்ந்தருளும்" என்றான். பிருகற்பதி பகவான். "இந்திரனே! இக்கொலைப் பழி பூமியின் அன்றித் தீராது; நீ வேட்டையாடச் செல்வான்போல இப்பழியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பூமியின் இடத்தில் வா" என்றார்.

இந்திரன் குதிரைமேல் ஏறிக்கொண்டு, தன் குருவும் தேவர்களும் சூழ்ந்து வர, பூலோகத்திலிழிந்து, திருக்கைலாய மலையை வணங்கி, தென்திசை நோக்கிச் சென்று, கங்கை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து, திருக்கேதாரம், காசி, காஞ்சி முதலிய சிவதலங்களை வணங்கியும் கொலைப் பழி தீராமையால் வருத்தமுற்றுப் போய், கடம்ப வனத்தின் எல்லைக்குச் சமீபித்தான். உடனே அவனைக் கொலைப் பழி விட்டு நீங்கியது. இந்திரன் பெருமகிழ்ச்சியடைந்து, பிருகற்பதி பகவானுக்கு விண்ணப்பஞ் செய்ய, அவர், "இங்கே பகவானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர், "இங்கே புண்ணிய தலமும் புண்ணிய தீர்த்தமும் இருக்கின்றன; நமக்குக் கிடைத்தல் வேண்டும்; நீ இதனை அறியக் கடவை" என்றார். இந்திரன் அதனை அறிந்து வரும் பொருட்டுச் சில ஒற்றரை விடுத்து, அவ் எல்லையைக் கடந்து அவ் வனத்திலுள்ள அதிசயங்களைப் பார்த்துக் கொண்டு, சரீர முழுதும் புளகம் போர்ப்பப் பேரானந்தத்தோடு போவானாயினான். அப்பொழுது ஒற்றர்கள் மீண்டு வந்து, வணங்கி நின்று, "மகாராசனே! இந்தக் கடம்ப வனத்திலே பரிசுத்தமாகிய ஒரு வாவிக் கரையிலே கடம்ப வன நிழலிலே

ஒப்பில்லாத சோதி வடிவாய் முளைத்த ஒரு சிவலிங்கம் இருக்கின்றது என்றார்கள். அவ் வாக்கியத்தை தன் செவித் துவாரத்தில் வார்க் கும் அமிர்தமெனக் கொண்டு பேரானந்தம் அடைந்த இந்திரன் அவ் வொற்றர்களோடும் வழிக்கொண்டு, கைகளைச் சிரசின்மேலே குவித்து வைத்துக்கொண்டு, சிவலிங்கப் பெருமானிடத்தே பதிந்த பேரன்பு பிடித்திழுப்பச் சென்று, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, கடம்ப வனத்துள்ளே புகுந்தான். அங்கே, உண்மையறிவானந்த வடிவாய், உயிர்க்குயிராய், இயங்கியற் பொருள் நிலை யிற் பொருள் என்னும் பொருள்களனைத்தும் தன்னிடத்தே தோன்றியொடுங்க நின்ற கரு வாகி முளைத்த சிவக்கொழுந்தைத் தன் ஆயிரங் கண்களுங் களிப்பக் கண்டான். கண்ட பொழுதே அடியற்ற மரம்போல் விழுந்தான். எழுந்து கண்களினின்றும் ஆனந்த அருவி பாயப், பேரானந்தப் பெருங்கடலுண் மூழ்கி, உரை குழற, நாத் தழுதழுப்ப, சரீரம் நடுங்க அன்புருவாயினான். சிவலிங்கப் பெருமானைப் பூசிக்க விரும்பி, பூசைத் திர வியங்கள் எல்லாம் சுவர்க்கத்தினின்றும் கொண்டுவரச் சில தேவரை விடுத்தான். சிவ லிங்கப் பெருமானுக்கு ஒரு விமானஞ் செய் யும் பொருட்டுத் தேவதச்சனை விடுத்தான். சிவபெருமானை விரைவாகப் பூசிக்க வேண்டு மெனக் கிளர்ந்த பேராசையினாலே பூவின் பொருட்டுப் பொற்றாமரை வாவியிலே போனான்; பூக்கிடையாமையாலே சோர்ந்தான். உடனே சிவபிரானது திருவருளினாலே அவ் வாவியிலே பொற்றாமரை மலர் மலர்ந் திருக்குங் காரணத்தினாலே அவ் வாவிக்கு பொற்றாமரை வாவியெனத் திருநாமஞ் சாத்தி னான். அவ்வாவியிலே ஸ்நானஞ் செய்து, பொற்றாமரை மலர்களைப் பறித்துக்கொண்டு, சிவலிங்கப் பெருமான் சந்நிதியை அடைந்து, காட்டை வெட்டி நிலத்தைத் திருத்திக் கொண்டு வரும்பொழுது, சிவக்கொழுந்தின் திருமுடி மேலே சூரிய கிரகணம் மெல்லத் தீண்டக் கண்டு, பதை பதைத்து, தன் குடை யினாலே நிழல் செய்ய நினைந்தான். அப் பொழுது சூரிய மண்டலம் போல ஓரிரத்தின விமானம் ஆகாயத்தினின்றும் இழிந்தது. எட்டு யானைகளும், முப்பத்திரண்டு சிங்கங்களும், அறுபத்து நான்கு கணங்களும் தாங்குவதாக மயனாலே நிருமிக்கப்பட்ட அந்த விமானத் தைச் சாத்தி, இந்திரன் சோமசுந்தரக் கட வுளைப் பூசிக்கத் தொடங்கினான். தேவர்கள் ஐந்தருக்களினாலே தரப்பட்ட பீதாம்பரம், இரத்தினாபரணம், சந்தனம், கங்கா சலமாகிய திருமஞ்சனம், திருப்பள்ளித் தாமம், பஞ்ச கவ்வியம், பழம், தேன், தூபம், தீபம், திரு அமுது என்னும் இவைகளெல்லாவற்றையும் கொண்டு வந்தார்கள்.

இந்திரன் பொற்றாமரை வாவியிலே விதிப்படி ஸ்நானஞ் செய்து, சிவசின்னங் களாகிய விபூதி உருத்திராட்சங்களைத் தரித்து, அன்புருவமாகி, அருளுருவமாகிய சிவலிங்கப் பெருமானைச் சிவாகம விதிப்படி பூசை செய்து, வலஞ்செய்து, அட்டாங்க பஞ் சாங்க விதிப்படி நமஸ்கரித்து, எழுந்து, கும்பிட்டுக் கூத்தாடி, ஆனந்த அருவி சொரிய, அஞ்சலி செய்து நின்று, துதிப்பானாயினான்.

"அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
யெங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி"

*படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி.*

யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி.

இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீரத்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி.

பூசையும் பூசைக்கேற்ற பொருள்களும் பூசை செய்யு
நேசனும் பூசை கொண்டு நியதியிற் பேறு நல்கு
மீசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி."

இப்படியே இந்திரன் துதிசெய்யும் போது, சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டு, குறுநகை தோன்ற, இந்திரன் மேலே திருவருட் கண் சாத்தி, "உன்னுடைய விருப்பம் யாது? சொல்" என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே இந்திரன் வணங்கி, எழுந்து, சிரசின் மேலே கைகளைக் கூப்பிக்கொண்டு நின்று, "கிருபா சமுத்திரமாகிய சுவாமி! உம்முடைய தலத்தின் எல்லைக்குச் சமீபமாக வருமளவில் என் கொலைப்பழியும் முற்பிறப்பிலே செய்த தீவினையும் நீங்கப் பெற்று, உம்முடைய திருவடித் தாமரை மலரைத் துதித்துப் பூசை செய்யவும் உரியனானேன்! இதனிற் சிறந்த பேறு யாது? இத் திருவடித் தாமரை மலர் களை இவ் வண்ணமே எந்நாளும் பூசை செய்ய விரும்புகின்றேன். இதுவே அடியேன் விருப்பம்" என்று விண்ணப்பஞ் செய்தான். சோமசுந்தரக் கடவுள், "அன்பனே! இருது களுள்ளே சிறந்த வசந்த ருதுவும், மாசங் களுள்ளே சிறந்த சித்திரை மாசமும், நட்சத் திரங்களுள்ளே சிறந்த சித்திரை நட்சத் திரமும், திதிகளுள்ளே சிறந்த பௌர்ணமி திதியும் கூடுஞ் சித்திரைச் சித்திரை தோறும் வந்து வந்து, நம்மைப் பூசை செய்வாயாக; இதனால் முந்நூற்றறுபத்தைந்து நாளும் பூசை செய்த பயன் கிடைக்கும். நீ சுவர்க்க லோகத் திற் சென்று, பல போகங்களையும் அனுபவித் துக்கொண்டு வாழக் கடவை. அதன்மேல் உனக்கு மலபரிபாகம் உண்டாக, பிரமா விட் டுணு முதலிய தேவர்களுடைய பதங்களினும் பிறவற்றினும் நிராசை உண்டாகும். அப் பொழுது உனக்குச் சாயுச்சியந் தருவோம்" என்று திருவாய் மலர்ந்து, விடைகொடுத்து இலிங்கத்தின் மறைந்தருளினார்.

இந்திரன் உடம்பெங்கும் புளகங் கொள்ளச் சிரசின்மேலே கைகளைக் குவித் தான்; அடியற்ற மரம்போல விழுந்தான்; எழுந்து, ஆனந்த அருவி சொரிய நின்றான்; பல முறை துதிசெய்து கூத்தாடினான்; பின் இலிங்க சமீபத்திலிருந்து, சிவனை இதயக் கமலத் திலே தியானித்து, பஞ்சாட்சரத்திலே நூற்றெட் டுருச் செபித்து, செபத்தையும் கன்மங்களை யும் தன்னையும் நிவேதித்து, குருவைப் பூசித்து, "அபராதம் பொறுத்தருளும்" என்று விண்ணப் பஞ் செய்து, பூசையை முடித்தான். சிவபிரா னுடைய திருவடிகளைப் பிரிதலாற்றாது,

வருத்தமுற்று, அவருடைய திருவருளாணைக்கு அஞ்சி, பிரியா விடை பெற்றுக்கொண்டு, சுவர்க்கத்தை அடைந்து, சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளைச் சிறிதும் மறவாத சிந்தையோடு முன்போல அரசு செய்து கொண்டிருந்தான். சித்திரைச் சித்திரை தோறும் வந்து சோமசுந்தரக் கடவுளைப் பூசித்தான்.

(தொடரும்...

## கடவுள் எங்கே?

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என வான்புகழ் வள்ளுவன் தம் குறளில் கூறும் ஆதிபகவன் யார்? என நாம் சிந்திக்கும் நிலையில் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதியை நாம் பாடக்கேட்டே என மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் பாடும் ஆதி யார்? என எம்முன் ஓர் வினா எழுகின்றது. "அ" தொடங்கி "ஃ" வரையான உயிர் எழுத்துக்கள் ஆதிபகவானால் ஆக்கப்பட்டவை எனில் அது சிவனையும் சக்தியையும் தன்னகத்தில் கொண்ட சிவன் சக்தியையே சுட்டும் என நாம் எண்ணலாம்.

கடவுள் எங்கே இருக்கின்றார். அவரை நாம் கண்ணால் காண முடியுமா? அவர் ஓர் ஜடப் பொருளா? இத்தகைய வாதப் பிரதிவாதங்கள் இன்று சில நாஸ்திக வாதிகளால் பேசப்பட்டு வருகின்றது.

கடவுள் என்ற சொல்லை நாம் எடுத்துக் கொண்டால் கட+உள்= கடவுள் என வருகின்றது. அதாவது மனிதனின் உள்ளத்தைக் கடந்தவர் ஆகின்றார். ஆகவே நாஸ்தீக வாதம் புரியும் அனைவரது உள்ளங்களிலும் அவர் பிரதாபித்துள்ளார் என நாம் கொள்ளலாம். அவனின்றி அணுவும் அசையாது என்ற வாக்கியத்தின் "அவன்" என்பது யாரைக் குறிக்கின்றது என்பதிலிருந்து இதனை நாம் புரிந்துகொள்ளலாம்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் அடிக்கடி தமது சமயப் பிரசங்கங்களில் பின்வரும் பாடலை எடுத்து சொற்பொழிவாற்றுவதை நாம் கேட்டிருக்கின்றோம். அப்பாடல் இதோ:

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்பஞ்ச பூதம்
பரத்துள் மறைந்தது பார்பஞ்ச பூதம்

இத் தத்துவம் மிக்க இப்பாடலின் பொருளைச் சற்று நாம் காண்போம். யானையின் முன்னால் ஓர் பாரிய மரம் நிற்கின்றது. யானையின் பின் நின்று நாம் பார்க்கும்போது யானைதான் நமது கண்ணுக்குத் தெரிகின்றது. மரம் தெரிவதில்லை. நாம் மறுபுறத்தில் மரத்தின் பின் சென்று பார்க்கும்போது மரம்தான் நமது கண்ணுக்குத் தெரிகின்றது. யானை தெரிவதில்லை. இதுபோன்றே இப்பூமியானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களால் ஆனது.

யானையின் உள் அடக்கமாகின்றது மரம். மரத்தின் உள்ளடக்கமாகின்றது யானை. இதுவே ஒன்றினை ஒன்றின் உள்ளடக்கமாகின்றது. இப்பஞ்சபூதங்களினால் ஆன பூமியே கடவுளின் இருப்பிடம் என நாம் கொள்ளுதல் மிகையாகாது.

காற்று வீசுகின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் அது ஓர் மரத்தில் மோதும்போது சத்தம் தோன்றுகின்றது. மரக்கிளைகள் அசைகின்றன. இலைகள் உதிர்கின்றன. சில சமயம் மரங்களே சரிந்து விழுகின்றன. இது இயற்கையோடு ஒன்றிய நிகழ்வாகும்.

ஆகவே இயற்கையின் ஒன்றிய சக்தியே நாம் காணும் கடவுளாவர். இதனைப் பலபல உருவில் நாம் கண்ணால் காண்கின்றோம்.

*-பொ. சின்னையா-*

# விலை மதிக்க முடியாத சொத்து

– **திரு பூ.க. இராசரத்தினம்** அவர்கள் –

அது ஒரு சிறிய கிராமம். அருகே அடர்த்தியான காடு. குளிர்மையை ஏற்படுத்த குளங்கள். உயர்ந்து வளர்ந்த கனி தரும் மரங்கள். பசுமையான வயல்வெளிகள். பாடும் பறவைகள்.

இக்காட்டினுள் ஒரு புறத்தில் லட்சுமியின் வீடு. அடிக்கடி தோன்றி மறையும் நாட்டுக் கலவரத்தில் உயிரைப் பறிகொடுத்தான் லட்சுமியின் கணவன் கதிரேசன். லட்சுமி விதவை ஆனாள். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். வீரப்பனும் கண்ணனும் படிப்பை இடையில் நிறுத்தி விறகு வெட்டி விற்றும், வீட்டுத் தோட்ட வருவாயுடனும் வாழ்க்கைப் படகை மெதுவாக ஓட்டி வந்தார்கள். லட்சுமியின் இல்லம் சிறியதாயினும் அவளது உள்ளம் பெரியதாக இருந்தது. சில வருடங்களுக்கு முன் முடக்குவாத நோயினால் லட்சுமி பீடிக்கப்பட்டபோதும் சமையல் வேலையை இயன்ற அளவுக்குச் செய்து உணவு கொடுக்கத் தவறவில்லை. பிள்ளைகளுக்கு அடிக்கடி அறிவுரை வழங்கினாள். கண்ணன் தாயின் சொற்களைக் கேட்டு அகமகிழ்ந்தான். சுகம் அடைந்தான்.

"அன்பு இன்பமானது. எல்லோருக்கும் சொந்தமானது. அன்பு கருணையின் வடிவம்; ஒற்றுமையின் ஆணி வேர். தனியே மூளையை மட்டும் உபயோகிப்பதால் போதியளவு அன்பு இரக்கம். காருண்ணியம் வளர வாய்ப்புக் கிடையாது" லட்சுமி அழகாகக் கூறினாள்.

கண்ணன் தாய் கூறிய வார்த்தைகளை நினைவில் பதித்து திரும்பக் கூறுவதில் இன்பம் கண்டான். ஆனால் வீரப்பனால் அவற்றை நயக்க முடியவில்லை. தனது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்க முடியவில்லை என்று கவலை லட்சுமியை வாட்டியது. கண்ணீர் வடித்தாள். துயரங்களின் தொடக்கம் கண்ணீரில்த்தான். ஆனால் அதுவே தொடர் கதை ஆகிவிட்டால்... உழைப்பின் உயர்வை உணர்த்தினாள். இருவரும் உழைக்கத் தொடங்கினார்கள். நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது. ஆனால் ஒரு நாள் சூரியன் மேலேற வெப்பம் அதிகரித்தது. தீ பரவியது. குடிசைகளால் எப்படித் தாக்குப் பிடிக்க முடியும். தீ அணைக்கும் படை கிராமத்தில் ஏது?

"நல்ல பெறுமதியுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு ஓடுங்கள். என்னைப் பற்றி கவலைப்படாதீர்கள்" என்று கத்தினாள் லட்சுமி. வீரப்பன் பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்பிப் பாராது காட்டுக்குள் ஓடினான். பலரும் ஓடினார்கள். கூக்குரல் கேட்டு தோட்டத்திலிருந்து விரைந்து வந்த கண்ணன் தீயிலிருந்து தாயாரைக் காப்பாற்றி தனது தோள்களில் சுமந்து சென்றான். அவனுக்குத் தாயார் தான் இப்பூமியில் விலை மதிக்க முடியாத சொத்து.

காட்டுக்குள் புகுந்த வீரப்பன் வழிப் பறிக் கொள்ளைக்காரர்களிடம் பொருட்களை பறிகொடுத்துவிட்டு துயரத்துடன் உயிரைக் காப்பாற்ற ஓடினான். திருடர்கள் கண்ணனை மறித்தார்கள். பெறுமதியான சொத்துக்களை கொடுக்கும்படி கொள்ளைக் கூட்டத் தலைவன் கட்டளையிட்டான். "தலைவா! என்னுடைய விலைமதிக்க முடியாத சொத்து எனது தாய்தான்" என்றான் கண்ணன். தலைவனின் கண்கள் கண்ணீரால் நிறைந்தது. வெட்கத்தால்

தலையைத் தாழ்த்தி மறைக்க முயன்றான். "நோய்வாய்ப்பட்ட பெண்ணுக்கும், கண்ண னுக்கும் தண்ணீர் கொடுங்கள்" தலைவனின் கருணை மிகுந்த வார்த்தைகள். எல்லோரும் அனுதாபப்பட்டார்கள். கொள்ளையர் தலை வனுக்குக் கண்ணனின் கருணைச் செயல் அபரிதமான நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது. அன்று தொட்டு கொள்ளையடிக்கும் கொடிய பழக்கத்தை கைவிட்டார்கள். கண்ணனுக்கும் தாய்க்கும் தங்குவதற்கு குடிசை அமைத்துக் கொடுத்தார்கள். லட்சுமியை கண்கண்ட தெய் வம் எனக் கருதி வணங்கினார்கள்.

கண்ணனால் தனது சகோதரனை மறக்க முடியவில்லை. சில நாட்களுக்குள் தேடி அவனை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

"கண்ணா என்னை மன்னித்துவிடு. தாயே மன்னித்துவிடு" கதறி அழுதான் வீரப் பன். "இரக்கமற்ற வீரப்பன் தவறை உணர்ந்து விட்டான். இறைவனே மன்னிப்பாயாக" என்று லட்சுமி வேண்டினாள். "அண்ணா பழையதை மறந்து புதிய பாதையில் செல்வோமாக." மீண்டும் இல்லற வாழ்வு நல்லற வாழ்வாக மாறியது.

## நியாயம் உண்டோ?

எத்தனையோ பேர்களது சொத்துக்களைச் சுரண்டி
ஏப்பமிட நினைக்கின்ற எத்தர்களும் இங்கு
சத்தியம், நேர்மை வழி நடக்காது பிறர் வாழ்வில்,
சஞ்சலங்கள் ஏற்படுத்த நினைப்போர் தாமும்
தத்தமது குறைகளினைத் தாம் தீர்க்க மாட்டாது,
தரங்கெட்ட வாழ்வினையே வாழுவோரும்,
வித்தகனே! முருகா! நின் தலத்தில் வந்து,
வேண்டுதல்கள் செய்வதிலும் உண்டோ நியாயம்?

பெற்ற தாய் தந்தையரைப் பேணாதாரும்,
பெரியோர்கள் தமையிங்கு மதிக்காதோரும்,
கற்றவர் தாம் என்று கர்வம் கொள்வோரும்,
கடமைகளைச் சரிவரவே செய்திடாரும்,
மற்றவர்கள் உழைப்பை நிதம் சுரண்டுவோரும்,
மதுவருந்தி மதி மயங்கித் திரிகின்றோரும்,
அற்புதனே! முருகா நின் தலத்தில் வந்து
அருள் வேண்டி நிற்பதிலும் உண்டோ நியாயம்?

கையேந்திப் பிச்சையினைக் கேட்போர் மீதும்,
கருணையினைக் காட்டிடவே விரும்பிடாரும்,
பொய்பேசிக், கொலை, களவு பாதகங்களைச் செய்து,
பொல்லாதாராய் இங்கு வாழுவோரும்,
கைகொடுத்துத் தருணத்தில் உதவிடாது
காழ்ப்புணர்வு கொண்டிங்கு அலைகின்றோரும்,
ஐயா! முருகா! நின் திருத்தலத்தை
அண்டிவந்து தொழுவதிலும் உண்டோ நியாயம்?

-கி. குலசேகரன்-

# வழித்துணை 27

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 உள்ளத்தை உள்ளபடி உரியவற்கு உரைப்பதனால்
கள்ளமின்றிக் கனகருமம் கச்சிதமாய் முடித்திடலாம்
எள்ளளவும் உண்மையிலா வார்த்தைகளை எடுத்தியம்பில்
உள்ளதையும் இழந்துநாம் உளம்வருந்த நேர்ந்துவிடும்.

02 இறப்போடு எல்லாமே முடிந்ததாக எண்ணாதீர்
இறப்பிற்கு பின்னால்தான் சிறப்புண்டு அறிந்திடுவீர்
அருவமாய் நின்ற இறை உருவமாகி உதவுதல்போல்
உருவமாய் இருந்திறந்தோர் அருவமாய்ப் பின்தொடர்வர்.

03 இருக்கின்ற போதில்நீர் இயற்றுகின்ற கருமந்தான்
இறப்பிற்குப் பின்னாலும் இறவாது இங்கிருக்கும்
பிறப்பிற்குப் போவதற்காய் இறப்பென்ற நிலைவருமுன்
இறவாமல் இருப்பதற்காய் சிலகருமம் இயற்றிடுவீர்.

04 எதிரிகளாய் யாரையும்நீர் எண்ணாமல் இருந்திட்டால்
மதியுடையோர் மனதிலுமை மறவாமல் வைத்திருப்பர்
நிதியென்றும் பதியென்றும் நித்தம்நீர் பகைசுமப்பின்
புதிதில்லை உண்மையிது உம்மையேநீர் பகைத்திடுவீர்.

05 பணிவு என்பதைப் பலவீனம் என்றிராதீர்
அணிகளில் சிறந்ததே பணிவுதான் என்றறிவீர்
துணிவென்று சொல்லிப்பெரும் துயர்க்கடலில் வீழ்வதிலும்
பணிவோடு நடந்திட்டால் நன்மைபல பெற்றிடலாம்.

06 பூகோளம் குளிர்ந்ததுவும் புல்லிங்கு முளைத்ததுவும்
ஓகோவென் றெழுந்ததுவும் ஒன்று பலவானதுவும்
பாகோடு பருப்பும்நாம் படைத்திடவே எமைக்காக்கும்
ஏகோபித் திருக்குமிறை சக்தியினால் என்றறிவீர்.

*சிறிய தவறுகளைத் திருத்திக்கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.*

07 கோவிலில் குலதெய்வம் குடியிருக்கும் வேளையிலே
பூவினால் பூசைசெய்வர் பொருளுண்டு அறிந்திடுவீர்
தாவியே வந்திங்கு தன் கடமை முடித்துப்பூ
மேவியிறை அடைதல்போல் நாமடைவோம் என்பதாகும்.

08 என்னால்தான் எல்லாமே முடியுமென்று இருந்துவிட்டு
தன்னால்பின் எதுவுமே முடியாமல் போமிடத்து
உன்னால்தான் முடியும்நீ எழுந்தருள்வாய் என்றழைத்தால்
முன்னாளை மறந்திறைவன் பின்னாளில் வருவானோ.

09 எனக்குப்பின் என்சொத்து பிறர்க்கென்று எழுதிடலாம்
பிறர்க்குப்பின் அவர்சொத்து எனக்கென்றும் எழுதிடலாம்
இவையெல்லாம் இறைக்குப்பின் என்றெண்ணத் தவறிவிட்டால்
சிறைக்குப்பின் விடுதலையும் சிறுபுல்லாய் முளைப்பதேயாம்.

10 துன்பங்கள் சூழ்ந்திடவே கோவிலை தேடுதலும்
இன்பங்கள் பெருகிடவே ஆலயத்தை நாடுதலும்
நன்றோதான் அதனிலும் நன்றிங்கு யாதென்றால்
என்றுபக்தி எழுகிறதோ அன்றங்கு செல்லலாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும்.*

# முருகப்பெருமான் மீதான நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்களின் இலக்கியங்கள்

– **திரு கௌ. சித்தாந்தன்** அவர்கள் –

## அறிமுகம்

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்கள் (1878 - 1953) இயற்கை எய்துவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த அவரது "இலங்கை வளமும் தாலவிசாலமும்" (1950) எனும் நூலில் அவரால் இயற்றப்பெற்றனவாக பதினேழு இலக்கியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் ஏழு நூல்கள் முருகன் பெருமை பேசுவன. இந்த நூலில் குறிப்பிடப்படாத எட்டு கவிதை நூல்கள் பற்றிய விபரங்கள் எமக்குத் தெரியவந்துள்ளன. ஒட்டுமொத்தமாக வைத்து அவற்றைப் பார்க்கின்றபோது புலவரவர்கள் முருக வழிபாட்டுக்குக் கூடுதலான இடம்கொடுத்திருந்தமை தெரிகின்றது.

கலியுகவரதன் முருகப்பெருமான் கலியுகத்திலே கைகொடுத்துதவும் தெய்வமாக தமிழ்ச் சைவர்களில் பெரும்பான்மையோரால் வழிபடப்பட்டு வருகின்றார். எம்மவர்களுக்கு இன்னல்கள் நேரும் காலங்களிலே "யாமிருக்கப் பயமேன்" என்ற தமது அருள்மொழியால் எம்மை இரட்சிப்பவர். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் அந்நியர்களினால் பேராபத்து நேர்ந்தபோது இந்து சமயத்தை அழியவிடாமல் காத்தது முருக வழிபாடே எனலாம். அக்காலத்தவரான அருணகிரிநாதரின் தனிப்பட்ட வாழ்விலேயும் முருகப்பெருமான் கைகொடுத்துதவியமை போன்று தமது பல இடர்பாடுகளுக்கும் தீர்வைத் தரலாம் என்ற நம்பிக்கையைப் புலவரவர்களுக்கு முருகவழிபாடு ஏற்படுத்தியிருக்க வேண்டும். அருணகிரிநாத சுவாமிகளைப்போல இவரும் முருகன்மீது அதிகமான பாடல்களைப் பாடியமையினை எடுத்துப் பார்க்கும்போது இப்படி எண்ண வைக்கின்றது. மேலும் எமது நாயன்மார்களிலே அப்பரடிகள் திருவதிகை வீரட்டானேஸ்வரர்மீது பதிகம் பாடி "சூலை" என்கின்ற நோய் நீங்கப் பெற்றமையும் ஞானசம்பந்தர் திருவாலவாய்ப் பெருமான்மீது திருநீற்றுப் பதிகம் பாடியபோது பாண்டிய மன்னனுக்கேற்பட்ட வெப்புநோய் மாறியமையும் புலவரவர்களும் அறியாதவையல்ல.

## தோற்றச் சிறப்பும் பாடுந்திறனும்

சோமசுந்தரப் புலவரவர்கள் கருவிலே திருவுடையார். இவரின் தந்தையார் கதிர்காமத் தலத்தின்மீது ஈடுபாடுடைய கதிர்காமர் என்பவராவார். தாயார் இலக்குமிப்பிள்ளை. இவர்களிருவரும் நவாலியூர் அட்டகிரி முருகப்பெருமான்மீது நேர்த்தி வைத்துத்தான் புலவர்

பிறந்ததாக வரலாறு. புலவரின் அகப்புறத் தோற்றப்பொலிவைப் பற்றி நவாலியூர் நடேசன் எழுதுகையில், குனித்த புருவத்தில் பால் வெண்ணீறு, பனித்த பார்வையிற் கடவுட் சக்தி, இனித்த மனம், முருகன் புகழ்பாடும் செந்தமிழ் கொஞ்சும் நா! என்று வர்ணிக்கின்றமையும் நோக்குதற்குரியது.

ஈழ நாட்டிலே புராணபடனஞ் செய்வோரின் செல்வாக்கிற்குப் புலவரவர்களும் பெரிதும் உட்பட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. எமது நாட்டிலே புராணபடன மரபை நாவலரவர்களே தொடக்கி வைத்தார் என்று அறிகின்றோம். நாவலர் காலத்திலே (1822- 1879) புலவர் பிறந்துவிட்டார். அத்துடன் நாவலர் காலத்தைச் சேர்ந்த பல சைவப் பெரியார்களுடன் பழகும் வாய்ப்பையும் பெற்றவர் புலவர்.

இவர் தமது தந்தையாகிய கதிர்காமரிடம் கந்தபுராணத்தையும், இராமலிங்கம் உபாத்தி யாயரிடம் திருவாதவூரடிகள் புராணத்தையும், சிவஞானசித்தியாரை கோப்பாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயரிடமும் கற்றுத் தேர்ந்ததாக வே.க.ப. நாதன் எழுதியுள்ளார். கந்தபுராணபடனப் பயிற்சியும் சிவஞானசித்தியார் அறிவும் இவரை "கந்தபுராணக் கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மைநூற் கருத்தும்" (1938) எனும் நூலை எழுத வைத்திருக்கின்றது. கந்தபுராண அறிவும் இயல்பாக இவருக்கிருந்த கவி புனையும் ஆற்றலும் பயிற்சியும் முருகப்பெருமான் மீதான ஆராக் காதலும் அப்பெருமான்மீது பல பாடல்களைப் பாடவைத்தன.

### முதற் பாடல் முருகன் பாடலே

சேக்கிழாருக்கு சிவபெருமான் "உலகெலாம்....." என்று தொடக்கி வைத்ததைப்போல புலவரவர்களுக்கு அவரது ஆசிரியர்களிலே ஒருவராகிய திரு வைத்திலிங்கம் அவர்கள் "ஆறுமுகமெனத் தொடக்கிக் கதியென முடியும்" என்று ஒரு வெண்பா பாடுமாறு கேட்டதற்கமைவாக புலவர்,

"ஆறுமுகமுடையாய் ஆறிரண்டு தோளுடையாய்
ஏறுமயிலுடையாய் யென்னுடையாய் - கூறுசெயும்
வேலுடையாய் என்றன் வினையுடைய மிதிக்குங்
காலுடையாய் நீயே கதி"

எனும் பாடலைப் பாடினாரென்பர்.

### உச்சமான முருக பக்திப்பாடல்

சோமசுந்தரப் புலவரவர்களின் இலங்கை வளப் பாடலில் வரும் கதிர்காமத் தலம் தொடர்பான உணர்ச்சிப் பெருக்குள்ள இரண்டு பாடல்கள்தான் எம்மை அவரது ஏனைய முருக பக்திப் பாடல்களைத் தேடிப் பிடிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன. அவற்றில்,

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
யன்பொடுசி வாயவென வருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்

புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாகசுகந் தாவென்று பாடிக்
கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே.

(இலங்கை வளப் பாடல் 154)

எனும் பாடல் எம்மைப் பக்திமழையில் நனைந்துருகச் செய்வதுடன், தமிழ்ப்பாட நூலொன்றில் ஒரு கவிஞரை,

இலங்கைவளம் கேளாத செவியென்ன செவியே
இரும்பாலே செப்பாலே செய்திட்ட செவியே என்று பாடவும் வைத்தது.

## புலவரவர்களுடைய பக்தி இலக்கிய வரலாறு

இன்றுவரை புலவரவர்களின் இலக்கியங்கள் கால ஒழுங்கில் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. வே.க.ப. நாதன், இரசிகமணி கனக. செந்திநாதன் ஆகியோரால் எழுதப்பட்ட நூல்களிலாயினும் சரி, C.J. இளையதம்பி மற்றும் பண்டிதர் சோ. இளமுருகனார் ஆகியோரால் பதிப்பிக்கப்பெற்ற நூல்களிலாயினும் சரி புலவரின் சில நூல்கள் எப்போது முதன்முதலாக வெளிவந்தன என்ற குறிப்புக்களைக் காணமுடியவில்லை.

## மிடிமாலையும் அட்டகிரிப் பதிகமும்

புலவரவர்களால் பாடப்பெற்ற முருக பக்திப் பாடல்களிலே அவரது தொடக்க காலத்திற் பாடப்பட்டவை மிடிமாலையும் அட்டகிரிப் பதிகமுமாம். இவற்றில் மிடிமாலை, முப்பது செய்யுள்களைக் கொண்டதெனவும் 1915ஆம் ஆண்டில் நிகழ்ந்த உலகப் போர்க் காலத்திலே புலவரவர்களுக்கு ஏற்பட்ட கொடிய வறுமையினைப் போக்குவதற்காகப் பாடப்பெற்றதாகவும் புலவரவர்களின் "கதிரைச் சிலேடை வெண்பா" நூற் பதிப்புரையில் "பொன்னின்மலை வெள்ளிமலையுன் முதுசொம்..." என்று தொடங்கும் பாடலையும் எடுத்துக்காட்டி எழுதப் பெற்றுள்ளது. இப்பாடலில் புலவர் முருகப்பெருமானின் பெருஞ் செல்வ வளத்தினையும் அவரின் கருணைத் திறத்தையும் வியந்து கூறித் தமது வேண்டுதலை முன் வைக்கின்றார். நூல் வடிவிலான "மிடிமாலை" எமது பார்வைக்குக் கிடைக்கவில்லை. எந்தத் தலத்தின்மீது பாடப்பட்டதென்பதையும் அறியமுடியவில்லை.

## அச்சில் வெளிவந்த முதல்நூல் அட்டகிரிப் பதிகம்

புலவரவர்கள் நிறைவாகப் பாடிய முதல்நூல் "அட்டகிரிப் பதிகம்" என்பது பலரறிந்த விடயமாயினும் அஃது 1910ஆம் ஆண்டுதான் வெளியிடப்பெற்றதெனும் உண்மை அவர்கள் அறியாததொன்று. அவ்வாண்டு இந்த நூல் சென்னையில் இருந்த சூளை மெய்கண்டான் யந்திரசாலையில் புலவரின் சகோதரராகிய க. ஆறுமுகம்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது. கணபதி, வாணி, குரு என்போர்மீது வேண்டுதல் செய்தே இதனைப் பாடியுள்ளார். புலவர் மூவருக்கும் துதிசெய்வதனைத் தமது ஏனைய பக்திப் பனுவல்களிலும் பின்பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

*அதிஷ்டத்தை என்றும் நம்பாதே. அது உன்னைச் சோம்பேறியாக்கும்.*

"கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும்
கொடிது இளமையில் வறுமை"

என்று ஔவை பாடியபடி வறுமை நமது புலவர்களையும் வாட்டி வருத்தியிருக்கின்றது. கூடவே பிணிகளும் அவரைத் துன்புறுத்தியமையும் அவர் பாடல்களில் தெரிகிறது. இவற்றிற்குக் காரணம் பழையவினை என்பதனால் இவற்றிலிருந்து மீட்சிபெற ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்,

"கொடியவினை மிடி பிணிகள் மடியவடி
யுதவு சிவகுமரகுரு பரமுருகனே"

எனக் குறிப்பிட்டுப் பரவுகின்றார். இப்பதிகத்தை விட "அட்டகிரி வெண்பா" என ஒன்றும் பாடப்பட்டதாக "மருதன் அஞ்சலோட்டமும் புலவர் வரலாறும்" (பக்.30) எனும் நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூல் கிடைக்கப்பெறவில்லை.

## பிற பிரபந்தங்கள்

முற்றாக மாற்றமுடியாத தொற்றா வியாதிகளில் "மூலநோய்" என்பது ஒன்று என்று கூறப்படுகிறது. புலவரவர்களின் ஐம்பதாவது வயதில் இவருக்கு இந்த நோய் ஏற்பட்டபோது "அட்டகிரிக் கலம்பகம்" பாடவே அந்த நோய் நீங்கியதாகக் கூறப்படுகின்றது. "நவாலியூர் அட்டகிரி கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேக மலர்" ஒன்று 14.07.1967 அன்று வெளியிடப்பெற்றது. இம்மலரை அன்பர் திரு க. கௌரிகாந்தன் கொடுத்துதவினார். இம்மலரில் இடம்பெற்றுள்ள புலவரவர்களால் பாடப்பெற்ற அட்டகிரிப் பதிகமும், அட்டகிரி கந்தசுவாமியார் திருவூஞ்சலும் மலரை பக்தி மணங்கமழச் செய்திருக்கின்றன.

## கந்தவனநாதர் மேற் பாடப்பெற்ற பாடல்கள்

அருணகிரிநாத சுவாமிகளாற் பாடப்பெற்ற ஈழத்து முருக தலங்களில் யாழ்ப்பாணத்துப் பொலிகண்டி கந்தவனநாதர் ஆலயமும் ஒன்றாகும். புலவரவர்களின் சமகாலத்தவரான சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (1878- 1953) அவர்களால் அவரின் பிற்காலத்தில் பயபக்தியுடன் பூசிக்கப்பெற்ற தலமும் இதுவேயாகும். பல வாரங்களாக சன்னி நோயால் பீடிக்கப்பட்ட புலவரவர்களை கந்தவனநாதரிடம் ஆற்றுப்படுத்தி சுகம்பெறச் செய்த பெருமை பெரியாரவர்களையும், திக்கம் சி. செல்லையாப்பிள்ளை அவர்களையும் சாரும் என்ற உண்மை பலரறியாதது. பெரியாரின் துணையுடன் கந்தவனநாதரை வணங்கி அப்பெருமான்மீது நான்மணிமாலை, பதிகம், திருப்பள்ளியெழுச்சி பாடி நோய் நீங்கப் பெற்றார். புலவரது நான்மணிமாலை, வெண்பா, கட்டளைக் கலித்துறை, நேரிசை ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் என்பவற்றாலானது. இந்நூலில் வரும் திருப்பள்ளியெழுச்சிக்கு திக்கம் சி. செல்லையாபிள்ளை அவர்கள் சுருக்கமானதொரு முன்னுரையினை எழுதியிருக்கின்றார். கோலாலம்பூரில் இலட்சுமி பிரசுராலயத்தில் பதிப்பிக்கப்பெற்ற சிறப்பினை உடையது இந்நூல்.

## நல்லைப் பெருமான் மீதான பாடல்கள்

நல்லூர் முருகப் பெருமான்மீது நல்லூர்க்கந்தர் பதிகம் (1918), நல்லையந்தாதி (1931), நல்லூர் முருகன் திருப்புகழ் (1944), நல்லூர்க் கந்தசுவாமி அட்டகம் எனும் பாடல்களைப் புலவரவர்கள் பாடியுள்ளார். புலவரவர்கள் பாடிய இப்பாடல்களை அறிஞர் குல. சபாநாதன்

அவர்கள் (1907- 1986) தமது நல்லூர்க் கந்தசுவாமி (1971) எனும் நூலில் பிரசுரித்திருக்கிறார். நல்லையந்தாதியினைப் பதிப்பித்த புலவரவர்களின் சகோதரராகிய க. வேலுப்பிள்ளையவர்கள் தமது விருப்பத்திற்கமைவாகவே புலவர் இதனைப் பாடிக் கொடுத்ததாக நல்லையந்தாதியின் பதிப்புரையில் (பக்.4) குறிப்பிட்டுள்ளார். நல்லையந்தாதி மொத்தம் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பன்னிரண்டு பாடல்களை மட்டும் குல. சபாநாதன் பதிப்பிக்க அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் முருகன்மீது புலவரவர்களாற் பாடப்பெற்ற திருப்புகழ் மகத்துவம் மிக்க தொன்றெனத் தெரிகிறது. இத்தலத்தின்மீது பாடப்பெற்ற திருப்புகழ் பாடல்களில் ஆறு பாடல்களை மட்டும் குல. சபாநாதன் தமது நூலிற் பிரசுரித்தமை அரிய தொண்டென்றே கூறவேண்டும். காப்புச் செய்யுள்களிலே மூத்த பிள்ளையார், குரு ஆகியோர் துதிக்கப்படுகின்றனர். குல. சபாநாதனின் நூலில் பண்டிதர் ஆ.சி. நாகலிங்கபிள்ளை நல்லைப் பெருமான்மீது பாடப்பெற்றதான திருப்புகழ் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. திருப்புகழிலே முருகனை "பெருமாளே" என்று நிறைவு செய்வது அல்லது விளிப்பதுதான் மரபு. ஆனால் பண்டிதரோ "நல்லைத் திருநகர் மேவிய பெருமானே" என்றுதான் பாடியுள்ளார். புலவரவர்கள் "பெருமானே" என்றும், "பெருமாளே" என்றும், "தம்பிரானே" என்றும் பலவாறாகப் பாடிப் பரவுகின்றார். 31 திருப்புகழ்ப் பாடல்களைக் கதிர்காமத் தலத்தின்மீது பாடியருளிய அருணகிரிநாதரவர்கள் ஒரு பாடலை மட்டுமே நல்லூர்மீது பாடக்கூடியதாக இருந்தது. இந்தக் குறை புலவரவர்களால் ஓரளவு நிறைவு செய்யப்பெற்ற தென்றே கூறத் தோன்றுகின்றது.

### கதிர்காமத்தலப் பாடல்கள்

கதிர்காம வேலவர் பதிகம் (1923), கதிரைச் சிலேடை வெண்பா (1955), கதிர்காம யாத்திரை (1918), தனிப்பாடல்கள் எனும் தலைப்புகளிலே புலவரவர்களது கதிர்காமத்தலத்தின் மீதான பாடல்கள் காணப்படுகின்றன. கதிர்காம யாத்திரைப் பாடல்கள் எமது பார்வைக்குக் கிடைக்கவில்லை. கதிர்காமத் தலம் தொடர்பாகப் புலவராற் பாடப்பெற்ற பாடல்களிலே முதலிற் பாடப்பட்டது கதிர்காம வேலவர் பதிகமாகும். 1921ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப் பெற்றதாக குல. சபாநாதன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எம்மிடம் இதன் முதற் பதிப்பு உள்ளது. அதிலே 1923ஆம் ஆண்டு அட்டன் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புலவரவர்களின் சகோதரராகிய திரு க. சரவணமுத்து அவர்களின் கண்ணின்மீது ஏற்பட்ட நோயைக் குணப்படுத்துவதற்காகவே பாடப்பட்டு, நோயும் குணமானமை வரலாறு. உரிய வேண்டுதலுக்குரிய அகச் சான்றாக கதிர்காம வேலவர் பதிகத்தில் வரும்,

"விழிமாசு தீர்த்தெனக் கருள்செய்குவாய்" (1)
"என்னிருகண் மணியே மணிக்குளொளி யேயென்ற
னிடர்கெடுத் தருளீகுவாய்" (2)
"விழிகுளிரவுன் திருவுருக் காட்டியருள்வாய்" (5)
"கண்கண்டு தெரிசிக்க வரமருள்வாய்" (7)
"வாள்விழிக் குற்றபிணி யுந்தவிர்த் தெனையாள
மயிலேறி வந்தருள்வாய்" (10)

ஆகிய தொடர்கள் அமைகின்றன.

*அளவில்லாத ஆசை நமது நல்ல குணங்களை அழித்துவிடும்.*

## கதிரைச் சிலேடை வெண்பா

புலவரவர்களுடைய முருகபக்தி இலக்கியங்களிலே கதிரைச் சிலேடை வெண்பா (1955) எனும் நூலுக்கு முக்கியமானதொரு இடமிருக்கின்றது. இப்பக்தி இலக்கியத்தை C.J. இளையதம்பி அவர்களும் புலவரின் மகனாகிய பண்டிதர் சோ. இளமுருகனார் (1908-1975) அவர்களும் அழகாகப் பதிப்பித்திருக்கின்றனர். இளமுருகனார் அவர்களின் துணைவியாரான பண்டிதை பரமேசுவரியாரின் திட்பமும் நுட்பமும் உடைய பதவுரை, விருத்தியுரை என்பன புலவரின் பக்திச்சுவை மிக்க பாடல்களை மிகவும் அர்த்தப்படுத்துகின்றன. 100 பாடல்கள் இதில் உள்ளன. "உயர் வகுப்புகளிலே படிக்கும் மாணவர்கள் இந்நூலில் உள்ள செய்யுள்களையும் அவற்றின் வளமிகுந்த உரையையும் நன்கு படிப்பார்களாயின் பிழையின்றித் தெளிவான உரைநடை எழுதும் ஆற்றலைப் பெறுவர்" என்று அறிஞர் கா.பொ. இரத்தினம் (1908- 2010) அவர்கள் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை அரியதொரு மதிப்பீடே எனலாம். அகநூலறிஞரும் தமிழ்ப் புலமையாளருமான க.ச. அருணந்தி (1899- 1972) அவர்களது அணிந்துரையும் புலவரின் பாடல்களை நயத்துடன் கற்பதற்கான நல்ல வழிகாட்டியென்று கூறலாம்.

புலவரவர்களின் கண்ணிலே ஏற்பட்ட நோயைக் குணப்படுத்துமாறு கதிரைப் பெருமானை வேண்டிப் பாடப்பட்டமைதான் இக் கதிரைச் சிலேடை வெண்பாப்பாடல் பாடப்பட்டமைக்கான காரணம். இதன் 90 ஆவது பாடலில் வரும்,

"கண்ணறை போக்குங் கதிரையே - கண்ணருளி
வாகா முருகா..." எனும் வரிகள் இதனை நமக்கு உணர்த்துகின்றன.

இந்தக் கதிரைச் சிலேடை வெண்பாப் பாடல்களை பயபக்தியுடன் பொருளுணர்ந்து பாடினால் பல்வேறு இடர்களிலிருந்தும் விடுதலை பெற்று உய்திபெறுவர் என்பதுதான் இதன் உட்கிடை எனலாம்.

## தனிப் பாடல்கள்

கதிர்காமத் தலம் மீதான புலவரவர்களின் பாடல்களில் "கதிர்காம விபூதி" தொடர்பாகப் பாடிய பாடல் மகத்துவமுடையவை. அவற்றில் ஒன்று வருமாறு:-

மந்திரமுந் தானே மருந்து மதுதானே
சுந்தரமுந் தானாகத் தோன்றுமே - யெந்தை பிரான்
சோதிவடி வேற்குமரன் சுப்பிரமண் யன்கதிரைப்
பூதிமலை தந்த பொடி.

## மேலைக்கரம்பன் முருகக்கடவுள் திருவூஞ்சல்

சைவத் தமிழ்ப் பேரறிஞர் குல. சபாநாதன் அவர்களின் வேண்டுகோளின்படி புலவரவர்களால் 1941இல் பாடப்பெற்றதே ஊர்காவற்துறை மேலைக்கரம்பன் திருப்பதி முருகக்கடவுள் திருவூஞ்சல் பாடலாகும். பக்திச்சுவை ததும்பப் பாடப்பட்ட இப்பாடல்களை "திருவிழாக் காலங்களிலும் மற்றைப் பெருநாட்களிலும் முருகப்பெருமான் உலாப் போகும்போது அடியார்கள் பின்தொடர்ந்து ஓதிச் செல்லலாம்" என்று நூலின் முகவுரையில் (பக்.iv) நூலின் பயனைப் பற்றி குல. சபாநாதன் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாவைநகர் முருகவேள் பதிகம்**

யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்திபெற்ற முருகத்தலங்களுள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும். புலவர்களது மகள் ஒருவர் மாவை நகரில்தான் குடும்பமாக வசித்து வந்துள்ளார். எனவே இவர்களைக் காண்பதற்காக வரும்போது கந்தசுவாமியாரையும் தரிசித்த புலவர் அப்பெருமான்மீது பதிகம் பாடியமை இயல்பானதொன்று. பெறுதற்கரிதாகவிருந்த இப் பதிகத்தை புலவரின் மருகரின் நினைவு மலரில் கண்டு அவற்றைத் தமது "வரலாற்றுப் பெருமைமிக்க மாவைக்கந்தன் ஆலய திருத்தல வரலாறு" (2010) எனும் நூலில் பதிவு செய்துள்ளார் சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்.

இவற்றைவிட நவாலியூர் அந்திரான் முருகப்பெருமான் (1966)மீதும், கோலாலம்பூர் ஸ்கொட்றோட் சுப்பிரமணிய சுவாமி (1941) மீதும் முறையே ஊஞ்சல், பதிகம் பாடியதாகவும் "சைவத்தமிழ் வளர்த்த பதின்மர் (1972) எனும் நூலில் (பக்.66) "சொக்கன்" எனும் க. சொக்க லிங்கம் (1930- 2004) அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் இவை எமது பார்வைக்குக் கிடைக்கவில்லை.

**நிறைவுரை**

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்கள் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை பதினாயிரம் வரையிலாகும் என்பர். இவற்றில் பெரும்பாலானவை முருகப்பெருமான் மீதானவையாகும். இவற்றிலும் பெரும்பாலான பாடல்கள் புலவரது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட இடர்பாடுகளினால் எழுந்தவை என்று கூறப்பட்டாலும் அவை எம்மைப்போன்ற பலருக்கும் பயன்படக்கூடியவை என்பதில் நம்பிக்கையுண்டு. இவரது ஊஞ்சற் பாடல்கள், பதிகங்கள் ஆலய வழிபாடு மற்றும் உற்சவங்களின்போது பாடிப் பயன்பெறத்தக்கவை. எனவே பக்திநலங் கனிந்த இவரது கிடைத்தற்கரிதான பாடல்களைப் பொறுப்புடையோர் பதிப்பித்து வெளியிடுவது புண்ணிய கைங்கரியத்தின் பாற்படும்.

## குருடரின் விளக்கு

ஒரு கிராமத்தில் கண்பார்வையற்ற ஒரு முதியவர் வாழ்ந்து வந்தார். அவர் இரவு வேளைகளில் எப்பொழுது வெளியில் சென்றாலும், கையில் ஒரு விளக்கை எடுத்துச் செல்வது வழக்கம். வழமைபோல ஒருநாள் கையில் விளக்கோடு இரவில் நடந்து வந்த முதியவரை, சில இளைஞர்கள் ஏளனத்தோடு பார்த்துச் சிரித்தனர். "கண் தெரியாத உனக்கு கையில் எதற்கு விளக்கு?" என்று கேலி செய்தனர். வாலிபர்களின் கேள்விக்குப் பெரியவர் நிதானமாகப் பதிலளித்தார்.

"எனக்குக் கண் தெரியாது என்பது உண்மைதான். நான் இந்த விளக்கை எனக்காகக் கொண்டுவரவில்லை. உங்களைப் போன்று நன்கு கண் தெரிந்தவர்கள் என்மீது மோதாமல் இருக்கவே இந்த முன்னேற்பாடு" என்றார். முதியவரின் பேச்சைக் கேட்ட இளைஞர் தங்களது முட்டாள்தனமான கேள்விக்கு மன்னிப்புக் கோரினர்.

*நீதி:* எதையும் சிந்தித்தே பேசு.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

இ. சிவராசா கரவெட்டி (மாதாந்தம் 06 பல்கலைக்கழக மாணவர்களுக்காக) 15000. 00

| | | |
|---|---|---|
| ர. கஜானனன் | பருத்தித்துறை | 500. 00 |
| ரே. நிருஷன் | கோண்டாவில் மேற்கு | 1500. 00 |
| க. அன்னலக்ஷ்மி | உடுப்பிட்டி | 5000. 00 |
| S. வசந்தமலர் | புன்னாலைக்கட்டுவன் | 3500. 00 |
| S. ராஜேஸ்வரி | உடுப்பிட்டி | 10000. 00 |
|ச. பாலேந்திரன் | வல்வெட்டி | 3000. 00 |
| யோ. கரிகரன் | புலோலி | 1000. 00 |
| செ. அஜந்தன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| கி. ஸ்ரீதரன் | கரணவாய் | 1மூடை அரிசி |
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 10000. 00 |
| சு. சிவராசா | பலாலி | 1000. 00 |
| ம. பிரகலாதன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| இ. பஞ்சலிங்கம் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| கி. ஸ்ரீனிவாசன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| முருகதாஸ் மீனாட்சி நினைவாக | கொழும்பு | 5000. 00 |
| S. தவபாலன் | ஆவரங்கால் (கனடா) | 10000. 00 |
| க. நிருஜா | நல்லூர் | 3000. 00 |
| S. ராசரெத்தினம் | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| S. மயில்வாகனம் | லண்டன் | 15000. 00 |
| S. பாலசுப்பிரமணியம் | லண்டன் | 5000. 00 |
| கி. ஜெகதீஸ்வரி | வவுனியா | 2000. 00 |
| K. வசந்தன் | மிருசுவில் | 5000. 00 |
| தா. பிரதாபன் | இடைக்காடு | 3000. 00 |
| து. இராஜவீரசிங்கம் | பரந்தன் | 2000. 00 |
| திருமதி கா. சிவபாக்கியம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ஜெ. பரஞ்சோதி | பன்னாகம் | மரக்கறி, 2புட்டி அரிசி |
| N. ஸ்ரீஸ்கந்தராசா | காரைநகர் | 5000. 00 |
| யோ. கீதாஞ்சலி | வரணி | 5000. 00 |
| ந. கணேசன் | காரைநகர் | 1000. 00 |
| வி. வசந்தகுமாரி | நீர்வேலி வடக்கு | 2000. 00 |
| க. புவனேஸ்வரி | கோண்டாவில் | 1000. 00 |

*விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காண முடிகின்றது.*

| | | |
|---|---|---|
| வாகீஸ்வரன் மனோராஜி | லண்டன் | 20000. 00 |
| இ. ஆதித்தன் | நயினாதீவு | 15000. 00 |
| த. உதயகுமார் | சுன்னாகம் | 15000. 00 |
| ர. அஸ்வன் | காரைநகர் | 5000. 00 |
| தி. ஜான்சிராணி | ஏழாலை | 5000. 00 |
| ம. யதுஷாஜினி | ஏழாலை | 2000. 00 |
| ச. ராஜ்மோகன் | அராலி | 1000. 00 |
| ஜ. மதுஷன் | சங்கானை | 1000. 00 |
| சி. பத்மநாதன் | அரியாலை | 5000. 00 |
| ந. செந்தூரா | புத்தூர் | 1000. 00 |
| து. பராசக்தி | மிருசுவில் | 1000. 00 |
| மா. சஞ்சீவன் | பிரான்ஸ் | 1000. 00 |
| M. ஸ்ரீதரன் | நாவற்குழி | 4000. 00 |
| செ. ராஜசிங்கம் | சங்கானை | 5000. 00 |
| கா. நாகேந்திரன் | நெல்லியடி | 500. 00 |
| சு. கனகரத்தினம் குடும்பம் | நயினாதீவு | 1000. 00 |
| அ. உஷாந்தன் | அராலி | 1000. 00 |
| ந. குணபாலன் | மானிப்பாய் | 1000. 00 |
| க. முருகானந்தம் | மானிப்பாய் | 500. 00 |
| T.B. யாதவன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| S. லிங்கேஸ்வரி | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| இ. தெய்வேந்திரம் | அராலி | 1000. 00 |
| T. சுதன் | அளவெட்டி மேற்கு | 1000. 00 |
| க. ஸ்ரீனிவாசன் குடும்பம் | கனடா | 5000. 00 |
| செ. செல்வகுமார் | கொடிகாமம் | 5000. 00 |
| ம. பரமேஸ்வரன் | உஷன் | 1000. 00 |
| சி. அபினேஸ் | உரும்பராய் வடக்கு | 3000. 00 |
| மா. மகாலிங்கம் குடும்பம் | நவாலி | 1700. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| சி. தனஞ்சயன் | மல்லாகம் | 1100. 00 |
| ம. நதீஷா | கிளிநொச்சி | 5000. 00 |
| கோ. யஸ்மிதா | மீசாலை | 1000. 00 |
| சாந்தினி சண்முகநாதன் | தெகிவளை | 1000. 00 |
| த. சரஸ்வதி | கனடா | 20000. 00 |
| நா. இராசகுரு | திருகோணமலை | 5000. 00 |
| தா. ரவிச்சந்திரா | நவக்கிரி | 5000. 00 |
| கு. பரமேஸ்வரன் | டென்மார்க் | 3000. 00 |

(தொடரும்...

# எல்லோரும் கொண்டாடும் இனிய நவராத்திரி

– **திரு ஆர்.வீ. கந்தசுவாமி** அவர்கள் –

எவரும் அன்றாட வாழ்க்கைக்கு இடையில் பக்தியுடன் எளிய முறையில் அம்பிகையை வழிபடலாம். அந்த நோக்கத்திலே பண்டிகைகளும் திருவிழாக்களும் தோன்றியுள்ளன.

அவற்றில் கோவில்களில் மட்டுமன்றி வீடுகளிலும் பத்து நாட்கள் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையாக நவராத்திரி விளங்கி வருகின்றது.

சுகமாகவும் சுலபமாகவும் வழிபடத்தக்கவள் அம்பிகை ஆவர். பருவ மாற்றங்கள் நிகழும்போது நோய்கள் ஏற்படுகின்றன. அந்தவகையில் வசந்தருது, சரத்ருது ஆகிய பருவ காலங்களில் முறையே வெப்பத்தினாலும் தட்பத்தினாலும் தோன்றும் நோய்களில் இருந்து மக்களை அம்பிகை காப்பாற்றுகின்றாள். இவ்விதமான நோய்களை "அம்பாள் நோய்" என மக்கள் கூறுவர். அம்பிகை "சர்வ வியாதிப்பரசமணி" அதாவது அனைத்து நோய்களையும் அடக்கும் மருந்தாக விளங்குகின்றாள். அவளை "பிணிக்கு மருந்து" என்று அபிராமிப்பட்டர் குறிப்பிடுகின்றார்.

நவராத்திரி இரு வகைப்படும். அதாவது சித்திரை மாத வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது வசந்த நவராத்திரி.

புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது சாரதா நவராத்திரியாகும்.

வசந்த காலமும், சரத்காலமும் காலதேவனின் இரண்டு கோரப் பற்கள் என்று தேவிபாகவதம் வர்ணிக்கின்றது. எனவே இந்த இரண்டு காலங்களிலும் அம்பிகையை வழிபடுவது துன்பங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கும். காலனைக் காலால் உதைத்த ஈசனின் இடப் பாகம், அது அம்பிகைக்கு உரியது. அந்தத் திருவடியை நாம் போற்றி வழிபட்டால் நமக்கு எதுவித துன்பமும் வராது.

நமது நாட்டில் பெண்களும் குழந்தைகளும் நவராத்திரிக் கொண்டாட்டத்தில் பெரும் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

வீடுகளில் காலை, மாலை சகலகலாவல்லிமாலை, தேவிபாகவதம், அபிராமி அந்தாதி போன்ற நூல்களைப் பாராயணம் செய்வார்கள். பலர் முன்னிலையில் பாடும் வாய்ப்பையும், பயிற்சியையும் குழந்தைகள் பெற்றுக்கொள்கின்றார்கள்.

நவராத்திரி குழந்தைகளின் கலையார்வத்தை வளர்த்து அவர்களின் உள்ளத்தில் தெய்வ பக்தியை விதைக்கும் ஒரு பெருவிழாவாகும். குழந்தைகள் பலவிதமான பொம்மைகளைப் படிகளில் கொலுவாக வைத்து மகிழ்வார்கள்.

*உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.*

கணபதி, முருகன், சக்தி, சிவன், திருமால் அத்துடன் விலங்குகளும், பறவைகளும் கொலுவில் இடம்பெறுகின்றன. இது "எல்லாவற்றிலும் இறைவனைக் காணுதல்" என்னும் உயர்ந்த ஆன்மீக தத்துவத்தை உணர்த்துகின்றது.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் உரியது என்பர்.

பத்தாம் நாளான விஜயதசமி அனைவருக்கும் மேலான ஆதிபராசக்திக்கு உரிய நாளாகும். கன்னிகா பூஜை, தேவிபாகவதம் விதிப்படி பூஜை செய்பவர்கள் சிறுமிகளைத் தேவியாகப் பாவித்து வழிபடுவது வழக்கம். இந்தப் பூஜையின்போது இரண்டு வயது முதல் பத்து வயதுவரை உள்ள பெண் பிள்ளைகளை அழைத்துப் பூஜிப்பர்.

மகா நவமி என்ற ஒன்பதாவது நாள் கல்வித் தெய்வம் கலைமகளுக்கு உரியது. அந்த நாள் சரஸ்வதி பூஜை என்றும் ஆயுத பூஜை என்றும் கொண்டாடப்படுகின்றது.

மாணவர்களும் படிப்பாளிகளும் புத்தகங்கட்கும் எழுது பொருட்களுக்கும் ஏற்றம் கொடுத்துப் பூஜை செய்கின்றனர்.

சங்கீத வித்துவான்கள் மிருதங்கம், தவில், நாக சின்னம், வீணை, வயலின் முதலிய இசைக் கருவிகளை வைத்து பூஜை செய்கின்றனர்.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்னும் உணர்வில் தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு உரிய ஆயுதங்களையும், கருவிகளையும் வைத்துப் பூஜிப்பார்கள்.

தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் ஆயுத பூஜை ஆர்வத்துடன் பெரும் விமரிசையாகக் கொண்டாடப்படும்.

விஜயதசமி அன்று துர்க்கை மகிஷாசுரனை வதைத்து வெற்றி கொண்ட நாள் என்றும், ஸ்ரீராமன் இராவணனை வென்ற நாள் என்றும், பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் முடிந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போருக்குப் புறப்பட்ட நாள் என்றும் பல்வேறு கருத்துக்கள் வழங்கி வருகின்றன.

பகுதிக்குப் பகுதி வழிபாட்டு முறைகள் வேறுபட்டாலும் நவராத்திரி முழுவதும் ஆதிபராசக்தியை போற்றும் விழாவாகவே அமைகின்றது. எனவே நவராத்திரி விழா என்பது இந்துப் பண்பாட்டில் அனைவராலும் போற்றப்படுகின்ற பண்பாட்டுப் பெருவிழாவாகும்.

## கட்டுரையாளர் கவனத்திற்கு...

2015 முதல் 2018 வரை உள்ள காலப்பகுதியில் "ஞானச்சுடர்" ஆன்மீக மாதாந்த சஞ்சிகையில் கட்டுரைகள் - கவிதைகள் எழுதியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங்களை (2015 - 2018) வழங்கிய அனைவரும் தங்கள் தற்போதைய சரியான முகவரிகளுடன்- தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு விரைவில் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பயம்.

# ஔவையாரின் பாடற் சிறப்பு

(தொடர்ச்சி...

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

## வெட்டுண்ட பலாமரம் தளிர்க்கப் பாடியது

முன்னொரு காலத்தில் ஒரு குயவன் தனது இரு மனைவியருடன் இன்புற்று வாழ்ந்தான். குயவன் இளைய மனைவிமீது மிகுந்த அன்பு வைத்திருந்தான். இக் குயவன் தனது பெரு விருப்பின் பேரில் ஒரு பலாமரத்தை மிக்க அன்புடன் வளர்த்து வந்தான். ஒரு நாள் அவன் அவசரமாக வேற்றூருக்குப் போக நேர்ந்தது. தனது இரு மனைவியரையும் அழைத்துத் தான் அன்புடன் வளர்த்து வந்த பலாமரத்தைப் பரிவுடன் பாதுகாக்கும்படி கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்ற பின் இளைய மனைவி மூத்தவள்மீது பழி சுமத்துவதற்காக அப் பலாமரத்தை வெட்டி விட்டாள். இளையவள் கணவன் வந்ததும் தன்மீது பழி சுமத்துவாள் என்றெண்ணிய மூத்தவள் கவலையுற்று ஏங்கித் தவித்தாள். அச்சமயம் அவ்வழியே வந்த ஔவையார் மூத்தவளின் கவலையை உணர்ந்ததும் "நீ பயப்படாதே!" என்று அவளுக்கு ஆறுதல் கூறியதின் பின்னர் பாடலைப் பாடினார்.

"கூரியவாளாற் குறைத்திட்ட கூன் பலா
ஓரிதழாய்க் கன்றா யுயர் மரமாய்ச் - சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின் பழமாய்ப்
பண்டு போ னிற்க படி"

ஔவையார் பாடி முடிந்ததும் வெட்டுண்ட பலாமரம் நன்கு தளிர்த்து தழைத்தது. மூத்தவள் மனநிறைவுடன் ஔவையாரை வணங்கினாள். ஏழைகள், நலிவுற்றோரின் கவலை நீக்கி மன நிறைவடையச் செய்த ஔவையின் சிறப்பால் நீதி நிலைநாட்டப்பட்டது.

## பொன்னூஞ்சல் அறுந்து விழப் பாடியது

சங்கமமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் தமிழ் புலமையுடையோரைக் கண்டறிய பாண்டிய மன்னனொருவன் விரும்பினான். உயர் தரத்திலான செம்பொன்னால் நான்கு கொலுவில் தொங்குகின்ற ஊஞ்சல் பலகையில் பெருந்திரளான பொற்குவியலையும் வைத்தான். தமது மதுரையிலும் அயல் நாடுகளிலும் சிறப்பான புலவர்கள் யாவரையும் குறித்த தினத்தில் வருமாறு தெரிவித்தான். அப்புலவர்களை தமது திறமையால் பாடி பொன்னூஞ்சலின் நான்கு சங்கிலிகளும் அறுந்து விழப் பாடினால் தக்க விருதுகளாற் பெருமதிப்பளிப்பதாகவும் ஊஞ்சலின் மீதிருக்கும் பொற்குவியலையும் வழங்குவதாக தெரிவித்தான்.

பலர் அவ்விடம் வந்தபோதும் நிபந்தனைப்படி பாடி ஊஞ்சலை அறுந்து விழச் செய்யத் துணிந்து முன்வரத் தயங்கினர். அவ்வழியே வந்த ஔவையார் நிபந்தனைகளை அறிந்தார். நேரிற் சென்று ஊஞ்சலினருகே நின்று பின்வரும் பாடல்களைப் பாடினார்.

*தேவையேற்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன்தான் அறிவாளி.*

"ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத் தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்தொருவர் - பூர்த்த மலர்த்
தண்டா மரத் திருவே! தாதா கோடிக் கொருவர்
உண்டாயினுண் டென் றறு"

"தண்டாம லீவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை; - அடுத்தடுத்துப்
பின் சென்றா லீவது காற்கூலி; பின் சென்றும்
ஈயா னெச்சம்போ லறு"

"உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான் பேசி - என்னளவும்
கைக்கூலி தான் வாங்கும் காலறுவான் தன் கிளையும்
எச் சமறு மென்றா லறு"

"வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன் - வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றாலறு"

ஔவையார் பாடிய ஒவ்வொரு பாடலாலும் ஒவ்வொரு சங்கிலியாக அறுந்ததும் ஊஞ்சற் பலகை வீழ்ந்தது. யாவரும் வியந்தனர். பாண்டிய மன்னன் தமது நிபந்தனைக் கமைய ஔவையாருக்கு வேண்டிய யாவற்றையும் தந்து பெருமதிப்பளித்துப் பாராட்டினான். ஔவையார் தமது தெய்வப்புலமையால் தமிழ்ச் சங்கத்தின் பெருமையையும் தமிழின் சிறப்பையும் உலகறியச் செய்தார்.

## பெண் குலத்தவரை இகழ்ந்து பேசியவருக்கான பாடல்

ஔவையார் கல்வியால் உயர்ந்தவர். கர்வமற்றவர் ஆனால் யாராவது ஒருவரைத் தாக்கமாகவோ இகழ்வாகவோ பேசுமிடத்து நலிந்தவர்களுக்காக உரிமைக் குரல் கொடுப்பவர் தகுந்த பதிலைப் பாடல்மூலம் படித்துத் தலைகுனிய வைப்பதில் வல்லவர். ஒரு சமயம் ஔவையார் தெருவழியே சென்றபோது சிலர் இவரைக் கண்டதும் பெண் குலத்தை இழிவாகப் பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம் ஔவையார் பின்வருமாறு பாடினார். இப்பாடலைக் கேட்டதும் அவர்கள் ஏதும் பேசாது வாயையடக்கினார். அப்பாடல் இதுவாகும்.

"நல்லார்க ளெல்லாரும் நல்லாரே தன்மையால்
வல்லாராற் கேடு படாராயின்; நல்லறி
வாண் மக்கட் பற்பலர்க்கே யுண்டாகும் பெண்டிரும்
மாண்பு கெடுக்கா விடின்"

## பிறருக்கு ஈயாதானைக் குறித்துப் பாடியது

"பாடல் பெறானே பலர் மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்க ணாடானே - சேடன்
இவன் வாழும் வாழ்க்கை யிருங் கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்"

"சுற்றுங் கருங்குளவி சூரத்தூராயியப் பேய்
எற்றுஞ் சுடுகா டிடி கரையின் - புற்றில்
வளர்ந்த மடற் பனைக்குள் வைத்ததே னொக்கும்
தளர்ந்தோர்க் கொன் றீயார் தனம்".

## கையில் மண்ணை மூடி மறைத்து வைத்திருந்த புலவருக்காகப் பாடியது

ஒரு சமயம் புலவரொருவர் தான் திறமைசாலி என எண்ணித் தனது கையில் ஒரு பிடி மண்ணை மூடி மறைத்தவாறு இதனுள் என்ன என்று ஔவையாரைக் கேட்டார். தெய்வப் புலவரான ஔவையார் அதனை உணர்ந்ததும் பின்வரும் பாடலைப் பாடி வியக்க வைத்தார். பாடலிதுவாகும்.

"கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு வெண்
றுற்ற கலை மடந்தை யோதுகிறாள்; - மெத்த
வெறும் பந்தயங் கூற வேண்டா; புலவீர்
எறும்புந் தன் கையா லெண் சாண்"

## உயிர் நீங்கும் காலவரையைக் குறிப்பிட்டுப் பாடிய பாடல்

"வாதக்கோ னாளை யென்றான் வையைக் கோன் பின்னையென்றான்
ஏழக்கோன் யாதேனு மில்லை யென்றான் - ஓதக்கேள்;
வாதக்கோன் சொல்லதினும் வையைக்கோன் சொல்லதினும்
ஏதக்கோன் சொல்லே யினிது"

(மேற்கூறிய பாடலின்படி வாதநாடி ஒரு நாளிலும், சிலேத்தும நாடி ஒரு நாழிகையிலும் பித்தாடி ஒரு நிமிடத்திலும் உயிர் நீங்கும் என்றார்.)

## உலக மக்களின் நிலையை வகுத்துக்கூறிய பாடல்

"சொல்லாமலே செய்வர் பெரியர் சொல்லிச் செய்வர் சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே; நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் குறுவுவமை நாடிற்
பலா மாவைப் பாதிரியைப் பார்"

ஔவையார் மேலும் பல தனிப்பாடல்களைப் பாடினார். இவை யாவும் மனித வாழ்வில் நிலையை விளக்கிக் கூறியவையாகும்.

*தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*

## இலக்கண சுந்தரியை நல்வழிப்படுத்தியது

விக்கிரமாதித்த மன்னனின் மனைவி இலக்கண சுந்தரி என்பவள் விநாயகர் நோன்பிருந்து காப்பு நூலும் கட்டியிருந்தாள். கவனக்குறைவாக நோன்பைக் கைவிட்டுக் காப்பு நூலையும் அறுத்தெறிந்து நோன்பின் மகிமையைக் களங்கப்படுத்தினாள். இதனால் இலக்கண சுந்தரி விநாயகரின் வெறுப்புக்கு ஆளானாள். பல துன்பங்களை அடைந்தாள். விக்கிரமாதித்தனின் குடும்பத்திலிருந்ததால் அரச படைகளின் யானை, குதிரைகள் பல மாண்டன. மேலும் பல கெடுதிகள் ஏற்பட்டன. இதனால் அவள் மன்னனுடன் வாழ்ந்தால் தொடர்ந்து விநாயகரால் வெறுக்கப்படலாமென எண்ணி அவளை வெளியே அனுப்பினான்.

சொந்தக் கணவனால் துரத்தப்பட்டவள் வேறிடங்களில் தஞ்சமடைந்தாள். அதே வீட்டுக்காரரும் பல கெடுதிகளை எதிர் கொண்டனர். இறுதியாக இலக்கண சுந்தரி ஔவையிடந் தஞ்சமடைந்தாள். இலக்கண சுந்தரியின் சாபக் கேட்டால் ஔவையும் பல இன்னல்களை எதிர் கொண்டார். இதனைத் தமது ஞான நோக்கில் அறிந்ததும் இலக்கண சுந்தரி நோன்பை உதாசீனம் செய்ததால் வந்த வினையென உணர்ந்தார். தம்மைப் போல் இலக்கண சுந்தரியும் ஒரு பெண் என்பதால் அவள்மீது மனமிரங்கி நல்வழிப்படுத்த முற்பட்டார். விநாயகர் நோன்பின் பெருமைகளை நன்குணர வைத்தார். பயபக்தியுடன் விநாயகர் நோன்பை முறைப்படி அனுட்டிக்கத் தாமே உடனிருந்து உரிய காலத்தில் நோன்பிற்கான காப்பு நூலையும் கட்டினார்.

ஔவையார் காட்டிய பாதையில் விநாயகரை வழிபட்ட இலக்கண சுந்தரி நற்பேறு பெற்றாள். இதையறிந்த விக்கிரமாதித்தன் அவ்விடம் வந்து ஔவையை வாழ்த்தியதும் இலக்கண சுந்தரியை அழைத்துச் சென்று பட்டத்தரசியாக்கினான். ஔவையின் நற்பணி நாடு போற்ற வைத்தது. (இக்கதை விநாயகர் புராணக் கதையில் ஒன்றாகும்.)

## ஔவையாரும் அரு நெல்லியும்

ஔவையார் தமது தமிழ்ப் புலமை மூலம் மன்னர்கள் உயர்வான வள்ளல்கள் யாவரதும் அன்பிற்குப் பாத்திரமானவர். ஒரு சமயம் ஒருவன் நாகலோகத்திலிருந்து எடுத்து வந்த ஒருவகை பதார்த்தத்தையும் அரு நெல்லிக் கனியையும் கடையெழு வள்ளல்களிலொருவரான அதியமானிடம் கொடுத்தான். அவன் கொடுத்த பதார்த்தத்தை உடம்பில் பூசியும் அருநெல்லிக் கனியை உண்டால் நீடியகாலம் உயிர்வாழும் சக்தி வாய்ந்தது.

அதியமான் அவற்றைத் தான் பூசியும் உண்டும் நீடிய காலம் வாழ்வதிலும் தமது தமிழ்ப்பற்றினால் தமிழ் வளர்க்கும் புலவர் உண்டு வாழட்டும் என எண்ணினான். அவ்வள்ளலின் சிந்தையில் ஔவை அதனை ஏற்கட்டும் என்னும் நற்சிந்தனை கொண்டான். ஔவையார் அதியமானிடம் வந்தபோது ஔவைக்கு இரண்டும் வழங்கப்பட்டது. பதார்த்தத்தைப் பூசியும் அரு நெல்லிக்கனியை உண்டதும் ஔவை நீடியகாலம் உயிர் வாழ்ந்தார் என்னும் நற்தகவல் செப்புகிறது.

சில ஆய்வாளர்கள் ஔவையார் என்ற பெயரில் சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம் என மூன்று காலத்தில் மூவர் வாழ்ந்ததாகவும் தெரிவிக்கின்றனர். ஆனால்

பழைய நூலான "விநோதரசமஞ்சரி" என்னும் நூலின் மேற்கூறிய யாவும் ஒரே தொடரில் பதியப்பட்டுள்ளது. எதுவாயினும் இன்றைய சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நூலாக இது அமைந்ததால் யாவரும் கற்றறியலாம் என்னும் நோக்கில் ஒரே தொடரில் யாவும் அமைகிறது. (தவயோக சுவாமிகளின் வாக்குப்படி இது எப்பவோ முடிந்தகாரியம் நாமறியோம்) ஔவையார் பாடலில் நூல்களாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வி ஒழுக்கம், விநாயகர் அகவல், அருந்தமிழ் மாலை, தரிசனைப்பத்து, ஞானக்குறள் பந்தனந்தாதி, அசதிக் கோவை, வைத்திய நிகண்டு முதலிய நூல்களை எழுதியுள்ளார். சில நூல்கள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்றன.

ஔவையாரின் தெய்வீகமான செந்தமிழ் ஆழ்ந்த கருத்துக்களும் தூய தமிழ் உரைநடையும் அமைந்ததாய் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகியும் பைந்தமிழாகவும் நவீன காலத்திற்கும் ஏற்ற சிறப்பையுங் கொண்டது. இத் தெய்வீகமான ஔவையார் மேலும் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். இவையாவும் தமிழ் மொழியின் வளத்தை அலங்கரிப்பது இறையருட் சித்தமாகும். (முற்றும்)

## உடல் இருக்கும் மனம் விலகிவிடும்...

குருவிடம் ஒரு சிஷ்யன் பாடம் படித்துக்கொண்டிருந்தான். அந்நேரம் ஆசிரமத்துக்கு வெளியே யாரோ சத்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். நேரம் ஆக ஆக அந்தக் குரல்களில் வேகமும் விதண்டாவாதமும் வசை சொற்களும் கூடிக்கொண்டே இருந்தது.

சிஷ்யனால் பாடத்தைக் கவனிக்கவே முடியவில்லை. "வெளியே சென்று என்ன நடக்கிறது என்று பார்த்துவா..." என்றார் குரு. வெளியே சென்றவன் சில நிமிடங்களில் திரும்பிவந்து "யாரோ இருவர் கடுமையாக வாக்குவாதம் செய்துகொண்டிருந்தனர். இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தேன். வேண்டா வெறுப்போடுதான் கலைந்து சென்றார்கள். ஆனால், அவர்களுக்குள் நிரந்தர சமாதானம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வேறு இடத்தில் நின்று அவர்களின் சண்டையைத் தொடர்வார்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

அவனிடம் குரு கேட்டார், "அருகருகே இருப்பவர்கள் ஏன் அவ்வளவு சத்தமாக பேசிக்கொள்கிறார்கள்? மெல்லமாகப் பேசினாலும் இருவருக்கும் கேட்கும்தானே?" என்றார். அதற்கு அவன் "எனக்குத் தெரியவில்லையே! அருகே இருப்பவர்கள் மெல்லிய குரலில்தான் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் சண்டை வந்துவிட்டால் மட்டும் ஏன் இப்படியொரு குரலெடுத்துப் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை" என்றான்.

குரு பேச ஆரம்பித்தார், "மனிதர்கள் அன்புகொண்டு அருகருகே இருக்கும்போது உடலால் மட்டுமல்ல, மனதாலும் நெருக்கமாக இருப்பார்கள். அதனால்தான் மெல்லிய குரலில் பேசிக்கொள்வார்கள். ஒருவருக்கொருவரின் வாதம் விதண்டாவாதமானதும் நீயா நானா என்ற பிடிவாதம் பற்றிக்கொள்ளும். அப்போது அவர்களின் உடல்கள் அருகருகே இருந்தாலும், மனதளவில் ஒருவரை விட்டு ஒருவர் விலகிச் சென்றுவிடுவார்கள். அந்த இடைவெளியின் வெளிப்பாடுதான் உரத்த குரலில் பேசுவது.

தூரத்தில் இருப்பவர்களிடம் சத்தமாகத்தானே பேசவேண்டும். ஆக அருகருகே இருக்கும் உடல்களை மறந்து, தூரத்துக்குச் சென்றுவிட்ட மனதே பிரதானமாகத் தெரியும்" என்றார் குரு.

*சொர்க்கம் என்பது ஒழுக்கம் என்பதைத் தவிர வேறு ஏதோ அன்று.*

# புல்லாங்குழலூதி வாய் வருத்துமோ?
# உறியில் புதுப்புது வெண்ணெய் உண்டு வயிறு பாரமோ?

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இலங்கையின் சிரசாக மிளிரும் வடமராட்சியின் இரு கண்களாக விளங்குவது வல்லிபுரமும், செல்வச்சந்நிதியுமாகும். இரண்டு பதிகளும் மூர்த்தி, தலம், தீர்த்தங்களாலும், அற்புதங்களாலும், அதிசயங்களாலும் பேறு கொண்டவையாகும்.

புத்தி தடுமாறும் மாந்தர்களையும், வழிதடுமாறி பழி சுமந்தவர்களையும் மனிதனாக்குவது மேற்படி இரு ஆலயங்களாகும்.

மாடி இருக்கும்! சுகம் விலை
கொடுத்து வாங்கவேண்டி யிருக்கும்.
கோடி இருக்கும்! கும்பிட
வாகனம் தேவையாயிருக்கும்.
கனத்த உடம்பு இருக்கும்!
வீதியில் விழுந்து கும்பிட நாரியோ
முடியாதபடி வருத்தமிருக்கும்
ஆனால் பக்தி இருக்கும்!

வல்லிபுரக் கண்ணனும், சந்நிதி முருகனும் பக்தனை தாமே கூட்டிவந்து வழிபட வைத்து, அமுதூட்டி, ஆறுதல் தந்து, வரம் ஈந்து வாழ்வும் அளிப்பார்கள்.

கடலோடு சமுத்திரமருகே மாட்சி பெறும் ஆலயங்களுக்கு மகிமையும், மோட்சமளிக்கும் வல்லமையும் மிகுந்திருக்கும்.

அரசன் ஆண்டியாவதும், ஆண்டி அரசனாவதும் உலக இயற்கையும், நியதியும் என்பதை உணர வைப்பது இந்த ஆலயங்களாகும்.

நதிநடுவே ஒரு நாகத்தில் கிடந்தவனாகவும்,
நாடிய பாண்டவர்க்குத் தூதாய் நடந்தவனாகவும்,
வாரணம் புலம்பிட வந்தவனாகவும், சதுர் ஆரண கீதையைத் தந்தவனாகவும்,
பரிபூரண கருட வாகனனாய் காட்சியளிப்பவனாகவும்,
இந்த தாரணி காத்திடும் இராகவனாகவும்,
திருமகள், புவிமகள் நாயகனாகவும்
வெண்ணெய் திருடி விளையாடும் மாயவனாகவும்,
கடமையைச் செய்கின்ற பாக்கியவான்களின் கரங்களின் இருப்பவனாகவும்,
முதுமையிலும் இளமையாக மனதில் குடிகொண்டு இருப்பவனாகவும்,

அடிபிடி சண்டை சச்சரவு மது மாது கொலை களவு சூது வாது பாலியல் ஊழல் மோசடி ஆகிய குற்றங்களைப் புரிந்தவர்களைத் தண்டிப்பவனாகவும், கண்ணபிரான் வல்லிபுரத்தில் ஒரு நீதி நியாயாதிபதியாக வீற்றிருந்து உலகினை ஆட்சி செய்து வருகின்றான்.

*ஒரு கணத்தில் இழந்த மானத்தை ஓராயிரம் ஆண்டுகளானாலும் பெற்றுவிட முடியாது.*

நினைத்த மாத்திரத்திலே பிறப்பு இறப்பு மூப்பு முதலான பயங்களை ஓடச் செய்து எமது உள்ளங்களிலிருந்து பிரகாசித்துக்கொண்டு ஒரு ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்றும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கும் வைகுந்தனாக, மணிவண்ணனாக, நாராயணனாக, கார்மேக வண்ணனாக, ஆயர் குல விளக்காக, சங்கு சக்கர கையனாக, கோதண்டராமனாக, பச்சை மாமலை போல் மேனியராக, நீலமேக வண்ணனாக வல்லிபுரத்தில் வரந்தருகின்றார்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்;
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்;
இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்;
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரிலுள்ளானே!

மிகவும் தொன்மையானதும், புராண இதிகாசச் சிறப்புமிக்கதுமான வடமராட்சி துன்னாலையம்பதி வல்லிபுரம் ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம் கொடியேறினால், நாட்டிலே பெரும்பாலான இடர்பாடுகள் தூர விலகி ஓடும்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்சகிருத்தியங்களை இயற்றும் எம்பெருமான், கொடியேற்றம் படைத்தல் தொழிலையும், வீதிவலம் வருதல் யாகதரிசனம் காத்தல் தொழிலையும், இரதோற்சவம் அழித்தல் தொழிலையும், தீர்த்தம் அருளல் தொழிலையும் காட்டி அடியார்களை ஆட்கொள்கின்றான்.

கோவிந்தநாம சங்கீர்த்தனம்
கோவிந்தா ஹரி ஹோவிந்தா

பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக்குருவானவர் மகோற்சவ பிரதம குருவாகவும், பிரம்மஸ்ரீ சு.க. சுதர்சனக் குருவானவரும் சக குருமார் நிலையிலே பிரம்மஸ்ரீ சு.க. புருஷோத்தம குருவானவரும் பிரதம குருமார்களாக ஸ்ரீ ஆழ்வார் பீடமதை தெய்வீகமாக்குகிறார்கள். சென்ற வருடம் (23.09.2018) மேற்படி அந்தணப் பெருமக்களும், ஸ்ரீ வல்லிபுரத் தேவஸ்தான மகா சபைத் தலைவர் இ. அன்னலிங்கம் அவர்களும், அறங்காவலர் சபைத் தலைவர் க. இரத்தின சபாபதி அவர்களும் அவதார மகிமையைப் பேறாக்கியது போலவே இம்முறையும் வல்லிபுரம் எமக்கு வரமாகிறது.

தரணியில் அதர்மம் ஓங்கி தருமம் வீழும்போதெல்லாம் தருமம் நிலைபெறவும், தீமை ஒழிந்திடவும் யுகங்கள்தோறும் திருமால் எங்கள் பெருமாள் திருவவதாரங்கள் புரிகின்றான்.

**தசாவதாரம்**

| | | |
|---|---|---|
| மச்ச அவதாரம் | கூர்ம அவதாரம் | வராக அவதாரம் |
| நரசிம்ம அவதாரம் | வாமனாவவதாரம் | பரசுராமாவவதாரம் |
| ஸ்ரீ ராம அவதாரம் | பலராம அவதாரம் | ஸ்ரீ கிருஷ்ண அவதாரம் |
| கல்கி அவதாரம் | | |

ஆகிய தசாவ அவதாரம் பத்தும் வல்லிபுர மண்ணில் உணரமுடிகின்றது.

*கேள்வி கேட்கத் தெரிந்தாலே பாதி தெரிந்துகொண்டதாக அர்த்தம்.*

அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்கள் கண்ணனை வியந்து பாடும் பாடல் இதுவாகும்.

**பல்லவி**

எத்தனைகாலம் நித்திரை செய்கிறாய்?
இன்னமும் கண்விழிக்க மனமில்லையோ? நீ

**அனுபல்லவி**

பக்த சகாயா பகவானே மாயா
பாரத கீதையை விளம்பிய வாயா

**சரணம்**

கண்மூடி நீ கிடந்தால் ஐந்தொழில் நடக்குமோ
மண்ணாதி அண்டங்கள் வாழ்ந்து சிறக்குமோ
பண்பாடு கலைஞான அருளொளி பிறக்குமோ
எண்கோணர் நவகோளர் செயல்களும் இருக்குமோ?

இரணியன் மார்பிளந்து கைகள் அலுத்ததோ? ஐவர்
இயம்பிய தூது சென்று கால்கள் அலுத்ததோ?
உரலை வலிந்திழுத்து தவழ்ந்த களைப்போ! பாம்பின்
உச்சியில் ஆடியதன் உடம்பிளைப்போ! நீ!

**வரலாறு**

யாழ் தீபகற்பத்திலே வடபாலமைந்த வடமராட்சியின்கண் பருத்தித்துறை மண்வாசனை கமழுகின்ற துன்னாலை புலோலி வராத்துப்பளை கற்கோவளம் கிராமங்களுக்கு மத்தியிலே வல்லிபுரம் ஆலயம் தெய்வீகமாகிறது.

கி.பி. 303இல் நாகருடைய ஆட்சி நிறைவுக்கு வந்த பின்னர், வடமறவர் ஆட்சிசெய்த காரணத்தால் வடமராட்சி எனப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் இருந்த காரணமாக இந்த இடம் வல்லிபுரம் எனப் பெயர் கொண்டது. வெள்ளிநிலா எறிக்கும் நல்ல தினமதிலே வெள்ளைமணற் பரப்பில் விந்தை நிகழ்ந்தது. கள்ளமில்லாத வல்லிநாச்சி எனும் பெண் பக்தையவள் பிள்ளை வரம் வேண்டி கடல் மணலில் தவமிருக்க, துள்ளி எழுந்ததோர் அழகிய மீன் வல்லியின் மடியில் வீழ்ந்தது. வல்லியவள் அதனைத் தூக்கியெடுத்தபோது அது ஓர் அழகிய குழந்தையாகி சங்கு சக்கரமாய் ஒளிர்ந்து தவழ்ந்தது. மச்சமும் மகவும் சங்கும் சக்கரமாய் பேறுகந்த அற்புதத்தால் வல்லிபுரம் அதிசயமாகி ஆலயமானது. எனவே நினைத்த காரியம், சந்தான விருத்தி, திருமண பாக்கியம் யாவும் சித்திக்கும். 16 நாள் திருவிழா 16 பேறுகளை நாம் பெறுவோமாக.

*பணமும் மகிழ்ச்சியும் பரம விரோதிகள். ஒன்று தங்குமிடத்தில் மற்றொன்று தங்காது.*

**பிரம்மோற்சவம்**

முதல் ஐந்து நாட்களும் எம்பெருமானின் திருவுலா உள்வீதியிலும், ஏனைய திருவிழாவின்போது வெளிவீதியிலும் இடம்பெறும்.

எட்டாம் திருவிழா குருக்கட்டு விநாயகர் தரிசனமும், ஒன்பதாம் திருவிழா வெண்ணெய்த் திருவிழாவாகவும், பத்தாம்நாள் துகில் திருவிழாவாகவும், பதினோராம் நாள் பாம்புத் திருவிழாவாகவும், பன்னிரண்டாம் நாள் ஹம்சன் போர்த்திருவிழாவாகவும், பதின்மூன்றாம் நாள் வேட்டைத் திருவிழாவாகவும், பதினான்காம் நாள் சப்பைரதத் திருவிழாவாகவும், பதினைந்தாம்நாள் (12.10.2019) தேர்த்திருவிழாவாகவும், பதினாறாம் நாள் (13.10.2019) தீர்த்தத் திருவிழாவாகவும் (சமுத்திரத் திருவிழா), பதினேழாம் நாள் கேணித் தீர்த்தத் திருவிழாவாகவும் மகோன்னதமாகிறது. பார்த்துப் பரவசமாக வல்லிபுரம் வந்து வரம்பெறுங்கள்.

"ஐந்து பூதம் நீ; ஆகம வேதம் நீ;
முந்து சராசரம் நீ; முழுவதும் ஆனாய் நீ;
பந்தம் அறுப்பாய் நீ; பரோபகாரன் நீ;
விந்தை ஆனவன் நீ; வல்லிபுர வரமும் நீ!"
கோவிந்தா கோவிந்தா
குவலயத்தின் விடிவைத் தா!!!
புல்லாங்குழலூதி வாய் வருத்தமோ?

## சமத்துவம்

நல்ல குணம் கொண்டவர்களை "தங்கக் கம்பி" என்று புகழ்வர். ஆனால் ஒருமுறை கடவுளிடம் கண்ணீர் வடித்தது தங்கம்.

"ஏன் அழுகிறாய், அனைவரும் உன்னைத்தானே உயர்ந்தவராக நினைக்கிறார்கள்", என்றார் கடவுள்.

"ஆம் சுவாமி! மக்கள் என்னைப் போற்றுகிறார்கள். பெட்டிக்குள் வெல்வெட் துணி விரித்து பாதுகாப்பாக வைக்கிறார்கள். ஆனாலும் ஒரு வருத்தம் எனக்கு இருக்கிறது" என்றது.

"பொற்கொல்லர் உன்னை தீயிலிட்டு உருக்குகிறாரே! அது சுடுகிறதா? சுத்தியால் தட்டும்போது வலிக்கிறதே? அதனால் சிரமப்படுகிறாயோ?" எனக் கேட்டார் கடவுள்.

"இல்லை சுவாமி! இல்லை.... அதனால்த்தானே நான் மின்னும் ஆபரணமாக மாறி பெருமையுடன் வாழ்கிறேன். கோவிலில் கவசமாகச் சுவாமிக்குச் சாத்துகிறார்கள். மக்கள் பக்திப் பரவசத்துடன் என்னையும் சேர்த்து வழிபடுகிறார்கள். சுவாமியை விட, கவசமான என்னைத்தான் வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள்" என்றது.

"அப்படியானால் என்னதான் உனக்குக் குறை?" என்றார் கடவுள். "மதிப்புமிக்க என்னை எடைபோடும்போது, தராசின் மற்றொரு தட்டில் எளிய குண்டுமணியை வைக்கிறார்கள்" என்றது.

"அட அசடே! உண்மை அறியாமல் உளறுகிறாய். மற்றவர்களின் உதவி இல்லாமல் யாராலும் வாழ முடியாது. உலகில் உயர்வு என்பதோ, தாழ்வு என்பதோ கிடையாது. எல்லாமே சமம்" என்றார்.

*வாழ்க்கை அனுபவமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.*

# சமய வாழ்வு (தொடர் -23)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

நல்ல நோக்கத்தோடு உருவாக்கப் பட்ட வருணாசிரம தர்மம் காலப்போக்கில் வேற்றுமைகளை வளர்த்தது. இது மனித பலகீனத்தால் விளைந்த ஒன்றே தவிர, ஏற் பாட்டிலுள்ள குறைபாடு அல்ல. இந்த ஏற்பாடு, விரும்பிய பலனைத் தராதபோது போராட் டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. விசுவாமித்திரரின் கதை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

விசுவாமித்திரர் சத்திரிய குலத்தில் பிறந்தவர். அரசனாக ஆட்சி செய்தவர். அவர் பிரம்ம ரிஷியாக விரும்பியபோது, பிராமண குலத்தைச் சேர்ந்த வசிட்டர் அதை ஏற்க வில்லை. விசுவாமித்திரர் கடும் தவம் புரிந்து, இறைவனின் அருளைப்பெற்று, பிரம்ம ரிஷி ஆகிறார். இதெல்லாம் வருணாசிரம தர்ம முறையின் கேடுகளை எதிர்த்து நடைபெற்ற போராட்டமாகவே கருத வேண்டும்.

மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன், சாதிப்பாகுபாடுகளுக்கும் வருணாசிரம தருமத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. சாதிகள் மிகவும் பிற்காலத்தில் ஏற்பட்டவை. குறிப்பிட்ட பிரிவினர் குறிப்பிட்ட தொழிலைச் செய்தபோது, அவர்களைக் குறிப் பதற்கு ஒரு பெயர் சூட்டப்பட்டது. அதுவே பின்னர் சாதியாக நிலைத்து விட்டது.

ஆனால் இந்து மதம் வருணாசிரம தர்மத்தையோ, சாதிப் பிரிவுகளையோ மதத் தின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொண்டதில்லை. உபநிடத காலத்திலிருந்து, நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலம் வரை இதுதான் உண்மை யான நிலையாகும்.

உபநிடதத்தில் ஒருகதை. பிராமணச் சிறுவன் ஒருவன் தன்னுடைய தாயாரிடம் போய், தான் வேதம் படிக்க ஆசைப் படுவதாகச் சொல்லுகிறான்.

அதற்கு அந்தத் தாய், "நான் பல மாதிரியாக வாழ்ந்தவள். நீ யாருக்குப் பிறந் தாய் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆகவே நீ வேதம் படிக்கத் தகுதி இல்லாத வன்" என்று சொல்லுகிறாள்.

அந்தச் சிறுவன் அதனால் சமாதானம் அடையவில்லை. ஒரு குருவை நாடிச் செல்லு கிறான். அவரிடம் வேதம் படிக்கவேண்டும் என்கிற தன்னுடைய ஆசையை வெளிப்படுத்து கிறான். அதே சமயம் தன்னுடைய தாயார் வேதம் படிக்கக் கூடாது என்று தடுத்ததையும், அதற்கு அவள் சொன்ன காரணத்தையும் எடுத்துச் சொல்லுகிறான்.

அதை அமைதியாகக் கேட்டுக்கொண் டிருந்த குரு அவனிடம் சொல்லுகிறார்; "நீ எப்படி பிறந்தவன் என்பது வேதம் படிப்பதற்கு ஒரு தடையே அல்ல. வேதம் படிக்க வேண் டும் என்கிற ஆர்வம் உன் உள்ளத்தில் எப் போது ஏற்பட்டதோ அப்போதே உனக்கு வேதம் படிக்கும் தகுதி வந்து விட்டது. உனக்கு நான் வேதம் சொல்லிக் கொடுக்கிறேன்" எனக் கூறி, அவனுக்கு அந்தக் குரு வேதம் கற்றுக் கொடுத்ததாக உபநிடதக் கதை கூறுகிறது.

ஆகவே வருணாசிரம தருமப்படி பிரா மணன் தான் வேதம் படிக்கலாம் என்கிற நியதி உபநிடதக் காலத்திலேயே தகர்த் தெறியப்பட்டு விட்டது.

வருணாசிரம தர்மம், சாதிப் பாகுபாடு என்பதெல்லாம் இடைக்காலத்தில் தோன்றி யவை அல்லது சந்தர்ப்பவாதிகளால் இடைக் காலத்தில் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளப்பட்டவை என்பதுதான் முற்றிலும் உண்மையானது.

அந்தணர்கள் வேதந்தான் படிக்க வேண்டும் என்பது இந்தக் காலத்தில் செல்லு படியாகாத விடயம். அந்தணர்கள் சொத்து வைத்துக் கொள்ளக்கூடாது, உஞ்சி விருத்தி செய்து தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இந்தக் காலத்திற்கு இவை ஒவ்வாதவை என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அதனால் இடைக் காலத்தில் உருவான வருணாசிரம தர்மம், இன்றைக்கு எந்த விதத்திலும் பயன்படாமல் போய்விட்டது.

அடியேனின் கருத்து "வருணாசிரம தர்மம் இந்து மதத்தின் பெரிய சாபக்கேடு என்று பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. அது தேவையும் இல்லை."

கீதையில் வருணாசிரம தர்மம் பற்றி வரும் சுலோகங்கள் உண்மையில் கீதையின் பாகம் அல்ல என்றும் இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டவை என்றும் சில ஆராய்ச்சி யாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர். கீதையில் கண்ணன் தான் உபதேசித்துக் கொண்டு வருவதற்கு முற்றிலும் சம்பந்தம் இல்லாமல் திடீரென்று வருணாசிரம தர்மம்பற்றி பேசு கிறான் என்றும், அது பற்றிய சுலோகங்களை நீக்கி விட்டுப் படித்தால் தொடர்ச்சி சரியாகவே இருக்கிறது என்றும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

மனுஸ்மிருதியும் இதைப்போலவே இந்து மதத்தில் இடையில் திணிக்கப்பட்ட ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை. பெண் கள் ஆண்களுக்கு அடிமை என்பதை உரு வாக்கியவரே மனுதான். ரிக் வேதத்தில் பெண்கள் உன்னத நிலையில் வைத்து மதிக் கப்பட்டு வந்திருக்கிறார்கள். சில தோத்திரப் பாடல்களை பெண்களே இயற்றி இருக்கிறார் கள்.

வருணாசிரமம் இடைச் செருகலாயி னும் அதன் நோக்கம் சரியானதுதான். நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட வருணாசிரம தர்மத்தை கொச்சைப்படுத்தியதே மனு ஸ்மிருதிதான். இம்மாதிரியாக சில தீமைகள் இடைக் காலத்தில் இந்து மதத்தில் வந்து குவிந்தன என்பது உண்மையே. இமயம் முதல் குமரி வரை பரவி இருந்த ஒரு பெரிய சமுதாயத்தில், அதன் நடைமுறை வழக்கங் களில் சில தீமைகள் புகுந்தது தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஆனால் இந்துமதம் இந்தத் தீமை களிலிருந்து அவ்வப்போது தன்னை விடுவித் துக்கொண்டு புத்துணர்ச்சி பெற்று வளர்ந்து வந்திருப்பதையும் பார்க்க முடிகிறது.

ஆன்மிக சுதந்திரம் பெண்களுக்கும் வேண்டும் என்று குரல் கொடுத்தவர் மீராபாய். இந்த அம்மையார் வட இந்தியாவில் மிகப் பெரிய புரட்சியைச் செய்தவர். மீராபாய் தன் னுடைய பஜனைப் பாடல்களில் மூட நம் பிக்கைகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் கிருஷ்ண பக்தியில் திளைத்தவர். தன் னுடைய பஜனைப் பாடல்கள்மூலம் மக்கள் இடையே சீர்திருத்தக் கருத்துக்களை விதைத் தவர்.

இந்துமத வரலாற்றைப் படித்தால் அவ்வவ்போது மகான்களும் சிந்தனையாளர் களும் தோன்றி; இந்து மதத்தில் நுழைந்து விட்ட தீமைகளை அப்புறப்படுத்த முயன்ற தைப் பார்க்க முடியும். சுவாமி விவேகானந்தர் இந்துமத ஞானியாக விளங்கியதோடு

மட்டுமின்றி, சிறந்த சீர்திருத்த சிந்தனை உடையவராகவும் திகழ்ந்தார். வேத காலத் திலிருந்து இந்துப் பெண்கள் அனுபவித்து வந்த சுதந்திரத்தை அவர் எடுத்துக் காட்டி விளக்கியிருப்பதைப்போல வேறு எவரும் செய்யவில்லை. பல உபநிடதங்களை பெண் களே இயற்றி இருக்கிறார்கள் எனப் பெருமை பட குறிப்பிட்டுள்ளார்.

சாதி வேற்றுமைகள், பெண் அடிமை, தீண்டாமை போன்ற விடயங்கள் இந்து மதத் திற்குச் சம்பந்தமில்லாதவை. இந்துமதக் கருத்துக்கள் என்கிற பயிர்களுக்கு நடுவே மண்டிவிட்ட களைகள் அவை.

இந்து மத ஞானிகள் இந்தக் களை களை அவ்வப்போது அப்புறப்படுத்தி வந்திருக் கிறார்கள்.

இந்து ஆலய வழிபாட்டு முறைகளும் சரி, இந்து சமயநெறிகளும் சரி, மனிதர்கள் அனைவரையும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி உயர்த்துகின்ற நோக்கம் கொண்டவை யாகவே இருந்து வந்திருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பேருண்மையை நிலை நாட்டிய பெருமை சேக்கிழார் பெருமானையே சாரும். பெரியபுராணம் என்று அழைக்கப்படுகின்ற திருத்தொண்டர் புராணத்தை ஒரு சமரசக் காப்பியமாக உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

சிவபெருமானின் திருத்தொண்டரின் பெருமையினைக் கூறுவதற்கு எழுந்த காப்பி யம் பெரியபுராணம். அநபாயச் சோழன் என்று அழைக்கப்படுகின்ற இரண்டாம் குலோத்துங் கன், சமணக் காப்பியமான சீவகசிந்தாமணி யின்பால், மனதைப் பறிகொடுத்திருந்த நேரத் தில், சிவனடியார்களின் பெருமையினை அவ னுக்கு எடுத்துச் சொல்லி, அவன் கவனத்தை திருப்புவதற்கு அவனுடைய முதலமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை இயற்றினார் என்பது கதை.

அவர் குறிப்பிடுகின்ற சிவனடியார்கள் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள். அந்தண ரும் உண்டு. தாழ்த்தப்பட்ட குலத்தவர் என்று கூறப்படும் எத்தனையோ பேர் அப்பழுக்கற்ற சிவபக்தியின் மூலம் வீடுபேற்றைப் பெற்றுக் கொண்ட வரலாற்றைப் பெரியபுராணம் எடுத் துச் சொல்லுகிறது.

திருஞானசம்பந்தர் ஆதிசைவ குலத் தில் பிறந்தவர். அதாவது அந்தணர் குலத் திலே பிறந்தவர். அவர் மைலாப்பூரில் இறந்து போன, எலும்புக்கூடாகிப்போன, பூம்பாவை என்கிற பெண்ணுக்குப் பதிகம் பாடி உயிர் கொடுக்கிறார். பூம்பாவை செட்டியார் குலத் தைச் சேர்ந்த பெண். அவள் ஞானசம்பந்தரி டம் மிகுந்த ஈடுபாடு கொண்டவள். அவளுடைய தந்தையார் தம் மகளை, ஞானசம்பந்தர் மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென வேண்டுகிறார். "நான் அந்தண குலத்தில் பிறந்தவன். செட்டியார் பெண்ணை எப்படி மணப்பது" என்று ஞான சம்பந்தர் கேட்க வில்லை.

"நான் இவளுக்கு உயிர் கொடுத்த தால் இவளுக்கு தந்தை ஆகிறேன். இவளை எப்படி நான் மணப்பது" என்று தான் கேட் கிறார். ஆகவே சாதி பேதங்கள் அப்போது இருக்கவில்லை.

சுந்தரமூர்த்தி நாயனார், பரவை நாச்சி யார் என்கிற தாசி குலப் பெண்ணை மணந்து கொள்கிறார். "பதியிலார் குலமகளிர்" என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். அந்த அளவுக்கு சாதிகளைப் பற்றிய சிந்தனை இல்லாதிருந்த காலம் அது.

திருநாவுக்கரசர் வேளாளர் குல மரபினர். அப்பூதியடிகள் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். இருவருமே சிவநெறிச் செல்வர்கள்.

அப்பர் அடிகள் என்று அழைக்கப்பட்ட நாவுக் கரசர்மீது அளவில்லாத ஈடுபாடு கொண்டவர் அப்பூதியடிகள். அவர் தன்னுடைய இல்லத் திற்கு எழுந்தருளியதை பெறற்கரிய பேறாக எண்ணி அவரை வரவேற்று உபசரித்து, அவர் காலில் விழுந்து வணங்குகிறார்.

அந்தணர் அல்லாத ஒருவர் காலில் அந்தணர் ஒருவர் விழுந்து வணங்குகிறார். மரியாதைக்குக் குறுக்கே சாதிகள் நிற்க வில்லை. சேக்கிழாரின் பெரியபுராணம் முழு வதும் இம்மாதிரிப் பல நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகிறது.

ஆகவே சைவ சமயம் சாதிகளைப் பெரிதாக ஒருபோதும் மதித்ததில்லை. அன்பு ஒன்றே மனிதர்களை இணைக்கக்கூடியது என்பதுதான் சைவ சமயத்தின் அழுத்தமான நம்பிக்கை.

**சாதிகள் இல்லையடி பாப்பா குல**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**

எனப் பாடினார் புரட்சிக்கவி பாரதியார்.

சாதிகள் இல்லையென்று நம் காலத்து பாரதியும் சொன்னான். அந்தக் காலத்தில் ஔவையாரும்கூட "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றுதான் பாடினார். எந்த இரண்டு சாதிகளை ஔவையார் குறிப்பிட்டார்?

**"இட்டார் பெரியோர் இடாதார்**
**இழி குலத்தோர்"** என்றார் ஔவையார்.

ஈகை குணம் கொண்டவன் உயர்ந் தவன். அது இல்லாதவன் தாழ்ந்தவன் என இரண்டு சாதிகள்தான் உண்டு என்று ஔவை யார் பாடினார்.

பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை இந்து மதத்தில் வந்த எல்லாப் பெரியவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

"பிறப்புக்கும் எல்லா உயிர்க்கும்" என்கிறார் வள்ளுவர். பிறப்பினால் அனைவரும் சமம் என்பது வள்ளுவர் கருத்து.

அதனால்தான் இந்துமதத்தில் அழுத்த மான நம்பிக்கை. வைத்திருந்த காந்தியடிகள் கூட தீண்டாமையை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார். ஹிரிஜனங்களுக்கு கோவில் களைத் திறந்து விடவேண்டும் என்று பெரிய இயக்கத்தையே நடத்தினார்.

இந்துமதம் ஒரு சமரச சன்மார்க்க மதம். வள்ளலாரும், "சாதி சமய வழக்கை விட்டே நல் சோதியைக் கண்டேனடி" என்று பாடினார்.

இந்து மதம் வர்ணாசிரம தர்ம மதம் அல்ல. சாதிப் பிரிவினைகள் ஏற்றுக் கொள்கின்ற மதம் அல்ல. அன்பைப் போதிக் கின்ற மதம். ஈகையினையும் இரக்கத்தினை யும் போதிக்கின்ற மதம்.

(தொடரும்...

## வீரமும் போராட்டமும்

பொதுவாக ஒவ்வொரு உயிருக்கும் இரண்டே இரண்டு அடிப்படைச் செயற்பாடுகள் இருக்கும். ஒன்று உயிர்த்திருப்பது. இரண்டு இனத்தைப் பெருக்குவது. அதற்காக தேவைப்படும் எதையும் செய்யவேண்டும் என்பதுதான் இயற்கையின் ஏற்பாடு.

ஓர் எறும்பைத் தொட்டால் அது இங்கும் அங்கும் ஓடும். அதற்கு, தான் உயிர்த்திருக்க வேண்டும் என்ற எண்ணம். கையால் பிடித்துவிட்டாலோ, அதன் சக்திக்கேற்ப இறுதி முயற்சியாகக் கடித்துவிடும். நாமும் அப்படித்தான், கோழையாக இருப்பவனாக இருந்தாலும், இழப்பதற்கு உயிர்தான் கடைசியாக இருக்கின்றது என்கிற நிலையில் எவனுக்கும் நிச்சயம் வீரம் வரும். போராடத்தான் செய்வான்.

# வாழ்வின் இலட்சியம்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

குறி இல்லாமல் அம்பை எய்தால் அந்த அம்பால் ஆபத்துக்களே விளையும். இது போன்றதே மனித வாழ்க்கையும். மனிதனாகப் பிறந்தவன் ஒரு உயர்ந்த இலட்சியத்துடன் வாழ வேண்டும். எமது அன்றாடக் கடமைகளை ஆற்றும்போது அவை எமது இலட்சியத்தோடும் பொருந்துமாறு நாம் அமைத்துக் கொண்டோமேயானால் நாம் புத்திசாலிகள்தான்.

எமது செயல்களின் பலாபலன்களை நாம் எமது இலட்சியத்துக்கே சமர்ப்பணம் செய்து விடுவோமேயானால், அவை எம்மைப் பெரிதளவில் பாதிக்கமாட்டா.

உயர் ஞானத்தைப் பெறுதல் எமது இலட்சியமாக அமைய வேண்டும். இத்தகைய இலட்சியத்தை நாம் எமது வாழ்க்கையோடு இணைத்துக் கொள்ளாவிட்டால் எமது வாழ்க்கை என்னும் தேரின் அச்சாணி உடைந்துவிடும்.

பணமும் பொருளும் மனித வாழ்வில் தேவைதான் அவசியம்தான் ஆனால் அவ்விரண்டையுமே நாம் பெரு நோக்காகக் கொண்டால் அவை எம்மை வெறும் பொருளாதாரப் பிராணியாக மாற்றிவிடும் ஆபத்து எமக்குண்டு. ஆகவேதான் நாம் எமது ஆன்மீக இலட்சியத் தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மனிதன் சிறிது சிறிதாக உலக இன்பங்களை அனுபவித்து பின் பக்குவம் அடையும் போது அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல அவன் சிந்தனைகளும் உலகத்தை விட்டுப் பறந்து மேல் நோக்கிச் செல்கின்றன.

பாடசாலையிலே ஆசிரியர் மாணவர்களின் தராதரத்தை அறிய அடிக்கடி பரீட்சைகளை வைக்கின்றார். அதேபோன்றுதான் இறைவனும் பக்தர்களை அடிக்கடி சோதனை செய்து பார்க்கிறார். மறுபக்கம் பார்த்தால் முக்காலமும் உணர்ந்த முழு முதல் மூலமூர்த்தி, சோதனை மூலமாக பக்தர்களின் உள்ளத்தை அறிய வேண்டுமா? என வினா எழலாம்.

அப்படியல்ல. பின்னர் இறைவன் நம்மை எல்லாம் சோதிப்பது எதற்காக? அது எமக்கு வாழ்க்கை அனுபவத்தைத் தரவே, வேறொன்றுக்குமாக அல்ல. நம்மை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்தவர்களுக்கு துன்பமும் இல்லை, துயரமும் இல்லை. தெய்வம் நம்மை வருத்துவதை உணர்ந்தவர்கள் தெய்வ சங்கற்பத்தின்படி நடந்து ஞானத்தின் ஏழுபடிகளையும் தாண்டி உயர்நிலை எய்துவர்.

இதற்கு நாம் உண்மை எது என்பதை உணர்ந்தாக வேண்டும். ஆணவம், பொறாமை, பேராசை என்பவற்றை முற்றாக நீக்கவேண்டும்.

உதாரணமாக, பாரதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பாரதத்தில் துரியோதனனின் நிலையைப் பார்ப்போம். கிருஷ்ண பகவானுடைய உயர் ஆற்றலை அறிந்திருந்தும் அவரோடு

*விசிறியை அசைக்காமல் காற்று வராது, வியர்வை சிந்தாமல் உயர்வு வராது.*

உறவாடும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தும் அவன் ஸ்ரீ ஹரிக்கு எதிர்மாறாகவே செயற்பட்டு, ஈற்றில் பகவானுடைய எதிரியாகவே மாறிவிட்டான்.

பகவானுக்கு எதிராகச் செயலாற்றும் துணிவு அவனுக்கு எங்கிருந்து வந்தது? அவனுடைய ஆணவத்தாலும், பேராசையாலுமே அவனுக்கு அந்தத் துணிவு ஏற்பட்டது. இவ்விரு கொடிய குணங்களாலும் அவனுடைய ஆட்சியும், அந்தஸ்தும் வாழ்வும் பறிக்கப்பட்டன.

எனவே, ஆணவத்திமிரும், பேராசையும் இருக்குமானால், துரியோதனன் கதைபோல் தான் எமது கதையும் முடியும்.

நாம் எமது முன்ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனாகவே எமக்கு பூவுலக வாழ்க்கை அமைகிறது. இறையிடம் எமக்கு எமது பூர்வீக பக்தி தோன்றுமேயானால் இந்தப் பக்தியையும் பக்தி உணர்வையும் நாம் ஞான அனுஷ்டானங்கள் மூலம் வளர்க்க வேண்டும். அப்போதுதான் இறைவன் அருளைப் பெறமுடியும்.

உதாரணமாக, பெரும்பாலான மக்கள் பிரதான தர்மத்தில் முயற்சி ஒன்றும் செய்யாமல் கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து, ஒரு தேவாரமும் பாடினால் போதும் கடவுள் ஆகா ஓகோ என்று காரியமெல்லாம் ஆக்கித் தரவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

களஞ்சியத்தில் இருக்கும் நெல்மணி அங்கே இருந்தபடி முளைத்துக் காய்த்து பலன் தர மாட்டாது. பண்படுத்திய நிலத்தில் அதனை விதைத்து, பசளையிட்டு, நீர் இறைத்து, களை அகற்றி பக்குவமாய் வளர்த்தால் தான் அது பலன் தரும்.

அதேபோன்றுதான் பக்தியும். எமது மனதின் அடியில் உறைந்திருக்கும் பக்தியை, பக்தி உணர்வை ஞான அனுஷ்டானங்களால் விழித்தெழ வைத்து விருத்தி செய்ய வேண்டும். இது என் தனிப்பட்ட கருத்தல்ல. சுவாமி கெங்காதர ஆனந்தாவின் கருத்தாகும்.

இறையை யாம் சரணாகதி அடைய வேண்டும். அவன் காப்பாற்றுவானா என்ற ஐயம் இன்றி அவனே சரணாகதி என்ற திடம் எமது மனதில் உறுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் இறைவன் இன்னருள் எமக்குக் கிட்டும்.

துச்சாதனன் பாஞ்சாலியைத் துயில் உரிந்தபோது ஒரு கையில் சேலையைப் பற்றியபடி மற்றைய கையை உயர்த்தியே அவள் கண்ணா! கண்ணா! என்று அலறினாள், உதவி கோரினாள். ஆனால் அப்போது கண்ணன் உதவிக்கு வரவேயில்லை. இறுதியில், அவள் தன்னிருகரங்களையும் உயர்த்தி நெஞ்சுருகி கதறியபோதே கண்ணன் தரிசனம் கொடுத்தான்.

இந்தவகையில், பாஞ்சாலி ஈற்றில் எய்திய தன்னை மறந்த நிலையில் கண்ணனைச் சரணாகதி அடைந்த பக்குவம் ஒருவனுக்கு வரும்போது தான் இறைவனது அருளாசிகள் அவனுக்குக் கிடைக்கும் என்பது திண்ணம்.

இறைவன் எமக்கு எல்லாம் தருவார் என்ற நம்பிக்கையை விட, எல்லாம் தந்திருக்கிறார் என்று நாம் உணரும்போதுதான், எமக்கு எல்லாமே கிடைத்தது போன்ற நிறைவு ஏற்படும் இல்லையா?

*உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே.*

# சைவமும் தமிழும் தழைத்தோங்க வரந் தருவாய்

– **திருமதி இந்திரா திருநீலகண்டன்** அவர்கள் –

வரந் தருவாய் முருகா!
நிதம் உனைத் தொழுவோரை
காத்து நிற்கும் குமரா
வரந் தருவாய் முருகா!

மறந்தேனும் உன்கழல்கள்
நான் மறவா வண்ணம்
நிரந்தரமாய் உறைந் திட்ட
அரனவனின் திருமகனே!

சிறந்தோங்கும் சந்நிதியில்
குடிகொண்ட வேலவனே
மேதினியில் தமிழினமும்
மேன்மையுடன் வாழ - வரம் தருவாய்

சூரபன்மன் செருக்கறுத்த
சுரி குழலாள் பாலகனே
வழியறியா தேங்கி நிற்கும்
எம் இனத்தைக் காத்திடுவாய்!

மேன்மை பெறு சைவநெறி
மேலோங்கிச் சிறந்திடவும்
தொன்மையான தமிழ்மொழியும்
தாரணியில் தழைத்திடவும் - வரந்தருவாய்

உன் தமிழின் பெருமைதனை
பாரிலுள்ளோர் புகழ்ந்திடவும்
சைவத்தின் மகிமை தன்னை
உலகறியச் செய்திடவும் - வரந்தருவாய்

இன்னும் வேண்டும் வரமொன்று
அனைத் தெலும் புள்நெக
ஆனந்தத் தேன் சொரியும்
மணிமணியான திருவாசகம் தந்த
மணிவாசக மாமணியும்

இன மலர்கள் போதவிழ்ந்து
மதுவாய்ப் பில்கி நனைந்தனய
திருவடி தன் தலைமேல்வைத்த
பேறு பெற்ற நாவுக்கரச ரும்

வான நாடனே வழித்துணை மருந்தே
யாரெனக் குறவு அமரர்களேறே
என்றரற்றி இணையடி கலந்த
சுந்தரச் செல்வனும்

ஞானப் பாலை யுண்டு
தோடுடைய செவியன் என்று
மழலை மாறாத் திருவாயால் பாடி
தமிழோடு விளையாடி ஈசனோடுறவாடிய
திரு ஞானசம்பந்தப் பிள்ளையும்

மீண்டும் இப்பூவுலகிலவதரித்து
நலிவுறும் போல்காட்சிதரும்
எம் இரு கண்கள் போன்ற
சைவத்தின் மேன்மையையும்
தமிழ்மொழியின் பெருமையையும்
காத்து ரட்சிக்க வருவதுமுன் கடனே!

மேன்மைபெறு சைவநெறி - எம்
உயிராம் தமிழ்மொழி
மேலோங்குக உலகமெலாம்
வாழ்க தமிழ்! வளர்க சைவம்.

# துளசியின் மகத்துவம்

– **செல்வி ச. வர்ணி** அவர்கள் –

விஷ்ணுவுக்கு மிகவும் பிரியமானது துளசி. துளசி இந்துக்களாகிய எம்மவரின் இல் முன்றலில் வைத்து வணங்கப்படும் தெய்வீகச் செடி. துளசியில் விஷ்ணு வாசம் செய்வதால் துளசி ஹனுமனது பாதங்களில் சமர்ப்பிக்கக் கூடாது. அதனை அவரது சிரசிலோ அல்லது மாலையாகவோ அணிவிக்க வேண்டும். இவ்விதம் தெய்வாம்சம் பொருந்திய துளசி தன்னுள் பல மருத்துவக் குணங்களினை அடக்கியுள்ளது.

மூலிகைகளின் தாய் மற்றும் ராணிதான் துளசி. இதில் வெண்துளசி, கருந்துளசி என இரண்டு இனங்கள் உண்டு. இதன் பயன்களை நோக்குவோம்.

- துளசி இலைகளைத் தினமும் உண்டு வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் வாழ்நாள் முழுவதும் வராது. வாய் துர்நாற்றத்தைப்போக்கும். ஜீரண சக்தியும் புத்துணர்ச்சியும் துளசி இலைமூலம் கிடைக்கின்றது.
- நமது உடலுக்கான கிருமிநாசினியாக துளசியை உட்கொள்ளலாம். துளசி இலையைப் போட்டு ஊறவைத்த நீரைத் தொடர்ந்து பருகி வந்தால் சர்க்கரை நோய் நம்மை அண்டாது.
- சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் துளசி விதையை நன்கு அரைத்து உட்கொண்டு வரவேண்டும். அத்தோடு துளசி மணிமாலை அணிவதால் அதிலிருந்து மின் அதிர்வுகள் ஏற்பட்டு நம்மைப் பல நோய்களிலிருந்து காக்கின்றது.
- துளசி இலையை இடித்துப் பிழிந்து அந்தச் சாற்றுடன் சிறிதளவு கற்பூரம் கலந்து பல் வலியுள்ள இடத்தில் பூசிவர பல்வலி குறையும்.
- எந்தவித வைரஸ் தாக்குதலும் ஏற்படாமல் தடுக்கக்கூடிய வல்லமையும் துளசிக்கு உண்டு.
- வெட்டுக்காயங்களுக்குத் துளசி இலைச்சாற்றைப் பூசி வந்தால் அவை விரைவில் குணமடையும்.
- துளசி இலைகளை எலுமிச்சைச் சாறுவிட்டு நன்கு மைபோல் அரைத்து அதனைத் தோலில் தடவி வந்தால் பல நாட்களாக இருக்கும் படை, சொறி, சிரங்குகள் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்துவிடும்.
- துளசிச்சாறு 200மி.லீ எடுத்து சம அளவு தண்ணீரில் கலந்து அடுப்பேற்றி சற்று சூடானவுடனே போதியளவு சீனியை அதில் கலந்து காய்ச்சி ஆற வைத்தபின் அருந்தினால் தேகத்தில் பலம் ஏறும்; இரத்தம் விருத்தியடையும்; கண்பார்வை தெளிவடைந்து அறிவு வளர்ச்சி மேன்மையுறும்.

- துளசிச்சாறு, எலுமிச்சைச்சாறு இரண்டையும் சேர்த்து சூடாக்கி அதில் தேன் கலந்து உணவுக்குப்பின் குடித்து வந்தால் அதிகப்படியான எடை குறையும்.
- துளசி இலை ஒரு கைப்பிடி, மிளகு, அறுகம்புல் ஒரு கைப்பிடி மூன்றையும் வெந்நீர் ஊற்றி ஊற வைத்து பின் அந்நீரை வடிகட்டி அதில் தேன்கலந்து குடித்தால் காய்ச்சல் குணமாகும்.
- ஐந்தாறு துளசி இலைகளுடன் சிறிய இஞ்சித் துண்டையும் சேர்த்து ஒன்றாய் மென்று விழுங்கி உடனே வெந்நீர் அருந்த சளி, இருமல் குணமாகும்.
- துளசிச் சாற்றை மிளகுச் சாறுடன் கலந்து குடித்தால் நரம்புத்தளர்ச்சி நீங்கும்.
- துளசி இலைகளை தேங்காய் எண்ணெய் சேர்த்து அரைத்துப் புண்கள்மீது தடவினால் அது விரைவில் ஆறும்.
- துளசியின் விதைகளை உலர்த்தி தூள் செய்து 1-2 கிராம் அளவு, இரவில் காய்ச்சிய பசுப்பால் 200மி.லீ கலந்து குடித்து வர உள்மூலம் குணமாகும்.
- கருந்துளசியுடன் கஸ்தூரி மஞ்சள் சேர்த்து அரைத்து உடல் முழுவதும் பூசிக் குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.
- பசுப்பால் குடிப்பதால் சளித்தொல்லை அதிகரிப்பதாகக் கூறுவர். பசுப்பால் காய்ச்சும்போது 5,6 துளசி இலைகளையும் 3 மிளகையும் சேர்த்துக் காய்ச்சிப் பருகினால் சளித்தொல்லை ஏற்படாது. நல்ல ஊட்டச்சத்தும் கிடைக்கும்.
- இருதய பலவீனம் உடையவர்கள் 20 சொட்டுத் தேனும் 7 சொட்டுத் துளசிச் சாறும் சிறிது நீரில் கலந்து காலை, மாலை என ஆறு வாரங்கள் சாப்பிட இருதயம் பலமடையும்.
- கருந்துளசிச்சாறு, இஞ்சிச்சாறு, தேன் மூன்றையும் சம அளவு எடுத்து கலந்து குடித்தால் இடுப்புப் பிடிப்பு உடல்வலி குணமாகும்.
- துளசிச் சாற்றை ஒரு செம்புப் பாத்திரத்தில் இரவு முழுவதும் வைத்திருந்து அதிகாலையில் அதில் எலுமிச்சைச் சாறு கலந்து குடித்தால் பித்தம் தொடர்பான நோய்கள் தீரும்.
- துளசி, வில்வம் இலைகளை இடித்து அதன் சாற்றுடன் நல்லெண்ணெயைக் காய்ச்சி அதனை உள்நாக்கு வளர்ந்திருந்தால் தலையிலும் தொண்டையிலும் பூசிவர நல்ல பயனைத் தரும்.

இவ்விதம் நாம் எமது வீட்டு முற்றத்தில் பூஜிக்கும் துளசியில் இத்தனை மருத்துவக் குணங்கள் இருப்பது வியக்கவல்லது. இதனைப் பின்பற்றி நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழ்வோம்.

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...)

– **செல்வி சி. நிலா** அவர்கள் –

எமது பயணத்தின் ஆரம்பகட்டமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனை வணங்கி அதன் பின்பு தில்லையம்பலப் பிள்ளையாரை வழிபடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. தில்லையம்பலப் பிள்ளையாரது ஆலயம் இருக்கின்றது என்று அறிந்திருந்தேனே தவிர ஒரு காலமும் அந்தப் பக்கம் போனதே இல்லை. எனது தந்தையார் மாடு வளர்ப்பதால் தவறாது அவ் ஆலயத்துக்குப் பால், தயிர் கொண்டுபோய் வழங்குவது வழமை. அதன்பிரகாரம் ஆலயம் பெரிய கட்டிட அமைப்போடு விளங்கும் என்ற எனது எண்ணத்திற்கு மாறாக ஆலய வளாகத்தைப் பார்த்தபொழுது இச்சிறிய ஆலயம் பிரசித்தி பெற்று விளங்குவதற்கு அவ்வாலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பிள்ளையாரது மகிமையே காரணம் என்பதை உணரக்கூடியதாக இருந்தது. பேருந்தில் பயணித்த அனைவரும் நாம் ஆரம்பித்த யாத்திரை எவ்வித இடையூறுமின்றி நடக்கவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் கூடிய வழிபாடாகவே அமைந்தது.


இவ்வழிபாட்டினை முடித்து எமது பேருந்து சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது. அங்கும் எமது பிரார்த்தனையுடன் கூடிய வழிபாட்டை முடித்து பேருந்தில் ஏறியவுடன் நாம் அனைவரும் முல்லைத்தீவில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தையும் தரிசிப்போம் என்று ஐயா கூறவும் அப்பாதை வழியே எமது பேருந்து பயணித்தது. யாத்திரையில் ஈடுபட்ட அனைவருக்கும் அம்மனைத் தரிசிப்பதில் ஆர்வம் மேலிட, எப்போது ஆலயத்தை அடைவோம் என்ற ஆவலுடன் எமது பிரயாணம் தொடர்ந்தது. முல்லைத்தீவு முள்ளியவளையை அடைந்து, ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயத்தை வழிபடுவதற்காக நாம் அனைவரும் பேருந்தில் இருந்து இறங்கியபொழுது அம்மனைத் தரிசிக்கும் முன் இப்பிள்ளையாரை தரிசித்ததன் பின்புதான் அம்மனைத் தரிசிக்க வேண்டும் என்று ஐயா கூறியதன் பிரகாரம் நாம் அனைவரும் வழிபாட்டில் ஈடுபட்டோம். அங்கேயும் ஒரு புதுமையைக் கண்டோம். ஆலயத்திற்கு சமீபமாக ஐந்து சிறு கிணறுகள். ஆனாலும் கிணறுகள் என்று சொல்ல முடியாது. திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று அமைந்ததுபோல சிறு தொட்டி அளவில் காணப்பட்டது. அதிலிருந்து நீர் பொங்கிப் பிரவாகித்து வழிந்துகொண்டே இருக்குமாம். நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்பின்பு நீர் பொங்கிப் பிரவாகிப்பது குறைந்துவிட்டது என்று அங்குள்ள பெரியோர்கள் எமக்குக் கூறினார்கள். நீர் பொங்கிப் பிரவாகிக்கும் காரணத்தினால்த்தான் அவ் விநாயகர் ஆலயத்திற்கு ஊற்றங்கரைப் பிள்ளையார் என்ற நாமம் வழக்கிலுள்ளது. இவற்றைப் பார்வையிட்டு பிள்ளையாரையும் வணங்கி

நாம் அனைவரும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தோம். ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோதுதான் ஆலயத்தின் பிரமாண்டமான கட்டிட அமைப்புக்கள் எம்மைப் பிரமிக்க வைத்தது. பெருஞ் செலவில் அப்பணியை ஆரம்பித்துள்ளார்கள். யாத்திரையில் ஈடுபட்ட அனைவரும் ஆலய திருப்பணிக்காக தங்கள் தங்கள் வசதிக்கேற்ற படி நிதி அன்பளிப்பு வழங்கி அம்மனது பூசை வழிபாட்டில் கலந்து பெரும் மனநிறைவை அடைந்தோம். எம்மோடு வந்தவர்களில் அநேகம்பேர் வற்றாப்பளை அம்மன் ஆலய தரிசனம் முதன்முறையாக அமைந்த காரணத்தால் அவர்களது மனமகிழ்வு சொல்லும் தரமன்று. ஆலய தரிசனத்தை முடித்து நாம் பேருந்தில் கொண்டுவந்திருந்த தாக சாந்திக்குரிய பொருட்களை எடுத்துக் கரைத்து அத்துடன் பிஸ்கற்களையும் எடுத்துப் பகிர்ந்து எமக்குரிய பிரயாணச் சோர்வை நீக்கி பிரயாணத்தைத் தொடர்ந்தோம். எமக்குரிய மதிய உணவை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவர்களும், வவுனியாவில் சிவசக்தி எனும் வர்த்தக நிலையத்தை நடத்தி வருகின்ற திரு சண்முகராஜா குடும்பத்தினர் தமது வீட்டில் ஒழுங்கு படுத்தி இருந்தார்கள். அவர்களது வீட்டை அடைந்து எமது மதிய உணவினை முடித்து அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து எமது பிரயாணம் தொடர்ந்தது. இவ்விடயம் எனது முதல் யாத்திரையின்போது இடம்பெற்றது. ஆனால் வருடா வருடம் தொடர்ந்து வரும் யாத்திரையின்போது மதிய உணவினை



*ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது.*

அக் குடும்பமே தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் நாம் உணவருந்தும் இடம்தான் மாறிவிட்டது. ஆரம்ப காலத்தில் வவுனியாவில் அவர்களது வீட்டில் இடம்பெற்ற இச்செயற்பாடானது இப்போது ஓமந்தையில் அமைந்திருக்கும் பொற்கோயில் என்று அழைக்கப்படும் அரசகேசரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெறுகின்றது.



ஓமந்தையில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் அளவில் 15,20 ஏக்கர் விஸ்தீரண முள்ள காட்டுப் பகுதியில் பல வருடங்களுக்கு முன் ஒரு சிறு கொட்டிலில் இருந்த கண் ணகை அம்மன் அருளால் இன்று பொற் கோவில் என்று கூறுமளவிற்கு புனருத்தாரணம் செய்து கோபுரத்துடன் கூடிய ஆலயமாக விளங்குகின்றது. இவ் ஆலய நிர்வாகத்தை திரு சண்முகராஜா அவர்கள் பொறுப்பேற்ற தன் காரணமாக ஆலய வளாகத்திலே எம்மை வரவழைத்து ஆலய தரிசனத்துடன் கூடிய எமது மதிய உணவை வழங்கி வருகின்றார். ஐயாவும் வருடா வருடம் யாத் திரையில் ஈடுபடும் போதெல்லாம் வரும் அடி யார்களை அழைத்துச் சென்று கண்ணகை அம்மனையும் வழிபட்டு மதிய உணவினை வரும் அடியார்களுக்கு வழங்குவது வழமை யான செயற்பாடாகவே மாறிவிட்டது. கதிர்காம உற்சவம் ஆரம்பித்தவுடன் அவர்களே ஐயாவுடன் தொடர்பை ஏற்படுத்தி நாம் வரும் நாளை அறிந்து அன்றைய தினத்தில் இந்த ஏற்பாட்டை செய்துவருவதுகூட கதிர்காமக் கந்தனது திருவருள் என்றே கூறவேண்டும். உண்மையில் பொற்கோவில் தரிசனம் போற் றப்படக்கூடியதே.

ஆலய நிர்வாகத்தை பொறுப்பேற்ற முதல் வருடத்திலே நாம் ஆலயத்திற்குப் போனபொழுது திரு சண்முகராஜாவும் ஆலய பூசகரும் எமது குழுவை வரவேற்று பூசை வழிபாடுகள் முடிந்த உடன் ஐயா அவர் களுக்கு அம்மன் வீற்றிருக்கும் மூலஸ்தானத் தில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமை இன்றும் எனது மனக்கண்ணில் நிழலாடுகிறது. போகும் இடமெல்லாம் ஐயா கௌரவிக்கப் படுவதன் காரணமாக பூவோடு சேர்ந்த நாரும் சிறப்புப் பெறுவதுபோல எமக்கும் அந்தப் பலன் கிடைக்கின்றது. அதுவும் சந்நிதி வேலவனது கருணை என்றே கூறவேண்டும்.

(தொடரும்...

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

04.10.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தன் பெருமை"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

---

11.10.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

18.10.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

25.10.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளியீடு

262ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. கைலைநாதன் அவர்கள்

[ஆசிரியர், யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்]

மதிப்பீட்டுரை :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

[சைவப்புலவர்]

பதிவு இல: QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

